www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

பக்கம் 20

தினமுரசு வாரமலர் ஜூன் 07-13,1998 ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 260



## தகர்ந்துவரும் கட்டுப்பாடு

## தூதுபோன தமிழ்க்கட்சி

## மேயர் கொலை புதிய தகவல்



## சூர்யாவின் சினேகிதி

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## ஆம், ஆச்சரியம்தான்!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

பாரிஸ் மாநாட்டில்
இலங்கைக்கான உதவி
குறைக்கப்பட்டுள்ளது!

எனினும் 'தற்போது
கிடைத்திருப்பதுகூட
வெற்றியே!' என்று
நீதியமைச்சர் கூறியுள்ளார்.

அவரது கூற்றிலும்
நியாயம் இருக்கிறது!
ஆச்சரியமும் தொனிக்கிறது!

அரசியல் தீர்வு
என்பது எட்டாக்கனியாகி,
இராணுவத் தீர்வு முயற்சி
முனைப்படைந்துள்ளது!

மனித உரிமை முழக்கங்கள்
அர்த்தமற்றவையாகி
தமிழ் பேசும் மக்கள்
அன்றாட அவலங்களுக்கு
உள்ளாகி வருகின்றனர்!

இந்த ஆட்சியில்தான்
மிக அதிகமான தமிழர்கள்
காணாமல் போயுள்ளனர்!

மிக அதிக எண்ணிக்கையில்
மக்கள் இடம்பெயருவதும்,
தமிழ் மக்களின்
முக்கிய நகரங்கள்
தரை மட்டமாகியதும்
இந்த ஆட்சியில்தான்!

குடிமக்கள்-அவர்களது
குடியிருப்புக்கள்,
நகரங்கள், கிராமங்கள்
போன்ற எதுவும்
கணக்கில் எடுக்கப்படாமல்
இராணுவ நகர்வுகள்
நடந்து வருவதும்
இந்த ஆட்சியில்தான்!

இவ்வாறாக,
இராணுவத் தீர்வில்
இன்றைய ஆட்சியாளரின்
நம்பிக்கையானது
உள்ளங்கை நெல்லிக்கனியான
பின்னரும்- இந்தளவாயினும்
உதவி கிடைத்திருப்பது
அமைச்சருக்கே
ஆச்சரியமாக இருக்கும்தான்!

தற்போது கிடைத்துள்ள
நிதியில் பெரும்பகுதி
வடக்கு-கிழக்கு
அபிவிருத்திக்கு என்றே
பெறப்பட்டுள்ளது!

ஆனால், போருக்காகவே
அந்த நிதி
பயன்பட்டாகவேண்டும்
என்பது இரகசியமல்ல!

யாழ் உள்ளூராட்சித் தேர்தல்
பற்றியும்,
இன்று சிவில் நிர்வாகம்
மலர்வதாகவும்
பாரிஸ் மாநாட்டில்
நீதியமைச்சர் கூறியுள்ளார்.

இராணுவ அதிகாரிகளது
அனுமதி இல்லாமல்
யாழ் குடாநாட்டில்
ஓர் அணுவும் அசையாது!

திருமலையில்
நகரசபை கட்டிய
பொதுச் சந்தையை
திறக்கக்கூட
பிரிகேடியர் தடுக்கிறார்!

வடக்கு-கிழக்கு
சிவில் நிர்வாக
இலட்சணங்களுக்கு மேலும்
பல உதாரணங்கள் உள்ளன!

வடக்கு-கிழக்கில்
இன்று இராணுவ நிர்வாகமே
அமுலில் உள்ளது என்பதில்
யாருக்கும் சந்தேகம் இல்லை!

கொழும்பு கைதுகள்
பற்றியும் அமைச்சர்
பிரஸ்தாபித்துள்ளார்!

கூட்டணி பங்குகொண்ட
மனித உரிமை ஆணைக்குழு
விசாரணை நாடகம்
அமைச்சருக்கு உதவியுள்ளது!
"கைதுகள் விடயத்தில்
தகுந்த அறிவுறுத்தல்கள்
அதிகாரிகளுக்குத் தரப்பட்டுள்ளன"
என்று அமைச்சர்
உதவி வழங்கும்
நாடுகளுக்கு உத்தரவாதமளித்தார்!

ஒரு பானைச் சோற்றுக்கு
ஒரு சோறு பதம்.

அமைச்சர் பாரிஸ்
மாநாட்டில் உரையாற்றியது
மே 26ம் திகதி!

அதே நாள் நள்ளிரவில்
கொழும்பில்
தமிழர் குடியிருக்கும்
பகுதிகள் பல
சுற்றிவளைக்கப்பட்டன!
முப்பதுக்கும் மேற்பட்டோர்
பிடித்துச் செல்லப்பட்டனர்!

ஆக, எல்லாமே
நாடகங்கள்தான்!
நாக்கில்
இனிப்பு தடவிப்பேசும்
வசனங்கள்தான்!

தமிழ்க் கட்சிகள் பல
அரசின் அபிவிருத்தி நாடகத்திலும்
மனித உரிமை முழக்கங்களிலும்
பங்கெடுத்து ஒத்துழைப்பதால்
உலகம் ஏமாறுகிறது!

தமிழ்க் கட்சிகள் மட்டும்
சரியான நிலைப்பாட்டை
மேற்கொண்டிருந்தால்,
பாரிஸில் கிடைத்த நிதியில்
பாதியாவது கிடைத்திருக்குமா
என்பது சந்தேகமே!

பாரிஸ் மாநாடு
அரசுக்கு வெற்றியானால்,
அந்த மகிழ்ச்சியை
தமிழ்க் கட்சிகளுடனும்
அமைச்சர் பகிர்ந்து கொள்வாராக!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## வாழ்வழிகாட்டும் தர்ம நியாயங்கள்

மனிதன் நேர்மையாகவும், ஒழுக்கமாகவும் வாழ்வதற்கு நம்முடைய முன்னோர்கள் வழிமுறைகளைச் சொல்லி வைத்திருக்கிறார்கள். அவைதான் தர்ம நியாயங்கள் என்பவை ஸ்ருதி (வேதங்கள்), ஸ்மிருதி, புராணம், இதிகாசம் போன்றவை நன்மை எது, தீமை எது, என்பதை விளக்கிச் சொல்லியிருக்கின்றன. தர்க்க சாஸ்திரம் தவிர யக்ஷப் பிரஸ்னம், நியாயசாஸ்திரம், மீமாம்ஸம் போன்ற தர்ம சாஸ்திரங்களும், மனிதன் மன அமைதியோடு வாழ வழிவகைகளைக் கூறியிருக்கின்றன.

'தர்மரக்ஷிரக்ஷி' தஹ என்ற வேதவாக்கினால் தர்மத்தை காப்பாற்றுகின்றவன் தர்மத்தினால் காப்பாற்றப்படுவான் என்ற உண்மை புலனாகிறது. இந்த தர்மநியாயங்கள் எல்லாம் ஒரு கால கட்டத்திற்காக மட்டுமே சொல்லப்பட்டதல்ல. காலங்கள் மாறினாலும் தர்ம நெறிகள் மாறாது. தர்மங்களில் பல வகையான தர்மங்கள் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. அவை குல தர்மம், இஷ்டதர்மம், தேசதர்மம் என்பவையாகும்.

ஒவ்வொரு மனிதனும் தன் பிறப்பை அனுசரித்து சில குல ஆசாரங்களையும், தர்மங்களையும் அனுஷ்டானம் செய்ய வேண்டும் என்பது விதி முறை. ஆனால் பல்வேறு விதமான தொழிலை நாம் மேற்கொள்ளும்போது அந்தத் தொழிலுக்குரிய தர்மங்களை கடைப்பிடிக்க வேண்டிய நியதி உண்டாகிறது. அதையே இஷ்டதர்மம் என்று சொல்லுகிறோம். ஒவ்வொரு நாட்டிற்கும் தனிப்பட்ட அரசியல் சாசனமும், சட்ட திட்டமும் உண்டு. அவற்றை மதித்து அவற்றிற்கு கட்டுப்பட்டு நடப்பதே தேசதர்மம்.

மனிதன் நேர்மையாகவும், ஒழுக்கமாகவும் வாழ்வதற்கு தர்ம நியாயங்கள் உதவுகின்றன.

தொகுப்பு: அ. அச்சுதன்-சேனையூர்.



## அர்ஷுடைய நிழலில் இருப்போர்!

1. நீதி நேர்மையோடு ஆட்சி புரிந்த அரசன்.
2. இறை வணக்கத்திலே வளர்ந்த இளைஞன்.
3. தனித்திருந்து இறைவனை நினைத்து உருகி அழுதவர்.
4. இடக்கரம் அறியாவண்ணம் வலக்கரத்தால் தர்மம் செய்தவர்.
5. பசிதாங்கமுடியாமல் பட்டினியால் மரணித்தவர்.
6. கவலை உடையோரின் கவலையை நீக்கியவர்.
7. ஜிஹாதிற்கு செல்வோருக்கு உதவி செய்தவர்.
8. குர்ஆனை மனனம் செய்து அதன் போதனைப்படி வாழ்ந்தவர்.
9. நண்பர்களின் சுக-துக்கங்களில் பங்குபற்றியவர்.
10. இறைவனின் அச்சத்தால் உருகி உருகி மெலிந்தவர்.
11. நற்குணமும் நல்லொழுக்கமும் உடையவர்.
12. தனக்கு விருப்பம் உள்ளதையே பிறருக்கும் விரும்புகிறவர்.
13. நோயாளிகளிடம் சென்று சுகம் விசாரிப்பவர்.
14. குர் ஆனை திருத்தமாகக் கற்றுக் கொடுப்பவர்.
15. ஜனாஸாவுடன் சென்று அடக்கம் செய்யும் வரை இருப்பவர்.

நஸீர் எம்.அஸ்ரிப்-எருக்கலம்பிட்டி-08.

## கவிதைப் போட்டி இல.257

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:



### யாருக்கு....?

ஆள் இல்லா ஊரில்
யார் பசியை தீர்க்கும்-
இந்தப் பொதி...?

செ. சுகுமார்-மாங்கேணி

### நிம்மதி தேடி

ஷெல்லடி பட்டு,
பொல்லடி தாங்கி,
சொல்லடி கேட்டு,
நிம்மதி தேடி,
போகின்றாளோ?

ரூபஸ்-தலவாக்கெல்லை.

### வேண்டாம்

அம்மையார் சுமக்கும்
பொதி-
யானைப் பசிக்கு
சோளப் பொரி.
காத்திருந்தால்
நாம் ஆவோம்
இலவு காத்த கிளி!

அ. சதீஸ்-உவர்மலை, திருமலை

### அதுவல்ல!

இது
மெய்யான பொதி!
நாளொரு வண்ணம்
தேயாது !
பேரினவாதம் இதை
மேயாது !
இது
தீர்வுப் பொதியல்ல!

பொ. வண்ணன்-
பெரிய போரதீவு, மட்டக்களப்பு.

### பொறி

பொதிபோல் தெரியும்!
உள்ளே-
பொறி இருக்கும்!
பூப்போல் தெரியும்...
உள்ளே-
பூ நாகம் இருக்கும்!
நம்பினார் கெடுவர்
சர்வ நிச்சயம்!

ச. பூமணி-கொழும்பு-14

### சோதனைச் சுமை!

சோறு போடும் பொதியை
தலை மீது சுமக்கிறேன்;
சோதனை போட்டு இதனையும்
தரை மீது சிதறு வீரோ!?

செல்வி ப்ரியநேசி-களுத்துறை(தெற்கு)

## கவிதைப் போட்டி இல.260



(படப்பிடிப்பு:-கொட்டராமுல்லை .·.பாருக)

கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 13.06.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.260, தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

### பரிசுக்குரிய கவிதை

#### சின்ன ஆசை!

காணி நிலம் வேண்டும்-கிணற்றுடன்
ஆனி வெயிலுக்கும் வற்றாதிருக்க வேண்டும்!
காய்க்கும் தென்னை மரங்களும் வேண்டும்!
ஆயுதக்காரர்கள் அபகரிக்காதிருக்க வேண்டும்!

புனிதா கருணாகரன்-திருகோணமலை.

### 'கானல் நீர்'

கருக்கொண்ட வான் மேகம்
நிலம் நனைக்கும் அமுத நீரால்,
உருக்கொண்ட போர் மேகம்
களம் நனைக்கும் செந்நீரால்,
வரவிருக்கும் 'பொதி'ச் சுமையோ
மனம் மயக்கும் 'கானல் நீ'ரால்!

அ. சந்தியாகோ, கண்டி.

### எ(இ)தற்கு!

தென்னை மரங்கள் எதற்கு?
மானிடர் பயன் பெறுவதற்கு!
தலைமேல் சுமை எதற்கு?
வாழ்க்கை படகை ஓட்டுதற்கு!
தமிழ்க் கட்சிகள் எதற்கு?
பார்த்துக் கொண்டிருப்பதற்கு!

அ.யாழினி-மட்டக்களப்பு.

### தேவைதானா?

போர் வேறு புசிக்கிறது;
இயற்கை-அதன் சீற்றம்
அதனோடும் போராட்டம்!
யாரை நாம் நோவோம்?
யார்க் குரைப்போம் எம் நிலமை?
என்ன தலை யெழுத்தோ?
எம் கதியே இது தானோ?

தர்சிக்கா கனகசிங்கம்-மட்டக்களப்பு.

### பறக்கும்!

செல்கின்றார் அம்மையார்;
தீர்வுப் பொதியைச் சுமந்து,
சற்று நொடி நகர்ந்து சென்று
பறக்க விடுவார் காற்றினிலே!

யூ. நவாஸ்-ஒபேசேகரபுர, ராஜகிரிய.

### மீள்குடியேற்றம்

பாவையவள் மீள்குடி வந்து
தேடுகிறாள் வீட்டை:
பாவியவனும் தென்னையிலேறி
தேடுகிறான் வீட்டை!

க. பரா-யாழ்ப்பாணம்.

## வாசக(ர்)சாலை

அன்பு முரசே,
நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் வெகு ஜோர். அதிலும் 'இடி அமீன்'- அப்பப்பா பிரமாதம். உன் பணிதொடர எங்கள் வாழ்த்துக்கள்!

ஆர். இந்திரா,
எம் கோதை, பசறை.

பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்பார்கள். 'இடி அமீனி'ன் இடியை கண்டால் இதயமும் நடுங்கி விடும். 'பூலான் தேவி'யின் தொடர்கதைக்குப்பின் தினமுரசு எங்களுக்குத் தந்த 'இடி அமீன்' தொடர் அருமை.

எம்.ஐ.எம். இஸ்ஹாக்,
மானாம்பொட, உக்குவலை.

அன்பு முரசே!
'நந்தினி 440 வோல்ட்' வர வர வோல்ட் அதிகமாகிக் கொண்டு போவதுபோல் தெரிகிறதே. முரசுக்கு எனது வாழ்த்துக்கள். கூடவே 'கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்' அவர்களுக்கு என்னுடைய மனம் நிரம்பிய பாராட்டுக்கள்!

எஸ். ஸ்ரீஹரன், ஹப்புத்தளை.

வாஜ்பேயிக்கு சபாஷ் போட்டு, அமெரிக்காவுக்கு நாலு குட்டுப் போட்டதற்கு நன்றி. அமெரிக்கா என்றென்றும் மானிட குல எதிரியே!

இ. ராகவன், கொழும்பு-06.

என்றும் இனிய முரசே!
நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் என் மனதை கவர்ந்தவை. அதில் மிகவும் என்னை கவருவது அற்புதன் எழுதும், 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை', நாரதரின், 'எக்ஸ்ரே ரிப்போர்ட்'. மற்றும் முரசு சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பரோ சூப்பர்.

ச. கிருபா, ஜேர்மனி.

அறிவுக்கு விருந்தாக பல ஆக்கங்களை அள்ளி வழங்கும் என் இனிய தினமுரசே! 'திருமறை தரும் பொதுநெறி', 'வாரம் ஒரு தாடு', 'பாப்பா முரசு' படிக்கும்போது என் மனம் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கிறது. இருந்தும் தமிழர்களுக்கு ஒரு விடிவு காலம் வராதா? என ஏங்குகிறேன். உன் சேவை தொடரவேண்டுமென வேண்டுகிறேன். என் வாழ்த்துக்கள்.

எம். சந்திராதேவி, வெயாங்கொடை.

இனிய முரசே!
'இடி அமீனி'ன் விறுவிறுப்பான-மனதை உலுக்கும் தொடர், இளவரசி டயானாவின், 'கண்ணீரில் கரைந்த இரவுகள்', 'மேக்கப் புன்னகை' அனைத்து அம்சங்களும் சூப்பர்.

சர்மிளா
இரத்தினசிங்கம், மந்துவில்.

'தமிழ்க் குழுக்களே சிந்தியுங்கள்!' ஒரு தமிழ் மகனின் குமுறல். தமிழ்க் கட்சிகளுக்கு நல்ல எழுத்தடி. இதைப் பார்த்தாவது தமிழ்க் கட்சிகள் திருந்தட்டும். வவுனியாவை சேர்ந்த மு. செல்வராசாவுக்கு எனது மனமார்ந்த நன்றி.

எஸ்.எஸ். பாண்டின், தெஹிவளை

### நேர்த்தி

இந்தியாவின் அணுக்குண்டு பரிசோதனையை வரவேற்று 'முரசு' தீட்டிய தலையங்கம் அருமை! இராஜதந்திரியின் அலசலும் வெகு நேர்த்தியாக இருந்தது. பாராட்டுக்கள்!

கி. யேசுதாசன், வத்தளை.



### சி.ஐ.ஏ. மோப்பம்

சி.ஐ.ஏ.யின் சதி பற்றி முரசு 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' வெளியிட்ட தகவல்கள் பிரமாதம்! நீண்ட காலமாக எல்லோரும் கொடிய சி.ஐ.ஏ.யை மறந்திருந்தோம். நாரதர் ராசியோ என்னவோ, 'எக்ஸ்ரே ரிப்போர்ட்'டில் சி.ஐ.ஏ. பற்றி வந்த மறு வாரமே இந்திய அணுக்குண்டு விவகாரத்தில் சி.ஐ.ஏ.யின் பெயர் அடிபடத் தொடங்கியது. இந்தியா அணுக்குண்டு சோதனை செய்யப்போவதை முன்கூட்டியே அறியாமல் போனதற்காக சி.ஐ.ஏ.மீது பாய்ந்துள்ளார் கிளின்ரன் எனச் செய்தி வந்தது. சி.ஐ.ஏ. இந்தியாவை மோப்பம் பிடிக்கிறது என்பது உண்மையாகி விட்டதல்லவா! நாரதரே! உமது கணிப்புக்கு காலமும் கைகொடுத்து உதவுகிறது. அதனால்தான் சிலருக்கு (குறிப்பாக டமில் கட்சிகளுக்கு) பலத்த எரிச்சல் போலிருக்கிறது.

கி. அருணகிரி, வவுனியா.

### மாற்றம் அல்ல நடிப்பு

முரசுக்கு;
இங்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்னும் கட்சியினர் சாத்தான் வேதம் ஓதுவதுபோல அறிக்கைகள்விட்டு வருகின்றனர். புலிகள் தான் தமிழ் மக்களின் பேரம் பேசும் பலம் என்பதை எமது ரியூட்டரியில் (அரியாலை) கூட்டம் நடத்திய சுரேஸ் பிரேமச்சந்திரன் ஏற்றுக்கொண்டிருந்தார். புலிகளை ஒழித்துக் கட்ட இந்தியப் படையுடன் கைகோர்த்து நின்றவர்கள், புலிகளை பலமான சக்திகள் என்று ஏற்பது மனமாற்றம், நல்லதொரு அறிகுறி என நம்பினோம். அவ்வாறான மாற்றம் வரவேற்கக்கூடியதே. ஆனால் அது வெறும் நடிப்பு. இப்போது புலிகளை சாடி அறிக்கை விடுகிறார்கள். அடுத்த தேர்தல் வரும்போது என்ன சொல்கிறார்கள் பார்க்கலாம்.

எஸ். சிவபாலன், அரியாலை-யாழ்.

### பாராளுமன்றம் பயன்தருமா?

அன்பு முரசுக்கு;
பாராளுமன்றத்தில் வீர முழக்கமிட்டால் விடிவு ஏற்படும், மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்று ஏமாற்றவே தமிழ்க் கட்சிகள் முயலுகின்றன. தங்கள் உறுப்பினர்களையும் அவ்வாறு நம்பவைக்கின்றன. பாராளுமன்றப் பதவிகளை வைத்து பாராளுமன்றம் எத்தனை போலியானது என்பதை அம்பலப் படுத்தி, போராட்டங்களில் மக்களது நம்பிக்கையை ஏற்படுத்துவதே புரட்சிகர சக்திகளது கடமை. ஆனால் அடுத்த தேர்தலிலும் பதவியை தக்கவைக்க சிலரும், பதவியைப் பிடிக்க சிலருமாக பாராளுமன்றம் தொடர்பான தவறான நம்பிக்கைகளை ஏற்படுத்த முற்படுகின்றார்கள். 'முரசு' இதனை தெளிவாக்க வேண்டும். இராஜதந்திரி கவனிப்பாரா?

கோ. சுப்பிரமணியம், (முன்னாள் கம்யூனிஸ்ட்).

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

# மலையகத்தில் பரவலான குண்டு வெடிப்புக்கள்
# புலிகளது நடவடிக்கைகள் தொடரும் அறிகுறி

**கொ**ழும்பு தெஹிவளையில் 28.05.98 அன்று அதிகாலை நடைபெற்ற குண்டு வெடிப்புக்கு புலிகளே காரணம் என்று தெரியவருகிறது.

'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கை மீண்டும் ஆரம்பமான நாளான 28.05.98 அன்று தான் தெஹிவளைக் குண்டு வெடிப்பு நடைபெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

26–27 ம் திகதிகளில் வவுனியாவில் விமானப் பறப்புக்களும் படை எடுப்புக்கான ஆயத்தங்களும் தெரியத் தொடங்கிவிட்டன. இந்நிலையில் கொழும்பில் உள்ள புலிகள் அடையாள எதிர்ப்பைக் காட்டும் விதமாக மின்மாற்றிக்கு குண்டு வைத்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

'ஜயசிக்குறுய்' தீவிரம் பெறுமானால் தலைநகரில் குண்டுகள் வெடிக்கும் என்பதை தெரிவிக்கும் செய்தியாகவே தெஹிவளை குண்டு வெடிப்பு இடம்பெற்றதாக கருதப்படுகிறது.

கொழும்பில் பலத்த தேடுதல்கள், வகை தொகையற்ற கைதுகளின் பின்னரே தெஹிவளை குண்டு வெடிப்பு நடந்துள்ளது. அதாரங்கள் மற்றும் போதிய தகவல்கள் இன்றி நடைபெறும் கைதுகள் பயனற்றவை என்பதை இவ்வாறான சம்பவங்கள் நிரூபித்து வருகின்றன.

"யுத்த அரங்கு விரிவாகி வருகிறது. யுத்தத்தின் அதிர்வுகள் நாடெங்கும் வியாபித்துள்ளன. வடக்கு-கிழக்கின் எல்லைக்குள் யுத்தத்தை முடக்கிவைத்திருக்கும் அரசின் திட்டம் நிறைவேறப்போவதில்லை" என்று புலிகள் முன்னர் தெரிவித்திருந்தனர். மலையகத்தில் மின்மாற்றிகள் தகர்க்கப்பட்ட சம்பவங்களையடுத்தே புலிகள் மேற்கண்டவாறு கூறியிருந்தனர்.

**அட்டன் குண்டு**

பதுளை மின்மாற்றி குண்டு வெடிப்பை அடுத்து, மலையக தோட்டத் தொழிற்துறை புலிகளின் குறியாக மாறியுள்ளது. என்று முரசு செய்தி வெளியிட்டிருந்தது.

01.06.98 அன்று அட்டன் தேயிலை தொழிற்சாலையில் சக்தி வாய்ந்த குண்டொன்று வெடித்துள்ளது.

இலங்கை அரசுக்கு வருமானம் ஈட்டிக் கொடுக்கும் துறையாக தோட்டத் தொழிற்துறை விளங்குகிறது. உல்லாச பயணிகளை கவரும் பிரதேசமாக மலையகம் திகழ்கிறது. எனவே மலையகத்தில் புலிகளது நடவடிக்கைகள் மேலும் தொடரும் அறிகுறிகள் தென்படுகின்றன.

குறிப்பிட்ட பகுதி என்றில்லாமல் மலையகம் எங்கும் பரவலான குண்டுத் தாக்குதல்கள் நடத்தக்கூடிய வலைப்பின்னல் ஒன்றை புலிகள் ஏற்படுத்தி உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் பொறுப்பில் மின்சாரதுறை இருப்பதால்தான் புலிகளின் கோபம் மின்மாற்றிகளில் வெளிப்படுகிறது. அதேசமயம் சிறுக சிறுக அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்துவதாகவும் அத்தாக்குதல்கள் மாறியுள்ளன.

**புலிகளின் செய்தி**

இதேவேளை தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையங்களில் நடைபெறும் குண்டு வெடிப்புக்கள் பற்றி மட்டும் தகவல் அறியமுடியாதுள்ளது.புலிகளிடமிருந்து சூசகமான தெரிவிப்புக்கள் இதுவரை வெளியாகவில்லை. 01.06.98 புலிகளின் குரல் வானொலி செய்தியில் "கஞுவாஞ்சிக் குடி தொலைத்தொடர்பு நிலைய குண்டுவெடிப்புக்கு விசேட அதிரடிப்படையினரில் சந்தேகம் கிளம்பியுள்ளதென்று கூறப்பட்டது.

இதேவேளை அரசும், பாதுகாப்பு தரப்பும் தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலைய குண்டு வெடிப்புக்கள் தொடர்பாக இதுவரை திட்டவட்டமான கருத்து எதனையும் வெளியிடவில்லை. ■

## யாழ் குடாநாட்டில் பெண்கள் படையணி

(நமது நிருபர்)

**யா**ழ் குடாநாட்டில் பரவலான தாக்குதல்களை நடத்துவதற்காக பெண்கள் படையணி ஒன்று ஊடுருவி உள்ளது.

பெண்கள் அணியினரால் இரு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. யாழ் குருநகரிலும், தென்மராட்சி மட்டுவில் காவலரணிலும் பெண்கள் அணி நடத்திய இரு வேறு தாக்குதல்களில் மூன்று படையினர் பலியாகினர். ஆறுபடையினர் காயமடைந்தனர்.

இச் சம்பவங்கள் தொடர்பாக அறியப்படுவதாவது:

3.05.98 சனிக்கிழமையன்று மாலை 6.30 மணியளவில் குருநகர் சவக்காலை காவலரண் அருகே இரு பெண் புலிகள் நின்று நோட்டமிட்டனர்.

காவலரணில் இருந்த படையினருக்கு சந்தேகம் எற்பட்டுவிட்டது. இருவரையும் விசாரிக்க அழைத்தனர். இருவரும் கிட்ட வந்தனர். அப்போது அவர்களில் ஒருவர் தனது கையிலிருந்த பையை திறக்க முற்பட்டார்.

உடனே உஷாரான சிப்பாய் அப்பெண் புலியை நோக்கி சுட்டிருக்கிறார். ஆனால் குறிதவறிவிட்டது.

அருகில் நின்ற இன்னொரு பெண் புலி சுடித்தார் அணிந்திருந்தார். அவர் தனது இடுப்பில் இருந்த பிஸ்டலை துரிதமாக உருவி தம்மை சுட்ட சிப்பாயின் மார்பில் சுட்டிருக்கிறார்.

பையை திறந்த பெண்புலி அதற்குள் இருந்த கைக்குண்டை எடுத்த காவலரண் நோக்கி வீசினார்.

காவலரணில் இருந்த படையினர் பதுங்கி நிலை எடுத்தபடி சுட்டனர். அதனால் பெண்புலிகளில் ஒருவர் காயமடைந்தார். அதன்பின்னர் இரு பெண் புலிகளும் தாக்குதலை முடித்துக்கொண்டு தப்பிச் சென்று விட்டனர். தாக்குதல் முடிவில் இரு படையினர் பலியாகினர்.

இம் மோதல் சம்பவத்தின்போது பொது மக்கள் யாரும் பலியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

31.05.98 அன்று காலை 11 மணியளவில் மட்டுவில் சோதனைச் சாவடிக்கு சென்ற இரு பெண் புலிகள் பிஸ்டலால் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலியாகினார். 4 பேர் காயமடைந்தனர். தாக்குதல் நடத்திய பெண் புலிகள் தப்பிச் சென்றுவிட்டனர்.

இதனையடுத்து நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் மாணவர் ஒருவர் படுகாயமடைந்தார். ■

## சுட்டவர் ஒரு பெண்
## மேயர் கொலையில் புதிய தகவல்

**யா**ழ் மேயர் சரோஜினி யோகேஸ்வரன் படுகொலையில் இரண்டு பேர் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்தனர். அந்த இரண்டு பேரில் ஒருவர் பெண் என்று புதிய தகவல் கிடைத்துள்ளது.

'திருமதி யோகேஸ்வரன் இருக்கிறாரா?' என்று முன்னால் நின்று விசாரித்தவர் ஆண் என்றும் "நான்தான்" என்று சரோஜினி கூறிதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர் பெண் என்றும் தெரியவருகிறது.

துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு சரோஜினி வீட்டின் பின்புறமாகவே இருவரும் பாய்ந்து தப்பி ஓடினர்.

அப்போது சிலர் அவர்களைக் கண்டுள்ளனர். அவர்கள் மூலமே இருவரில் ஒருவர் பெண் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

அப்பெண்ணும் ஜீன்ஸ் சேர்ட் அணிந்திருந்தாராம். சற்றுக்குள்ளமாக இருந்தாராம். உரப்பையினால் சுற்றப்பட்ட நீளமான பொருள் ஒன்று அவர் கையில்தான் இருந்ததாம். ●

## புலிகளைத் தடுக்க தற்காப்பு நகர்வு

**தி**ருமலையில் இருந்த படையினரில் ஒரு பகுதியினர் வன்னிக்கு கொண்டு செல்லப்பட்டதால், புலிகள் அங்கு தாக்குதல் நடத்தலாம் என்று படையினர் கருதுகின்றனர்.

இதனால் புலிகள் படை முகாம்களை தாக்குவதற்கு தயாராகாமல் தடுப்பதற்காக தற்காப்பு நகர்வுகளில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

முகாம் சுற்றுப்புறப் பகுதிகள், மற்றும் முகாம் தாக்குதலுக்கு புலிகள் ஒன்று திரளக் கூடிய பகுதிகள் என்று கருதப்படும் பகுதிகள் நோக்கி திருமலை மாவட்டத்தில் படையினர் சென்று திரும்புகின்றனர்.

படையினர் செல்லும்போது புலிகள் அகன்று விடுகின்றனர். படையினர் திரும்பிய பின்னர் மீண்டும் தமது நிலைகளுக்கு வருகின்றனர். பாரிய தாக்குதல்கள் நடைபெற்றதாக அரச செய்திகள் தெரிவிக்கும் போதும், புலிகள் தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்பட்டதாக தெரியவில்லை. ■

## பெண்புலி தானாகச் சிக்கினார்
## பிஸ்டலும் கைப்பற்றப்பட்டது

**யா**ழ்ப்பாணம் குருநகர் காவலரண் மீதான தாக்குதலில் சம்பந்தப்பட்ட இரு பெண்புலிகளில் ஒருவர் தானாகச் சென்று படையினரிடம், சிக்கிக் கொண்டார்.

தாக்குதலின்போது காயமடைந்த மேற்படி பெண்புலி குருநகரிலுள்ள தனது வீட்டிற்குச் சென்று பிஸ்டலை பத்திரமாக வைத்துவிட்டு, ஒரு கைக் குண்டுடன் பிறிதொரு வீட்டுக்குச் சென்றுள்ளார். அது தையல்காரர் ஒருவரது வீடாகும். அதுவும் குருநகரிலேயே உள்ளது.

அவ்வீட்டில் இருந்த ஒரு இளைஞர் பெண்புலியை சைக்கிளில் ஏற்றி யாழ் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார். அவ்வாறு செல்லும்போது யாழ் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகே கைக்குண்டு தவறி கீழே விழுந்திருக்கிறது.

அப்பகுதியில் நின்ற சிலர் "கைக்குண்டு விழுந்துவிட்டது" என்று குரல் கொடுத்தும் அவர்கள் கேளாமல்சென்றுவிட்டனர்.

பின்னர் துப்பாக்கிப் பிரயோகத்தின் இடையே சிக்கியதாக் கூறி யாழ்பொது மருத்துவமனையில் பெண்புலி அனுமதி பெற்றுக்கொண்டார்.

அதே சமயம் தையல்காரர் வீட்டுக்கு பெண்புலி வந்ததையும், அவரை கூட்டிச் சென்ற இளைஞர் பற்றியும் தையல்காரருக்கு விரோதமானவர்கள் படையினருக்கு தகவல் கொடுத்தனராம்.

பெண் புலியை மருத்துவமனையில் விட்டுவந்த இளைஞர் மடக்கிப்பிடிக்கப்பட்டு, பின்னர் பெண் புலியும் கைதானார். அவரது வீட்டில் இருந்த பிஸ்டலும் கைப்பற்றப்பட்டது.

கைதான பெண்புலி தம்பிராசா சுகந்தி என்று மருத்துவமனையில் பெயர் கொடுத்திருந்தார். அவரது சொந்தப் பெயர்: கிறிஸ்து ராஜா கிறிஸ்ரில்டா. குருநகரைச் சேர்ந்தவர். யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் கல்வி கற்றவர். 1996ல் இயக்கத்தில் இணைந்தவர்.

## காவலரண்கள் மத்தியில் தாக்குதல்

**தி**ருமலை புகையிரத நிலைய காவலரண்கள் அருகே இருந்த சோதனை அரண் ஒன்று புலிகளால் தாக்கப்பட்டது. 30.05.98 அன்று நடைபெற்ற இந்த தாக்குதலில் பொலிஸ்காரர் ஒருவர் பலியானார். ஒருவர் காயமடைந்தார். இரவு 8.45 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

திருமலை புகையிரத நிலைய காவலரணுக்கு 50 யார் தொலைவில் இருக்கிறது மாதா கோயில். அதன் அருகே இருப்பது தான் சோதனைச் சாவடி. புகையிரத நிலைய காவலரணை தாண்டிச் சென்றோ அல்லது கடற்கரையோரமாக இந்து மயானத்தில் உள்ள காவலரணை தாண்டிச் சென்றோ அல்லது கடற்கரையோரமாக இந்து மயானத்தில் உள்ள காவரணை தாண்டிச் சென்றோதான் இந்த சோதனைச் சாவடியை தாக்கியிருக்க வேண்டும். அப்படியானால் கவலரணில் உள்ளவர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர்? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதனால் பொதுமக்களது வளவுகள் ஊடாக புலிகள் வந்ததாக அச்சமயத்தில் காவலுக்கு இருந்த சீருடையினர் கூறுகிறார்களாம்.

புலிகள் தாக்குதலை முடித்துக் கொண்டு சென்ற பின்னர் பொலிஸார் நடத்திய சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் மா. குப்புராசா என்னும் மீனவர் காயமடைந்தார்.

## "பறக்க முன் கூறுக"

**வ**ன்னியில் இராணுவ நடவடிக்கையில் பாரிய பீரங்கிகள் பயன்படுத்தப்படுவதால் அப்பிராந்தியத்தின் மீது பறந்து செல்லும் விமானங்கள் பற்றி தங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று பாதுகாப்புத் துறையினர் கேட்டுள்ளனர்.

விமானங்கள் பயணம் மேற்கொள்ளும் முன் கட்டுப்பாட்டகம் (விமானத் தளத்திலுள்ள) தங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

வன்னி ஊடாகப் பறக்கும்போது கணிசமான உயரத்தில் பறக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. ■

## படையினரும் பொலிஸாரும் பதவி விலகுக
## புலிகள் புதிய காலக்கெடு விதிப்பு

**அ**க்கரைப்பற்றுப் பகுதியில் படையிலும் பொலிஸிலும் இணைந்து கடமையாற்றுவோரின் வீடுகளுக்குச் சென்று அவர்களது உறவினர்களிடம் புலிகள் இயக்கத்தினர் புதிய எச்சரிக்கை அறிவித்தலொன்றை விடுத்துள்ளனர்.

ஜூன் மாதம் முதலாம் திகதியில் இருந்து படையிலும் பொலிசிலும் கடமையாற்றும் சகலரும் விலகிக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் தண்டனை வழங்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதே போன்றதொரு எச்சரிக்கையைக் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னரும் புலிகள் கிழக்கில் அறிவித்திருந்தனர் என்பது நினைவிருக்கலாம். படையிலிருந்து தப்பியோடியோரைக் கண்டுபிடித்து அவர்களை மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்வதற்கு அரசு பகீரத பிரயத்தனம் செய்யும் இவ்வேளையில் புலிகள் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளனர். ■

## பொதுமக்கள் மீது தாக்குதல்
## பலியானவர் புலியென்று சாதிப்பு

**யா**ழ்ப்பாணம் குருநகர் தாக்குதலை அடுத்து பொதுமக்கள் மீது படையினரால் கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பதின்மூன்று பொதுமக்கள்வரை தாக்கப்பட்டு காயமடைந்தனர். ஒரு இளம் பெண் தாக்கப்பட்டதில் உயிரிழந்தார்.

பாசையூரைச் சேர்ந்த தேவதாஸ் ஜெதீனா என்ற 19 வயது இளம் பெண்ணே பலியானவராவார்.

குருநகரில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு சென்று விட்டு மைத்துனருடன் பாசையூரில் உள்ள தனது வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது அவரைக் கைது செய்த படையினர் கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர். அதனால் அப்பெண் பலியானார்.

இவரது சடலம் யாழ் பொது மருத்துவ மனையில் படையினரால் ஒப்படைக்கப் பட்டது.

பலியானவர் புலி என்றும் குருநகர் தாக்குதலில் சம்பந்தப்பட்டவர் என்றும் தேடுதலின் போது தப்பியோடியதால் சுடப்பட்டதாகவும் படையினர் கூறியுள்ளனர். அவர் புலி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் போட்டுவிட்டு உடலை பெற்றுச் செல்லுமாறு உறவினர்களுக்கு கூறப்பட்டதாம். உறவினர்கள் அதற்கு மறுத்துவிட்டனர்.

புலிகளது கைக்குண்டு வெடித்தே பொதுமக்கள் காயமடைந்தனர் என்றும் படையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் யாழ் நகரில் நடைபெற்ற சம்பவங்களுக்காக தாம் மனம் வருந்துவதாக படை உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நடைபெற்ற சம்பவங்களுக்கு படையினர் காரணம் இல்லையானால் வருத்தம் தெரிவிப்பது ஏன்? என்று பொதுமக்கள் கேட்கின்றனர். ■

## புளொட் உறுப்பினர் கைது

**கு**ருநகர் தாக்குதலில் காயமடைந்த பெண்புலிக்கு உதவ முயன்றதாகக் கூறி புளொட் உறுப்பினர் ஒருவர் கைதாகியுள்ளார். சுமன் என்னும் உறுப்பினரே கைதானவராவர்.

யாழ் மருத்துவமனையில் இருந்து பெண் புலியை தப்புவிக்க முற்பட்டார் என்று காரணம் கூறப்பட்டுள்ளது. ■

## படையினருக்கு தண்ணீர் பவுஸர்
## தின வாடகை 2500

**யா**ழ் குடாநாட்டில் ஆயுதப் படையினருக்கு குடி தண்ணீர் விநியோகம் செய்வதற்காக பாரிய பவுஸர் ஒன்று கொழும்பிலிருந்து வெகு காலத்துக்குப் முன் கொண்டுவரப்பட்டதாம். இதனை தினசரி ரூ 2500 கூலிக்கு எனப்பேசி எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த வாகனம் இரு வருடங்களுக்கு முன்னதாகப் பழுதடைந்து விட்டது. இதனைப் பழுது பார்க்க முடியவில்லை. இதனைக் கப்பலில் கொண்டு வந்து கொழும்பில் சேர்ப்பதற்கும் முடியாமற் போய் விட்டது. இப்பாரிய பவுஸரைக் தூக்கிக் கப்பலில் வைப்பதற்கேற்ற 'கிறேன்' எனப்படும் பாரந்தூக்கி யாழ்ப்பாணத்தில் இல்லை.

பயன்படுத்தப்படாத அந்த வாகனத்துக்கான தினக்கூலி மட்டும் தடங்கலில்லாமல் கடந்த இருவருடங்களாக தொடர்ந்து அதன் சொந்தக்காரருக்கு வழங்கப்பட்டு வருகிறதாம்.

இதனையிட்டு விசாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. ■

## படையினர்-புலிகள் 13பேர் பலி

**க**டந்தவாரம் கிழக்கில் பொலன்னறுவை மட்டக்களப்பு மாவட்டங்களில் நடைபெற்ற இரு தாக்குதல் சம்பவங்களின் போது படையினர் 5 பேரும் புலிகள் 8 பேரும் மொத்தம் 13பேர் கொல்லப்பட்டனர் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில்-மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் 126ம் மைல் கல்லில் மறைந்திருந்த படையினர் புலிகளின் அணியொன்றை தாக்கினர். இத்தாக்குதலில் 8 புலிகள் பலியானார்கள். 8 பேரின் சடலங்களையும் படையினர் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினுடாக புலிகளிடம் கையளித்தனர்.

தம்மால் கைப்பற்றப்பட்ட ஒரு படைவீரரின் சடலத்தைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தனர். பொலன்னறுவை அரலஹங்வில- எனும் இடத்தில் தாக்குதல் ஒன்றுக்காக மறைந்திருந்த புலிகள் படையினரை மடக்கித் தாக்கியதில் 4 படையினர் கொல்லப்பட்டார்கள். ■

## மௌலவி சுட்டுக் கொலை
## பின்னணியில் மற்றொரு மௌலவி

**அ**கில இலங்கை ரீதியாகவும் தென்னிந்தியாவிலும் பிரசித்தம் பெற்றிருந்த காத்தான்குடி அறபு மத்ரசாவின் மௌலவி எம்.எம். பாறூக் கடந்த 29.05.98 அன்றிரவு 10.15 மணியாளவில் தனது வீட்டில் வைத்து ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தப் படுகொலைக்கு பணக்கையாடல்களும், சமய ரீதியான தாக்கங்களும் காரணமென்று கருதப்படுகிறது. இவருக்கும் இவரது குழுவிலுள்ள மற்றொரு பிரபல மௌலவிக்கும் இடையில் நீண்ட காலமாக உட்பூசல்கள் நிலவி வந்திருக்கின்றன. கொலையுண்ட மௌலவி தொன்று தொட்டு ஐ.தே. கட்சின் தீவிர ஆதரவாளரும் சிறந்த பேச்சாளருமாவார். ஐ.தே.கட்சி பிரசார மேடைகளில் இவர் தீவிர பிரசாரகராக இருந்தார்.

கடந்த உள்ளூராட்சிச் சபைத்தேர்தலின் போது மேற்படி மௌலவிகளின் குழுவினர் சுயேச்சையாகப் போட்டியிட்டு மூன்று ஆசனங்களைக் கைப்பற்றினர். அரசியல் ரீதியான பழிவாங்கல்களும் கொலைக்கு வித்திட்டிருக்கலாம். என்ற சந்தேகமும் பின்னணியில் உள்ளது. ■

## கடற் தாக்குதல் ஏவுகணை?

**க**டலில் பயணம் மேற்கொள்ளும் கப்பல்களைத் தாக்கி அழிக்கவல்ல ஏவுகணைகளைப் பெறுவதற்கு எல்.ரி.ரி.ஈ. யினர் ஏற்பாடுகள் செய்திருப்பதாக உளவுத் துறைக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாம்.

இதுதவிர ஆழ் கடலினுள் புகுந்து சென்று தாக்கும் படகுகளை உற்பத்தி செய்வதற்கான பாகங்களை பிற நாடுகளிலிருந்து கொண்டுவந்து சேர்க்கவும் ஏற்பாடுகளை புலிகள் செய்துள்ளனராம்.

ஐரோப்பிய நாடு ஒன்றுடனும் மற்றொரு ஸ்கண்டநேவிய நாட்டுடனும் இவற்றுக்கான தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு விட்டதாகவும் தகவல் கிடைத்துள்ளதாம். ●

## கண்டனமும் – நழுவலும்

**யா**ழ்ப்பாணம் குருநகரில் பொதுமக்கள் மீது படையினர் நடத்திய தாக்குதல் குறித்து யாழில் உள்ள தமிழ்க் கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

எனினும் பட்டும் படாமல் நழுவும் விதமாகவே அறிக்கைகள் காணப்பட்டன என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

அப்பாவிப் பெண் ஒருவர் பலியாகி இருக்கிறார். அவரை புலியென்று முத்திரை குத்த முற்படும் படையினரின் செயலை தமிழ்க் கட்சி எதுவும் கண்டிக்கவில்லை என்பதையும், அறிக்கை விடாவிட்டால் பொதுமக்கள் தூற்றுவார்கள் என்ற நிர்ப்பந்தத்திலேயே அறிக்கை விட்டது போல இருக்கிறது என்றும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

யாழ் நூல் நிலைய எரிப்புக்கு ஐ.தே. கட்சியே காரணம் என்பதால் 17 வருடங்களுக்கு பின்னர் துணிந்து (?!) கரிநாள் அனுஷ்டிக்கிறார்கள். தற்போது நடைபெறும் அத்துமீறல்களுக்கு எப்போது கண்டனம் தெரிவிக்கப்போகிறார்கள். ஆட்சி மாறிய பின்னர்தானோ? என்றும் கேட்கப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் பாவனைக்குத் தடை!

## யாருக்காக-இது யாருக்காக?

### திருமலை வாசகர் நெஞ்சங்களின் குமுறல்...

வடக்கு-கிழக்கு மாகாணசபையின் ஓர் அங்கந்தான் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திணைக்கள நூலகம். இந்த நூலகம் முன்பு கூட்டுறவு பயிற்சி கல்லூரியின் ஒரு பகுதியாக இருந்தது. முன்னைநாள் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திணைக்கள பணிப்பாளர் அவர்கள் இந் நூலகத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் எடுத்ததுடன் பல சட்டதிட்டங்களையும் ஏற்படுத்தி, பொதுசனத்தை நூலகத்தை பாவிப்பதற்குத் தடை விதித்தார். இந் நடவடிக்கையானது பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியதுடன் நலன் விரும்பிகளால் ஆளுநர், பிரதம செயலாளர் போன்றோருக்கு, பொது சனத்தை இந் நூலகத்தை பாவிப்பதற்கு திறந்துவிடுமாறு கோரிக்கை விடப்பட்டது. இக் கோரிக்கையானது செவிடன் காதில் ஊதிய சங்கு மாதிரியானதுதான் மிச்சம்.

நூலக சட்டதிட்டங்களை மாற்றியதன் மூலம் ஆயிரத்துக்கு மேற்பட்டதாக இருந்த அங்கத்தவர் தொகையை நூற்றுக்கு உட்பட்டதாக கொண்டு வந்தது முன்னாள் பணிப்பாளரின் ஒரு சாதனையாகும். இந் நூலகத்தில் அங்கத்தவர்களுக்கான விண்ணப்பப்படிவம், குறிப்புரை, அங்கத்துவ அட்டை போன்றன ஆங்கிலத்தில் மாத்திரமேயுள்ளது. அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்வதற்கான நடைமுறையானது திணைக்களத் தலைவர், நூலகர் என்று பல படிகளை தாண்ட வேண்டியுள்ளது.

முன்னைநாள் பணிப்பாளர் காலத்தில் ஒரே புத்தகத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஐந்து பிரதிகள் வரையில் வாங்கப்பட்டதுடன், அவர் தன் தேவை கருதி கொழும்புக்குப் போகும் போதெல்லாம்தான் விரும்பிய புத்தகங்களோடு வருவார். இவை நூலகரின் ஆலோசனைப்படியோ, அங்கத்தவர்களின் விருப்பத்தின்படியோ வாங்கப்பட்டனவல்ல. ஏற்கனவே இருந்த புத்தகங்களும் மீண்டும் வாங்கப்பட்டதன் மர்மம் என்னவோ, 'யாமறியோம் பராபரமே.'

அறுபத்தைந்து அங்கத்தவர்களை மாத்திரம் கொண்டதும் 10,000 வரையிலான புத்தகங்களைக் கொண்டதுமான இந்த நூல் நிலையத்தில் தினம் இரண்டு அங்கத்தவர்களைக் காண்பதே அபூர்வம் சில புத்தகங்கள் அங்கத்தவர்களின் கரம் படாமலே இற்றுப் போகலாம்.

கணக்கியல், கணனி, தொழில்நுட்பம் போன்ற புத்தகங்கள் காலத்துக்கு காலம் புதிய புதிய கண்டுபிடிப்புக்களால் பழைய தாகி போகின்றன. இப் புத்தகங்கள் பாவிக்காமலேயே பழைய புத்தகங்களாகிப் போவதில் இவ்வதிகாரிகள் திருப்தியுறுகின்றார்களா? சாதாரண ஒரு சிற்றூழியரால் ரூபா முன்னூற்றி ஐம்பது செலுத்தி எப்படி அங்கத்துவ அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியுமென்று இவ்வதிகாரிகளின் மனச்சாட்சிக்கு தெரியவில்லையா?

முன்னாள் பணிப்பாளரினால் நிறைவேற்றப்பட்ட இந் நடவடிக்கையானது திருகோணமலை வாசகர்களிடையே ஆளுநர் மீதும், மாகாணசபை அதிகாரிகள் மீதும் வெறுப்பையே ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாண்டு புதிதாக பதவியேற்ற பணிப்பாளர் அவர்கள் பிரதம செயலாளர், ஆளுநர் போன்றோரின் அனுசரணையுடன் இந் நூலகத்தை பொது மக்களின் பாவனைக்காக திறந்து விடுவார் என திருமலை வாசகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள்.

தாசன்.

# வெசாக் தினத்தில் தமிழ் அடிமைகள்

கடந்த வெசாக் தினத்திலிருந்து தொடர்ந்து ஒரு வாரகாலத்திற்கு மாடுகள், ஆடுகள் இறைச்சிக்காக வெட்டப்படாது. அப்படியிருந்த மாடுகள் சில காப்பாற்றப் பட்டன. சிறைவாசமிருந்த மூவாயிரத்திற்கும் அதிகமான கைதிகள் விடுவிக்கவும் பட்டனர். வெசாக் தோரணங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் வெசாக் செய்திகள் பிரார்த்தனைகள், பிரித் நிகழ்ச்சிகள் இப்படிப் பல நல்ல விடயங்களை வெசாக் தினத்தில் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் நமக்குச் சொல்லிவிட்டன.

ஆனால் மட்டு நகரில் வெசாக் கூடுகளை அமைப்பதற்கும், தண்ணீர்ப் பந்தலுக்குரிய இடங்களை ஆயத்தம் செய்வதற்கும் பொலிசாரும், இராணுவத்தினரும் தமிழ் ஆடவர்களை (கிராமப்புற) அழைத்துவந்து வேலை வாங்கியதும் பல ட்ரக்டர் வாகனங்கள்-உரிமையாளர்களின் விருப்பமில்லாமல் பல வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதும் வேதனைக்குரியதே. இதனை யாருமே கண்டிக்கவுமில்லை.

தமிழ்நேசன்-மட்டக்களப்பு.

# கல்விக் காரியாலயத்தின் அசிரத்தை!

## ஆசிரியர்களின் சம்பளம் நிறுத்தம்!

(மன்னார் நிருபர்)

வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் அசிரத்தையினால், அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியாசிரியர்களாக இருக்கும் அம்மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கான சம்பளம் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் நிறுத்தப்படுகிறது.

இதற்கான உத்தரவினை வட-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் விதித்துள்ளார்.

கடந்த 1996 ஜூன் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் மேற்படி கலாசாலையில் பயிற்சி ஆசிரியர்களாக இருந்த வடமேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு வட-கிழக்கு மாகாணசபையினால் வழங்கப்பட்ட சம்பளப் பணம் 484,037.50 இதுவரை சம்பந்தப்பட்ட மாகாண திணைக்களத்தினால் மீளளிப்புச் செய்யப்படவில்லை.

இதனால் இத்தொகையே வடமேல் மாகாணசபை-வடகிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்கு வழங்கும்வரை பயிற்சியிலீடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கான சம்பளத்தை ஜூன் மாதத்திலிருந்து நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான சம்பளத்தை கல்முனைக் கல்விக்காரியாலயம், இதுவரை வழங்கி வந்தது. புதிய சம்பள நிறுத்தத்தினால் புத்தளம், குருணாகல் மாவட்ட பயிற்சியாசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் இந்தபொறுப்பற்ற தனத்தையிட்டு பயிற்சியாசிரியர்கள் விசனமடைந்துள்ளனர்.

# பயணமும்-பாசும்

## இதுதான் சிவில் நிர்வாகமா?

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்குப் பிரயாணம் செய்ய முன்னர் யாழ் நகரில் அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் ஒவ்வொரு பகுதி இராணுவ முகாமுக்கும் மக்கள் நலன் கருதி (?!) பரவலாக்கப்பட்டது. இதுவும் ஒருவித 'அதிகாரப் பரவலாக்கல்' தான்.

முன்னர் விண்ணபத்தைக் கொடுத்தால் முன்னுரிமை அடிப்படையில் அனுப்பி வைக்கப்பட்டது. போகும் ஒவ்வொருவரும் முகாம் சென்றதில்லை; அவர்கள் விசாரிக்கப்படுவதுமில்லை.

ஆனால் இன்று பிரயாணம் செய்பவர் தனது அருகிலிருக்கும் முகாம் ஒன்றுக்கு விண்ணப்பத்தைக் கொடுக்கவேண்டும். அதற்கு முன்னதாக கிராம உத்தியோகஸ்தர்-பிரயாணம் செய்பவர் புலிகளுடன் தொடர்பற்றவரென-சிபார்சு செய்ததன் பின்னர் அதனை பிரதேச செயலர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

முகாம் பொறுப்பாளர் பின்னர் தனது பிரிவுப் பொறுப்பதிகாரிக்கு அனுப்ப வேண்டும். அதன் பின்னர் அந்தப் பகுதி பிரிகேடியர் முகாம் சென்று அனுமதி பெறவேண்டும். இது பிரயாணம் செய்பவரை அலைக்கழிக்கும் தந்திரமாகும்.

விண்ணப்பங்களை சிபார்சு செய்ய சில கிராம உத்தியோகஸ்தர்கள் தயங்குகின்றார்கள். "இவர் எப்படி புலிகளுடன் தொடர்பில்லை என நாம் சிபார்சு செய்யலாம்?" எனக் கேட்கின்றனர்.

தீர விசாரித்து புலிகளுடன் தொடர்பில்லை என கிராம உத்தியோகஸ்தர் சிபார்சு செய்ய வேண்டுமெனவும், அப்படிச் சிபார்சு செய்யவில்லையானால் அவர்கள் பிரயாணம் செய்ய முடியாது எனவும் இராணுவ முகாம் பொறுப்பாளர்கள் கூறுகின்றார்கள்.

விண்ணபத்திலுள்ளோர் 15-30 வயதுக்கு உட்பட்டவராக இருந்தால் அனைவரும் முகாமுக்கு அழைக்கப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்படுகிறார்கள். இதனால் சில நாட்கள் தாமதமேற்படுகின்றது. சுற்றி வளைப்பில் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டோர், களுத்துறை, அனுராதபுரம் சிறைகளுக்கு அனுப்பப்பட்டோர், நீதிமன்ற விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டோர் கொழும்பு போக சில முகாம் பொறுப்பதிகாரிகள் அனுமதிக்கிறார்களில்லை.

தற்போது அந்தக் குடும்பத்தினர் 'மாவீரர் குடும்பமா', 'போராளி குடும்பமா' எனவும் விசாரிக்கிறார்கள்.

இத்தகையோர் பிரயாண அனுமதி பெறுவது 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதைதான்.' இன்றைய பிரயாண பாஸ் நடைமுறையைப் பார்க்கும் போது இளைஞர் யுவதிகள் கொழும்பு செல்ல மறைமுகக் கட்டுப்பாடொன்று நடைமுறையிலிருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் தான் இதற்குத் தக்க பதிலைச் சொல்ல வேண்டும். 'பட்டகாலிலேயே படும் கெட்ட குடியே கெடும்!'

புத்தொளி-ஆனைக்கோட்டை.

# தேவை சீரான படகுச்சேவை!

"13 கடல் மைல் தூரம் கொண்ட மூதூர் படகுச்சேவை மூதூர், ஈச்சிலம்பற்றை, சேருவில, மூதூர் கிழக்கு- (கட்டைபறிச்சான், சேனையூர்) ஆகிய பிரதேசங்களை திருமலையுடன் இணைக்கின்றது. தினமும் 1500க்கும் மேற்பட்ட மக்கள் பிரயாணம் செய்கிறார்கள். 25.02.93ல் 120 பயணிகள் படகுவிபத்தில் கொல்லப்படுவதற்கு முன்னர் ஆறு தனியார் படகுகளும் ஒரு இ.போ.ச. படகும் சேவையிலிருந்தன.

தனியார் படகுக்கு அனுமதி மறுக்கப்பட்டதும் 110 பேரை ஏற்றிச் செல்லக்கூடிய இ.போ.ச. படகுடன், காலப்போக்கில் மூதூர் ப.நோ.கூ.சங்கத்தினரால் 85 பிரயாணிகளைக் கொண்டு செல்லக்கூடிய படகொன்றும் சேவையிலீடுபடுத்தப்பட்டது. எனினும் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக ஒரேயொரு படகே சேவையிலுள்ளது.

இந்நிலையில் ஒன்றரை மணிப் பயணத்துக்கு மூன்று மணி நேரம் கியூவில் நின்றும் பலருக்கு இடம் கிடைப்பதில்லை. இதனால் அரச உத்தியோகத்தர்கள், நோயாளிகள், ஆகியோர் பெரிதும் சிரமமடைகின்றனர். இந்தப் படகுச் சேவையின் திருப்தியின்மை காரணமாக திருமலைக்குக் கொண்டுவரப்படவேண்டிய பல நோயாளர்களும் கர்ப்பிணிகளும் வழியிலேயே இறந்துபோவது இங்கு சாதாரணமாகிவிட்டது. மூதூர் மக்களின் நலன் கருதி திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சீரான படகுச் சேவைக்கு முயல்வதாகவும் இல்லை.

சேனையூர் அ. அச்சுதன்.

விளம்பரப் பகுதி


## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை

GOVT REGED NO. HA\04\BT\219

வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள், காதல், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, என்பவற்றிற்கும், வேண்டியவர்களைச் சேர்க்கவும், வேண்டாதவர்களையகற்றவும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்ட வடிவமைப்பில் எதிர்கால வாழ்க்கைப் பலனையும் அறிந்து கொள்ளலாம்.

'ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர்' நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருத்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்.

பாலுசோதிடர்–S.A.M.P.
தெய்வீக சக்தி நிலையம்
கல்லடி–அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு. (P.O).


BALUSOTHIDAR-S.A.M.P.
THEYVIGASAKTHY CENTRE,
BATTICALOA (P.O.)
SRI LANKA.

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்" - "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"



## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



## DIPLOMA IN COMPUTER STUDIES

Information technology, operating system, System Architecture, Programming Techniques , Application Software.

## DIPLOMA IN COMPUTER SCIENCE

Advance operating system Architecture, Advance Programming techniques. I.T Solution. Hardware Concept & Electronics Network Concept.

## DIPLOMA IN COMPUTER PROGRAMMING

Information Technology. Operating System design. Algorithm, PASCAL / C++, Programming for Network. Web side programming

## MICROSOFT OFFICE

Information technology. MS Word. MS Excel. MS Powerpoint.

## ADVANCED PROGRAMMING LANGUAGES

Visual Basic Ver 5.0, Visual C++, Java, Structured Query Language (SQL)

## COMPUTER AIDED DESIGN

Auto Cad Release 14, Auto lisp Programming

கட்டணங்கள் தவணை முறையிலும்செலுத்தலாம்.
வகுப்புக்கள் ஆரம்பமாகும் திகதி
14-06-1998.
தமிழிலும் விளக்கங்கள் அளிக்கப்படும்.

**Metro Computer World**
No 17, Charlimont Road Colombo-06.
T.P : 074 - 511164


## 1வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் பிரஜீவ் 13.06.1998

கரணவாய் மத்தியைச் சேர்ந்த பிரபாகரன் (பிரபு)-செல்வரஜினி தம்பதியினரின் ஆருயிர்ப் புதல்வன் **பிரஜீவ்** தனது 1வது பிறந்தநாளை 13.06.1998 அன்று கனடாவில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

செல்வன் பிரஜீவை கனடாவில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பூட்டா, அம்மப்பா(டென்மார்க்), பெரிய மாமா, நந்தன் மாமா (டென்மார்க்), மனோ மாமா, அம்மன் மாமி, தானிகா மச்சாள், வரதன் மாமா, விஜி மாமி, கௌரிகா மச்சாள், உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் கருணையம்பதி முத்தவிநாயகர் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ்க-வளர்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல். நாதன்

## 1 வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி டர்ஷனா 05.06.1998

மட்/ ஒந்தாச்சிமடம்-கல்முனையைச் சேர்ந்த யோகன் ஜெயந்தி தம்பதியினரின் செல்வப் புதல்வி டர்ஷனா (DARSHANA) 05.06.1998 அன்று தனது முதலாவது பிறந்த நாளை ஜேர்மனி டோட்முண்ட்(DOATMUND)நகரிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள், அண்ணன்மார்கள், அக்காமார், மாமாமார்கள், மாமிமார்கள், அத்தான்மார், மச்சாள்மார், அன்ரிமார்கள், சித்தப்பாமார், அன்ரியம்மாமார் மற்றும் உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் செல்வி டர்ஷனாவை பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென்று வாழ்த்துகிறார்கள்.

தகவல்: ஜெயாசுவரன்.


## மணமகள்தேவை

யாழ்/இந்து/உயர் குலம் பெற்றோர்-கனடாவில் வசிக்கும் 38 வயதுடைய மகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறார்கள். விரும்புவோர் கீழ்கண்ட முகவரியுடன், அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்:

RAJAH, POST BOX NO -07, 7660, QUERBES AVE, MOUTREAL, H3N2B6, CANADA.




படிப்பகம்

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# சுற்றுப் பாதையில் 'ஜயசிக்குறுய்'

'ஜயசிக்குறுய்' தனது ஒரு வருட காலத்தை பூர்த்திசெய்து, மிக நிண்டகால சமர் என்ற தேசிய சாதனையை படைத்திருக்கிறது.

**ஒரு வருடகாலத்தில் மூவாயிரம் படையினர் வரை பலியாகி உள்ளனர். ஏழாயிரத்திற்கு மேற்பட்ட படையினர் காயமடைந்துள்ளனர் என்று புலிகள் கூறியுள்ளனர். கிட்டத்தட்ட இது சரியான புள்ளிவிபரம் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.**

இதுவரை தமது தரப்பு இழப்புக்கள் தொடர்பாக படையினர் சரியான தகவல்களை வெளியிட்டது கிடையாது.

புலிகள் தரப்பு இழப்பை மட்டும் கண்ணால் கண்டதுபோலவும், விழ விழ எண்ணியது போலவும் துல்லியமாக கணக்குக்கூறும் படைத்தரப்பு தமது தரப்பு இழப்புக்களை மென்று விழுங்குகிறது.

**கடந்த ஒரு வருடகால 'ஜயசிக்குறுய்' எதிர் சமரில் புலிகள் தரப்பில் ஆண்களும், பெண்களுமாக ஆயிரத்தி முன்னூறுபேர் பலியாகி உள்ளனர்.**

இதுவரை தமது தரப்பு இழப்புக்களை புலிகள் மறைத்தோ, குறைத்தோ தகவல் வெளியிட்டதில்லை. எனவே புலிகளது தரவு பற்றி சந்தேகிக்க முடியாமல் உள்ளது.

**'ஜயசிக்குறுய்' ஒரு வருடத்தை பூர்த்தி செய்த பின்னர் 28.05.98 அன்று நடைபெற்றதே முதற் சண்டை.**

இரண்டாவது ஆண்டின் தொடக்கத்தில் அடி எடுத்து வைத்ததோடு, புதிய பாதை ஒன்றிலும் அடி எடுத்து வைக்க படைத்தரப்பு திட்டமிட்டது.

அது என்ன புதிய பாதை? அம்பாகமம் ஊடாக பழைய கண்டி வீதி வழியாக கிளிநொச்சி நோக்கிச் செல்வது தான் புதிய பாதை.

28.05.98 அன்று சண்டை ஆரம்பமானதுமே மாங்குளம் நகரை கைப்பற்றும் சண்டை என்று சில செய்தி நிறுவனங்கள் கூறிக்கொண்டிருந்தன.

ஆனால், மாங்குளம் நகரை கைப்பற்றும் எண்ணத்தையே படைத்தரப்பு கைவிட்டிருந்தது.

ஏப்ரல் மாதம் 20ம் திகதி படைத் தரப்புக்கும், புலிகளுக்கும் இடையே நடந்த சண்டைதான் மாங்குளம் நகரை கைப்பற்ற கடைசியாக நடந்த பலத்த சண்டையாகும்.

அந்தச் சண்டையில் ஒலுமடுவில் இருந்து படையினர் கனரக ஆயுதங்களுடன், டாங்கிப் படையின் கவச பாதுகாப்புடன், விமானப்படை உதவியுடன் முன்னேறினர்.

**புலிகளின் டாங்கி எதிர்ப்பு அணியினர் மேற்கொண்ட தாக்குதல்களால் டாங்கி ஒன்றும், துருப்புக்காவி வாகனமும் புலிகளது காப்பரன்களுக்கு நடுவே சிக்கியது. 50ற்கு மேற்பட்ட படையினர் பலியாகினர்.**

எத்தகைய பாரிய நகர்வுகளை மேற்கொண்டாலும் ஒலுமடுவில் இருந்து மாங்குளம் நகரை சென்றடைவது முடியாத காரியம். புலிகளது பாதுகாப்பு வியூகங்களை மீறி முன்னேறுவது பாரிய இழப்புக்களை உருவாக்கும், படையினரது மனோவலிமைக்கு சவாலாகிவிடும் என்று ஜயசிக்குறுய் தளபதிகள் கண்டுகொண்டனர்.

**சண்டை ஓய்ந்திருக்கும் நாட்களில் புலிகள் ஓய்ந்திருப்பதில்லை. தமது காப்பரன்களை பலப்படுத்துகிறார்கள். புதிய வியூகங்களை உருவாக்குகிறார்கள். எப்பாதையில் அடுத்த நகர்வு இருக்கும் என்பதை கள அனுபவம் மூலம் கணிப்பிட்டு அதற்கேற்ற உபாயங்களுடன் காத்திருக்கத் தொடங்குகிறார்கள்.**

எனவே, தொடர்ந்தும் ஒரே பாதை வழியாக, அதாவது ஒலுமடுவில் இருந்து மாங்குளம் நகர் நோக்கி முன்னேறுவது புலிகளின் பொறிக்குள் சிக்குவதற்கு ஒப்பானதாகும் என்பது படைத்தரப்புக்கு தெரியாமல் போகுமா?

ஏற்கனவே வவுனியா-யாழ் சாலையில் புளியங்குளத்திற்கு அப்பால் சாலை வழியாக முன்னேறுவதில் புலிகளது எதிர்ப்பை முறியடித்து படைத்தரப்பால் நகர முடியவில்லை. அதனால்தான் உட்பாதை வழியான நகர்வுகளில் ஈடுபட்டனர்.

மாங்குளம் நகரை கைப்பற்றி அங்கிருந்து நெடுஞ்சாலை வழியாக கிளிநொச்சி நோக்கி நகரும் படையினரின் திட்டமும் வெற்றியளிக்கவில்லை.

**கிட்டத்தட்ட மூன்றுமாத முயற்சியின் பின்னர் மாங்குளம் நகரை நேராகக் கைப்பற்றும் திட்டத்தை கைகழுவிவிட்டு, புதிய திட்டம் ஒன்றுடன் 28.04.98 அன்று 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைகள் ஆரம்பமாகின.**

மூன்று முனைகளில் படைகள் நகர்வுகளை ஆரம்பித்தன. பெரும் எடுப்புடன் ஆரம்பமான இப்படை நடவடிக்கையை சிறு சிறு குழுக்களாக மெதுவாக நடைபெறும்படை நடவடிக்கை என்று படைத்தரப்பினர் சித்தரித்தனர்.

**அப்படிச் சித்தரித்தால்தான் தொடர்ந்தும் முன்னேற முடியாவிட்டாலும் பின்னடைவாக வெளியே தெரியாது என்று கருதியே அவ்வாறு சித்தரிக்கப்பட்டது.**

சிறுசிறு குழுக்களாக படையினர் முன்னேறக்கூடியளவுக்கு கள நிலவரம் இல்லை.

**மாங்குளத்திற்கு கிழக்கே உள்ள ஒலுமடுவில் இருந்து மாங்குளம் நகர் நோக்கி முன்னேறுவதுபோல போக்குக் காட்டியது ஒருமுனை.**

**ஒலுமடுவில் இருந்து அம்பாகமம் ஊடாக பழைய கண்டி வீதியால் முன்னேறுவது இரண்டாவது முனை.**

**மாங்குளத்திற்கு மேற்கே மூன்று முறிப்பு பகுதியில் இருந்து உட்பாதை வழியாக முன்னேறுவது மூன்றாவது முனை.**

பல முனைகளால் முன்னேறி எதிரியைக் குழப்புவதும், இழுத்தடிப்பதும் படையினரின் தந்திரம்.

ஒலுமடுவில் இருந்து அம்பாகமத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதிவரை படையினர் ஏற்கனவே நிலைகொண்டிருந்தனர்.

அம்பாகமப் பகுதி ஊடாக பழைய கண்டி வீதியில் முன்னேறுவதே பிரதான நகர்வு பாதையாக இம்முறை திட்டமிடப்பட்டது. ஏனைய இரண்டு முனைகளும் புலிகளை திசை திருப்பும் சண்டை முனைகளாக உருவாக்கப்பட்டன.




ஆனால் புலிகள் மூன்று முனைகளிலும் படையினருடன் மோதியதோடு, படையினரின் பிரதான நகர்வுப் பாதையை துரிதமாகக் கணிப்பிட்டு, அங்கு தமது பிரதான கவனத்தை திருப்பினர்.

ஒலுமடுவில் இருந்து ஆறு கிலோமீட்டர் தூரத்தில் இருப்பது அம்பாகமம். ஏற்கனவே சில கிலோமீற்றர் தூரம் அங்கு படையினர் நிலை கொண்டிருந்தனர்.

**28.05.98 இல் படையினர் மேலும் சில கிலோமீற்றர்கள் முன்னேறி தமது நிலைகளை அமைத்தனர். அடையாள எதிர்ப்பு காட்டிய புலிகளது அணிகள் பின்வாங்கி பதுங்கிக் கொண்டன.**

புதிதாக கைப்பற்றிய பகுதிகளில் நிலைகளை அமைக்கும் வரை புலிகள் பாரிய தாக்குதல் எதுவும் நடத்தவில்லை. அதனால் நிலைகளை அமைக்கும் கவனத்தில் படையினர் மூழ்கியிருந்தனர்.

அப்போது திடீரென்று புலிகளது தாக்குதல் அணிகள் தமது தாக்குதலை தொடுத்தன. முதலில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. ஷெல்கள் ஓய்ந்ததும் புலிகளது தாக்குதல் அணிகள் முன்னேறி தாக்க ஆரம்பித்தன.

மிக உக்கிரமான பாரிய தாக்குதலால் படையினர் இரு திசைகளில் பிரிந்து பின்வாங்கினர். ஒரு திசையில் சென்ற படையணி புலிகளது முற்றுகையில் சிக்கியது.

**கப்ரன் ஒருவர் தலைமையில் 20 பேர்கொண்ட படையணியே புலிகளின் முற்றுகையில் சிக்கி பலியானவது.**

அன்றைய சண்டைகளில் படையினர் தரப்பில் 50ற்கு மேற்பட்டோர் பலியாகினர். அவர்களில் 20 படையினரின் சடலங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. படைத் தரப்பின் தகவல்படி நூற்றுக்கு மேற்பட்ட படையினர் காயமடைந்தனர். சுயாதீன செய்திகளின்படி 150ற்கு மேற்பட்ட படையினர் காயமடைந்தனர்.

புலிகள் தரப்பில் அம்பாகமம் சண்டையில் எட்டுப்பேர் பலியாகினர். அவர்களில் ஒருவர் பெண்புலி.

**மாங்குளத்திற்கு கிழக்கே ஒலுமடுவில் இருந்து வடக்காக ஆறு கிலோமீட்டர் தூரத்தில் இருப்பதுதான் அம்பாகமம். அங்கிருந்து மாங்குளம் நகரை நோக்கி செல்வது தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போன்றது. ஆனால், அம்பாகமத்தில் இருந்து மாங்குளத்தை கைப்பற்ற படையினர் நகர்ந்ததாக செய்திகளில் கூறப்பட்டது.**

அம்பாகமம் ஊடாக முன்னேறுவதில் ஏற்பட்ட பின்னடைவை அப்படியே அமுக்கி விட்ட படைத்தரப்பு, மூன்று முறிப்பில் இருந்து முன்னேறி துணுக்காயை கைப்பற்றி விட்டதாக ஒரு செய்தியை கசிய விட்டுள்ளனர்.

வவுனியா-யாழ் சாலைக்கு மேற்காக இருப்பதுதான் மல்லாவி துணுக்காய் சாலை. மாங்குளத்திலிருந்து மேற்காக 14 கிலோமீட்டர் தொலைவில் இருப்பது மல்லாவி. 20 கிலோமீட்டர் தொலைவில் இருப்பது துணுக்காய். மல்லாவிச் சந்தியில் இருந்து துணுக்காய் ஆறுகிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

மல்லாவிச் சந்தியை பிடித்துவிட்டதாகவும், துணுக்காயை பிடித்துவிட்டதாகவும் மாறிமாறி முன்னுக்குப் பின் முரணாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இரண்டுமே தவறான தகவல்களாகவே உள்ளன.

புளியங்குளத்திற்கு மேற்குப்புறமாக 21 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மூன்று முறிப்பு வரை படையினர் முன்னேறி இருந்தனர். அங்கிருந்து 20 கிலோமீட்டர் வடக்காகச் சென்றால்தான் மல்லாவி துணுக்காயைச் சென்றடையலாம்.

20 கிலோமீட்டர் தூரத்தை கடப்பது சுலபமல்ல. மல்லாவி துணுக்காய் சாலையில் சிறிது முன்னேறியதுமே மல்லாவிச் சந்தியை பிடித்துவிட்டதாக செய்திகள் பறந்து வந்துவிட்டன.

முன்னர் ஒலுமடுப் பகுதியில் நின்றபடி மாங்குளம் நகரை கைப்பற்றிவிட்டதாக செய்திகள் கூறப்பட்டது போன்ற சித்தரிப்பே இதுவும்.

மல்லாவி துணுக்காயை கைப்பற்றி மாங்குளம் நகரை கைப்பற்றுவதற்கு படையினர் திட்டமிட்டால் அது சாதாரண காரியமல்ல. அடர்ந்த யானைக் காடுகளை தாண்டிச் சென்றாக வேண்டும்.

ஒலுமடுவில் இருந்தே மாங்குளம் நகர் நோக்கியே செல்ல முடியவில்லை. இந்நிலையில் மூன்று முறிப்பில் இருந்து மல்லாவி துணுக் காய் சென்று அங்கிருந்து மாங்குளம் நகருக்கு செல்வது சாத்தியமில்லை.

**ஆனால் படையினரது உண்மையான நோக்கம் மாங்குளம் நகரை நேரடியாக கைப்பற்றுவதல்ல. வவுனியா யாழ் சாலைக்கு கிழக்காக அம்பாகமம் ஊடாக பழைய கண்டிவீதி வழியாகவும், சாலைக்கு மேற்காக மூன்று முறிப்பில் இருந்து மல்லாவி துணுக்காய் சாலையிலும் முன்னேறினால், வவுனியா? யாழ் சாலையில் உள்ள புலிகளுக்கு விநியோகம் தடைப்படும்.**

முல்லையில் இருந்து கிடைக்கும் விநியோகத்தை கிழக்குப்புற நகர்வு தடுக்கும். மன்னாரில் இருந்து கிடைக்கும் விநியோகத்தை மேற்குப்புற நகர்வு தடுக்கும் என்பதுதான் திட்டம்.

ஆனால் இது ஒரு ஆபத்தான திட்டம் என்பதை அம்பாகமம் சண்டையில் ஏற்பட்ட பாரிய இழப்புக்கள் உணர்த்துகின்றன.

புலிகளிடம் ஆட்டிலறி மற்றும் மோட்டார்களின் பலம் போதுமானளவு இருப்பதாலும், புவியியல் சாதகமாக அமைந்துள்ள அடர் காடுகளும் நீண்ட சுற்றுப் பாதையூடான படையினரது வியூகங்களுக்கு பாதகமாகமாறும்.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்காக மேலதிமாக படையினரை குவித்தபோதும், நீண்ட சுற்றுப்பாதையால் தமது நகர்வுகளை படையினர் மேற்கொள்ளும் போது, ஆட்பலம் போதுமானதாக இருக்கப்போவதில்லை.

அதனால்தான் மாங்குளம் நகரை கைப்பற்றி வவுனியா- யாழ் நெடுஞ்சாலை வழியாக முன்னேற மூன்று மாதமாக படைத் தரப்பு படாதபாடுபட்டது.

அவ்வாறு முன்னேறும்போது படை பலத்தை ஒரே முனையில் குவித்து முன்னேறலாம். வவுனியா- யாழ் சாலை வழியாக முன்னேறுவதற்கு தேவையான படை பலத்தை விட பல மடங்கு படை பலம் தற்போதைய சுற்றுப்பாதை வியூகத்திற்கு தேவைப்படும்.

அதேசமயம் படைபலம் பரவலாவது புலிகளது தற்காப்பு மற்றும் தாக்குதல் உத்திகளுக்கும் சாதகமாகிறது.

**மாகாண சபைத் தேர்தல் விரைவில் வரவுள்ளதால் அதற்கிடையே 'ஜயசிக்குறுய்' கிளிநொச்சியை எட்டிவிட வேண்டும் என்பதே அரசின் ஆவல்.**

பாரிஸ் மாநாட்டுக்காக கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாக 'ஜயசிக்குறுய்' ஒத்திப் போடப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்கு அபிவிருத்தியை முன்னிலைப்படுத்தியே நிதி உதவி கோரப்பட்டதால் போர்முனையில் அமைதி நிலவும் விதமாக ஒத்திவைத்திருந் தனர். உதவி கிடைத்ததும் வாங்கிப் பையில் போட்டுக்கொண்டு, சண்டை தொடங்க கையைக்காட்டி விட்டது அரச தரப்பு.

பூமி சூரியனை சுற்றுவது போல 'ஜயசிக்குறுய்' ஆமி புலிகளைச் சுற்றிச் சுற்றி வருகிறது. 365 நாள் சுற்றியாகி விட்டது. இப்போது இரண்டாம் சுற்று ஆரம்பித்துள்ளது.

அவ்வாறு முன்னேறினால் புலிகளின் பொறிக்குள் விழவேண்டியதுதான்.

தமது முன்னரங்க நிலைகளைத் தாண்டி அடி எடுத்து வைக்க வேண்டுமானால் கனரக ஆயுத, வாகன உதவிகளோடும் ஆட்பலத்தோடும்தான் படைகள் முன்னேற வேண்டும்.

அதன்பின்னர் மெதுவாக செல்வதும் வேகமாகச் செல்வதும் புலிகளது பதிலடியின் தன்மைக்கு ஏற்பவே அமையும்.

**நம்பிக்கையீனங்களுடனும், சந்தேகங்களுடனுமே படைத்தரப்பினர் தமது நகர்வுகளை தற்போது ஆரம்பிக்கின்றனர். தமது எதிரியை குறைத்து மதிப்பிடும் தவறுகளை திருத்திக் கொள்ள தொடங்கிவிட்டனர் என்பதையே, படை எடுப்புக்கள் பற்றிய படைத் தரப்பின் சித்தரிப்புக்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.**

பின்னடைவையும் நியாயப்படுத்தக்கூடியதாக புத்திசாலித்தனமான வியாக்கியானங்களை முன்கூட்டியே கூறிவிடுகின்றனர். காலவரையறை பற்றிய ஆரவாரங்களையும் இப்போது காணவில்லை.

28.05.98 இல் மூன்றுமுனைகளில் இருந்த படை நகர்வுகள் பெரிய எடுப்பில் ஆரம்பமாகின.

> **மாங்குளம் நகரை நேரடியாக கைப்பற்ற முடியாமையால் அத் திட்டத்தை கைவிட்டு இரு புறமாக சுற்றிவந்து யாழ் சாலையை கைப்பற்ற ஜயசிக்குறுய் படைகள் உட்பாதைகள் தேடுகின்றன.**

### பல அணிகளாய் பிரித்து

**வ**ன்னிக் களத்தில் புலிகளின் படையணிகளுக்கு டாங்கிகள் போன்ற கனரக வாகனங்களும், விமானங்களும் இல்லாதது தான் பாக்கி. ஏனையவை தயார்.

விமான எதிர்ப்பு படையணி, டாங்கி எதிர்ப்புப் படையணி, பீரங்கிப்படையணி, சிறுத்தை அணி பதுங்கிச்சுடும் அணி, வேவுப் படையணி, என்று பல பிரிவுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

மோதல்களில் பாதகமான சூழல் ஏற்படுகிறது என்று தெரிந்தால் அப்பகுதிக்கு விரைந்து செல்வதற்காக என்று தனியாகவும் படையணிகள் தாயர் நிலையில் உள்ளன

படம் ஒன்று: புலிகளது பதுங்கிச்சுடும் படையணியினர்

படம் இரண்டு: புலிகளது பாதுகாப்பு அரண்கள். தரையோடு தரையாக நீண்ட தூரம் நகர்ந்து செல்லக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளன.

மரபுப் போரில் புலிகளிடம் டாங்கிகள் இல்லாத குறையை போக்குவன இந்த காப்பரணகள் தான்.





நா ர த ர்

## அதிரடி அய்யாத்துரை



**கொழும்பில்** 'பெண்கள் அமைப்புக்கள்' என்ற பெயரில் ஆளும் தரப்பு சார்பு அணி பிரமுகப் பெண்கள் கூட்டம் போட்டவையாம். யாழ் மாநகர முதல்வர் கொலையை கண்டிப்பதோடு நிறுத்திமிருந்தால் பாதகமில்லை. அதுக்கும் மேலே போய் பெண்களுக்கு அச்சுறுத்தல், பெண் விடுதலை என்றெல்லாம் அள்ளி விட்டிருக்கினம். 'கோணேஸ்வரிகள் பிறப்பு உறுப்பில் கைக்குண்டு வைத்து' கொல்லப்பட்டதும், ஊமைப் பெண், மன நிலை சரியில்லாத அபலைப் பெண் என்று தமிழ்ப் பெண்கள் சதைப்பசிக்கு தீனியாகிறார்கள் என்று அந்தக் கொடுமையெல்லாம் இவையை உறுத்துவதில்லையோ?!

**பலிக்கடாவாக** தள்ளிவிட்டுப் போட்டு, அவரது செத்தவீட்டுக்குக் கூட கூட்டான கட்சி முக்கிய பிரமுகர்கள் தலைகாட்டேல்லை. தலைவர் இந்தியாவில் இருந்து அறிக்கை விட்டதோடு சரி. திருவானமலையில் தங்கமானவர் பலியாகும்போது செயலதிபர் இந்தியாவுக்கு நழுவிப்போட்டார். இப்போது முதல்வர் பலியாகும்போது தலைவர் நழுவிப்போட்டார். நல்ல கட்சி, நல்ல ஒற்றுமை. ஒரே கூத்தான அணி தான் போங்கோ.

**பாதுகாப்புக்கு** துணைப் பொறுப்பானவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்போவதாக கூட்டான கட்சியினர் கூறினவையல்லோ? "ஒரு காலமும் நடக்காது!" என்று சொன்னேன் அல்லோ. பார்த்தியளோ, கைதுகள் தொடர்ந்தும், சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் கூட கப்சிப்பாக இருக்கினம். இப்போது கேட்டால், "நீங்கள் எந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை பற்றிக் கூறுகிறீர்கள்?" என்று கேட்டாலும் கேட்பினம். சனம் மறந்துபோகும் என்ட நம்பிக்கையில் அள்ளிவிடுறதுதானே!

**கொழும்பில்** கெடுபிடிகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. வாரத்தில் ஒருநாள் அல்லது மாதத்தில் ஒருநாள் பொலிசில் கையொப்பமிடுமாறு கிரிமினல்களுக்கு உத்தரவிடப்படுவதுண்டு. மருதானை பொலிசார் கிரிமினல்கள் பட்டியலில் தமிழர்களையும் சேர்த்துவிட்டனர். மருதானையில் குடியிருக்கும் தமிழர்கள் மாதாமாதம் தமது வீட்டுப் பதிவை பொலிசில் சென்று புதுப்பிக்கவேண்டும். அங்கு சென்று கியூவில் நின்றால் பொறுப்பதிகாரி பாதியிலே போய்விடுவாராம். பின்னர் மறு நாள் அலைச்சல். இப்படி எத்தனையோ கெடுபிடிகள் தொடருகின்றன பத்திரிகைகளில் இச் செய்திகள் வரவில்லை என்பதற்காக, 'நாங்கள் கூறி பரிகாரம் செய்து போட்டோம்' என்று அரசியல்வாதிகள் மீசை முறுக்கக் கூடாது. பிறகு சனம் முறுக்கிப்போடும்.

**கடல் வழியாக** அயலகம் செல்வோர் தொகை மறுபடியும் அதிகமாகி விட்டதாம். நில உடைமினர் படகுகளை மறித்து தலைக்கு இவ்வளவு என்று ஒரு தொகை பெற்றுக்கொண்டு, தொடர்ந்து செல்ல பச்சைக்கொடி காட்டுகிறார்களாம்.

**கிழக்கின் தனித்துவ** தலைவரின் மேடையில் அதிகாரத்தரப்பும், எதிர்த் தரப்பும் குழுமியிருந்தவை. இதேபோல தமிழ்க்கட்சிகள் செய்து பார்த்தால் என்னாகும்? எதிரணித் தலைவர் வந்தாலும், அம்மையாரை பாதுகாப்பு தரப் பார் அனுமதிக்கமாட்டினம். அந்தளவுக்கு 'டமில்' கட்சிகளில் டவுட் இருக்குதுங்கோ.

**அணுக்குண்டு** விவகாரம், அமெரிக்கத் தடை பற்றியெல்லாம் இங்குள்ள தமிழ்க் கட்சிகள் மூச்சே விடேல்லைப் பார்த்தியளோ? பிறகு எப்படி அமெரிக்க தூதரகத்திற்குப்போய் நாவினிக்கச் சுவைப்பது?! இவை போகட்டும் செந்தோழர்களான தென்னிலங்கை இடதுசாரிகள்கூட பொந்துக்குள் பதுங்கியது ஏனோ? மொஸ்கோவுக்கு போக விசாவும், பிள்ளைகளுக்கு கொலஷிப்பும் கிடைக்கும் என்பதற்காகத்தான் இவை முன்னர் புரட்சி பேசினவையாக்கும். அப்ப மட்டும் மொஸ்கோவில் மழை பெய்தால்கூட இங்கே குடைபிடிச்சுக் கொண்டு நிற்பினம். இப்ப யார் யாருக்கோ எல்லாம் குடை பிடித்துக்கொண்டு, தாங்களும் கொஞ்சம் குளிர்காய்கினம்.

**மயூராபதி அம்மன்** கோவிலுக்கு சனத் ஜயசூர்யா புதுமாப்பிள்ளையாக மணமகள் சகிதம் வந்தார். 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வரும்' என்று சொல்லுவினம். ஜயசூர்யா தெய்வத்தை கும்பிடவர, குறுக்கே இரசிகர்கள் புகுந்து பக்தி 'மூட்'டை கெடுத்துப்போட்டினம். பக்தர்கள் ஜயசூர்யாவைக் கண்டதும் அம்மனை மறந்தது நியாயமோ?

**அரியாலையில் பெண்மணி** ஒருவரை இயக்க உறுப்பினர் ஒருவர் 'டப்பு டப்பு' என்று சுட்டுப்போட்டார். ஆனாலும் அப்பெண் தப்பியதால் சுட்டவர் தமிழ்க் கட்சியான 'கழக' உறுப்பினர் என்று பொலிசுக்கு தகவல் தர, குறிப்பிட்ட உறுப்பினர் தற்போது உள்ளே இருக்கிறார். மேலிடத்துக்கு தெரியாமல் மெல்லத் தூக்கிக்கொண்டுபோய் சுட்டிருக்கிறார். அப்பெண்ணின் பக்கத்து வீட்டுக்காரர் உறுப்பினருக்கு வேண்டப்பட்டவராம்.

**தலைநகரிலும்** தலை பிளக்கும் வெய்யில். கிரிக்கெட் தொடங்கியிருப்பதால் மழை பெய்யும் என்பது பலரது நம்பிக்கை. 'தலை பிளந்தாலும் பரவாயில்லை வன்டே மாட்சுக்கு மழை வில்லனாகக்கூடாது' என்பது கிரிக்கெட் பிரியர்களது கோரிக்கை. பார்க்கலாம்- வர்ணபகவான் யார் பக்கம் என்று.

**சீனாவுக்கும்,** இந்தியாவுக்கும் இடையே சமரசம் செய்ய நம்நாட்டு உதவி கோரப்பட்டதாம். சீனா சிரிக்காமல் பகிடி விட்டிருக்கவேணும். 'தான் போக காணவில்லையாம், மூஞ்சூறு விளக்கு மாத்துடன் போச்சுதாம்' என்ட கதையாக அல்லோ இருக்குது!

**மனித** வாழ்க்கை இயந்திர வாழ்க்கையாக மாறி வருகிறது. இதன் சலிப்பை சுட்டிக்காட்டும் கவிதை ஒன்றின் துளி. உபயம்-ஸ்ரீபதி.

> **"லிஃப்ட்**
> **ஒவ்வொரு மாடியிலும் நிற்கிறது**
> **யாரும் கதவை**
> **திறப்பதுமில்லை, மூடுவதுமில்லை.**
> **யாரும்**
> **உள்ளே பேசுவதும் இல்லை!"**



படிப்பகம்

www.padippakam.com

**அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது**

184

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# இந்தியாவுடன் யுத்தம் ஏன்?

## அன்ரன் பாலசிங்கம் வெளியிட்ட தகவல்கள்

இந்தியப் படை வெளியேறியதையும், அன்னை பூபதியை நினைவு கூறுமுகமாகவும் நல்லூரில் எழுச்சி விழா ஒன்றை 21.04.1990ல் புலிகள் நடத்தினார்கள்.

யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னன் சங்கிலியனின் ராஜதானியான நல்லூரையே இந்தியப் படையை வெளியேற்றிய எழுச்சி நாளை கொண்டாட புலிகள் தெரிவு செய்திருந்தனர்.

அதன்பின்னர் யாழ் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்திலும் நல்லூரில்தான் பிரபாகரனது முக்கிய முகாமும் அமைந்திருந்தது.

நல்லூர் கூட்டத்தில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நீண்ட உரையொன்றை ஆற்றினார்.

இந்தியப் படையுடனான மாபெரும் யுத்தத்திற்கான புலிகளது விளக்கமாக அந்த உரை அமைந்திருந்தது.

அதன் காரணமாக அந்த உரையின் முக்கிய பகுதிகளை இங்கு தருகிறேன்.

புதிய தகவல்கள் பலவற்றை தனது உரையில் அன்ரன் பாலசிங்கம் வெளியிட்டார்.

"இந்திய ஆக்கிரமிப்புக்கும், அரசாங்கத்துக்கும், அட்டுழியங்களுக்கும் எதிராக தன்னுயிர் ஈந்த மகத்தான தியாகி அன்னை பூபதியை நினைவு கூறுமுகமாக எழுச்சியுடன் கூடியுள்ளோம்.

இந்த நினைவுகூறும் நிகழ்வில் இந்திய யுத்தத்தின் பின்னணியைப் பற்றிய உண்மை நிலையை விளக்க வேண்டியது, அவசியமானது.

பல இடங்களில் இந்திய வெளிநாட்டலுவல் அமைச்சர், அதிகாரிகள், 'றோ' அமைப்பின் இயக்குநர் ஆகியோருடன் பேச்சு நடத்தியவன் நான் என்பதை சகலரும் அறிவீர்கள். நாம் சிக்கலான உறவைத்தான் அவர்களுடன் கொண்டிருந்தோம்.

### இந்திய புலிகள் யுத்தம் ஏன்?

இந்திய-புலிகள் யுத்தம் பற்றி ஒரு குழப்ப நிலை மக்களிடையே நிலவுகிறது. ஏன் மோதினார்கள்? தவிர்த்திருக்க முடியாதா? இந்த பேரழிவு ஏன்? என்று பல கேள்விகள் எழுந்துள்ளன.

1983ம் ஆண்டு இனக் கலவரத்தை அடுத்து இந்தியா தமிழர் பிரச்சனையில் தலையிட்டது. இந்த தலையீடு இரண்டு வித பரிணாமத்துடன் இருந்தது. ஒன்று- ராஜ தந்திர அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் நடத்தினார்கள். இரண்டு- தமிழ் ஈழத்தில் இயங்கும் தமிழ் அமைப்புக்களுக்கு ஆயுதம் வழங்கி சிங்கள இராணுவத்துக்கு எதிராக யுத்தம் செய்யத் தூண்டினார்கள்.

**அன்று தம்பி பிரபா இந்தியாவிடம், "பல ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதம் வழங்க வேண்டாம். ஓர் இயக்கத்துக்கு ஆயுதம் வழங்கி அந்த இயக்கத்தை வளர்க்க வேண்டும். பல இயக்கங்களை வளர்ப்பதன் மூலம் இயக்க மோதல்கள் ஏற்பட்டு மக்கள் அழிய வேண்டி வரும்" என்று கூறி வந்தார்.**

இதை இந்தியா செவிமடுக்கவில்லை. தமிழீழத்தில் தனியாக ஓர் இயக்கத்தை பலம் வாய்ந்ததாக உருவாக்க இந்தியா விரும்பாததே அதற்கு காரணம்.

**மற்றைய இயக்கங்களுக்கு கூடுதல் உதவி வழங்குவதன் மூலம் புலிகளுடன் இயக்க மோதலைக் கொண்டுவந்து, புலிகளை அழித்துவிடலாம் என்று திட்டமிட்டு தமக்கு தலையாட்டும் இயக்கங்களை இந்தியா வளர்த்து வந்தது.**

தமிழீழம் சுதந்திரம் பெறுவதை அன்றிலிருந்து இன்றுவரை இந்தியா எதிர்த்து வருகிறது. தமது வல்லாதிக்கத்துக்கும், நாட்டுக்குள்ளும் இது பூகம்பத்தை ஏற்படுத்தும் என்ற சிந்தனையில் புலிகளுக்கும், அதன் இலட்சியமான தமிழீழத்துக்கும் எதிராகவே இந்திய அரசு செயல்பட்டு வந்திருக்கிறது.

பலம் வாய்ந்த இயக்கமாக புலிகள் வளர்ந்து வந்த நேரத்தில் 'றோ' மற்ற இயக்கங்களுக்கு கூடுதல் பயிற்சி அளித்து எம்முடன் மோத விட்டது. அதன் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்தி, அழித்து தலையாட்டும் பொம்மை இயக்கங்களை உருவாக்க முனைந்ததுதான் எமக்குள் ஏற்பட்ட இயக்க மோதல்கள். ஆனாலும் புலிகளின் இலட்சிய தாகம் அதைப்பலம் வாய்ந்த இயக்கமாக்கியது.

### இந்தியா வகுத்த சூழ்ச்சி திட்டம்

இந்நிலையில் இந்தியா சதி செய்ய சூழ்ச்சித்திட்டம் தயாரித்தது. வடமராட்சி தாக்குதல் எப்போது, என்ன நேரம் மேற்கொள்ளப்படும் என்ற முழு விபரமும் 'றோ' அமைப்புக்குத் தெரியும். ஆனால் 'றோ' எமக்கு பொய்த் தகவல் தந்தது.

"யாழ்-நகர் மீது ஸ்ரீலங்கா இராணுவம் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தப்போகிறது. உங்கள் வீரர்களை நகர்ப்பகுதிக்கு நகர்த்துங்கள்." என்று றோ கூறியது.

அதை நம்பிய நாம் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து எம் வீரர்களை யாழ் நகருக்கு நகர்த்தினோம். ஆனால் இதற்கு மாறாக வடமராட்சியை ஸ்ரீலங்கா அரசு தாக்கியபோது நாம் தோல்வியைத் தழுவ நேர்ந்தது.

அந்த நேரத்தில் தான் இந்தியாவில் இருந்தேன். பிரபா யாழ்ப்பாணத்தில் இருந்து எனக்குத் தகவல் தந்தார். "ஆயுதங்கள் அவசரம் வேண்டும். இந்தியாவிடம் பெற்று உடன் அனுப்புங்கள்," என்று. ஆனால் ஆயுதம்தர இந்தியா முன்வரவில்லை.

இந்த நிலையை வைத்து "புலிகள் தமிழ் மக்களைக் காப்பாற்றமாட்டார்கள். வடமராட்சி போல் எல்லாப் பகுதியிலும் நடக்கப் போகிறது" என்று இந்தியாவும் 'றோ'வும் பிரசாரம் செய்ய ஆரம்பித்தன.

இறுதியில் இலங்கையுடன் இந்தியா ஒப்பந்தம் செய்தது. அத்துடன் இராணுவமும் வந்தது.

**எம் கருத்து கவனிக்கப்படாமல் இலங்கை- இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது. அச்சமயம் பிரபாவையும், என்னையும், யோகி, திலீபன் ஆகியோரையும் ஏமாற்றி டில்லிக்கு அழைத்துச் சென்று "கறுப்புப் பூனை" காவலில் வைத்தார்கள்.**

இந்நிலையில் ஒப்பந்தத்தைப் பற்றி மிரட்டிக்கூறி ஒப்பந்தத்தில் கையெழுத்து வைக்கும்படி கேட்டார்கள்.

இந்தியத் தூதர் டிக்ஸிற் வெளிவிவகார அமைச்சர், 'றோ' அதிகாரிகள் ஒப்பந்தத்தை வாசித்துக்காட்டி ஒருமணி நேரத்தில் ஏற்க வேண்டும் என்றனர். "ராஜீவ் காந்தி ஒப்பந்தத்தில் கையெழுத்துப்போட இலங்கை போகிறார்" என்றும் கூறினார்கள்.

40 ஆண்டுகால சிக்கலான வீர வரலாற்றுடன் போராடிய தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை நிர்ணயிக்கும் ஒப்பந்தத்தை ஒருமணியில் தரவேண்டுமா? என்று அவர்களிடம் பிரபா கேட்டார். சாட்டுக்காக அவசரமாக வாசித்தோம்.

"ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனையான, 72 மணிநேரத்தில் எமது இராணுவத்தைச் கலைத்து ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும். என்பதை ஏற்கமுடியாது" என்றோம்.

தியாகத்தின் அடிப்படையில் வளர்ந்த இயக்கம், எப்படி உப்புச்சப்பற்ற மாகாண சபையை ஏற்பது? என்று கேட்டோம்.

பிரபா இந்த ஒப்பந்தத்தை ஏற்க முடியாது என்று உறுதியாகக் கூறிவிட்டார். "நீங்கள் ஏற்காதுவிட்டால் ஆறு மாதம் என்ன, ஆறு வருடங்கள் இங்கு தங்கவேண்டி வரும்" என்று மிரட்டினார்கள். "என்னைக் கொன்றாலும் சரி மக்கள் நலன் பாதிக்கும் ஒப்பந்தத்தை ஏற்கமாட்டேன்" என்று பிரபா கூறினார்.

### இதுதானா பரிசு?

பிரபாவின் நெருங்கிய நண்பரும், பல உதவிகளை வழங்கியவருமான தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். சுகவீனமாக இருந்தபோதும் அவரை அவசர அவசரமாக சென்னையில் இருந்து அழைத்துவந்து எம்முடன் பேச விட்டனர்.

**அவரிடம் பிரபா, "எப்படி அண்ணா இதை ஏற்பது? தமிழர் நலனில் அக்கறை கொண்டு இதை ஏற்கமுடியாத நிலையில் உள்ளோம்" என்று தெரிவித்தார்.**

**"எந்த முடிவைத் தம்பி எடுக்கிறாயோ அந்த முடிவை நான் ஆதரிப்பேன். உனது முடிவுதான் எனது முடிவும்" என்று எம்.ஜி.ஆர். கூறினார்.**

பின்னர் ராஜீவ் காந்திடம் நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். ராஜீவ் பிரபாவைக் கட்டி அணைத்து "மாபெரும் வீரன்" என்று கூறி மகிழ்ச்சி தெரிவித்தார். பின் ஒப்பந்தம் பற்றி பேசியபோது பிரபா- "நான் ஒப்பந்தத்தை ஏற்க முடியாது அந்த ஒப்பந்தத்தில் பல குறைபாடுகளும், பலவீனங்களும் உள்ளன. 40 ஆண்டுப் போராட்டத்தில் 15 வருடங்கள் இரத்தம் சிந்தி எம்மக்கள் போராடியதற்கு இதுதானா பரிசு?" என்று கேட்டார்.




"எப்படியாவது மாகாண சபையை ஏற்றுக்கொள்ளுங்கள் சமாதான முயற்சிகள் மேற்கொண்டு கூடுதல் அதிகாரம் பெற்றுத் தருகிறேன். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டாம். சிங்கள மக்களுக்கு கடைசிச் சந்தர்ப்பமாக இதை வழங்குவோம். உரிமை தராவிட்டால் தமிழீழத்துக்கு ஆதரவும் உதவியும் தருவேன்" என்று ராஜீவ் கூறினார்.

"வல்லரசு ஆதரவும் எமக்கு தேவை என்ற காரணத்தால் பகைக்கக்கூடாது. என்று கருதி சில சமாதான முயற்சிக்கு ஒத்துழைக்கிறோம்" என்றோம்.

**"இடைக்கால அரசு ஒன்றை உருவாக்கித்தருகிறோம். ஆயுதங்களை முழுமையாக ஒப்படைக்கத் தேவையில்லை. பழைய ஆயுதங்களை கொடுத்தால் போதும் இந்தியா உங்கள் பின்னால் நிற்கும்" என்று அவர் உறுதி அளித்ததையடுத்து தமிழீழம் திரும்பினோம்.**

சில ஆயுதங்களை ஒப்படைத்தோம். வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்று காத்திருந்தோம்.

இடைக்கால அரசு வரவில்லை. அதே நேரம் சிங்களக் குடியேற்றம் அதிகளவில் நடந்தது. சிங்களப் பொலிஸார் வந்தனர். இந்திய இராணுவம் குவிக்கப்பட்டது. அமைதிப்படையாக எல்லைப் புறக்காவலில் இந்தியப் படை ஈடுபடும் என்று இந்தியா முன்கூறியதற்கு மாறாக பெருந்தொகை இராணுவம் வந்து சேர்ந்தது.

### இந்தியா மீது சந்தேகம்

இதிலிருந்துதான் இந்தியாமீது எமக்கு சந்தேகம் எழுந்தது. எம் உரிமைகளைப் பெற்றுத்தர இவர்கள் முனையவில்லை. எம்மை முற்றாக அடக்கவே வந்துள்ளார்கள் என்பதை உணர்ந்தோம்.

**'அதேநேரம் மற்ற இயக்கங்களுக்கு 'றோ' பயிற்சி கொடுக்கிறது. எம்மை அழிக்க திட்டம் வகுக்கிறது' என்று நாம் இந்தியாவிடம் கூறியபோது இந்தியா அதை ஏற்கவில்லை.**


இதை ஆட்சேபித்தே திலீபன் உண்ணாவிரதம் மேற்கொண்டார். அச்சமயம் யாழ்ப்பாணம் வந்த இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்ஸிற்றை வந்து திலீபனுக்கு ஆறுதல் வார்த்தை கூறும்படி பிரபா கேட்டார். அவர் பிடிவாதத்தாலும், அசம்பாவத்தாலும் வரமறுத்தார். திலீபன் வீரமணம் அடைந்தான்.

**அத்துடன் எம் 17 போராளிகளின் கைது விடயத்திலும் இந்தியா மௌனம் சாதித்தது. கிளர்ச்சி வெடித்தது. இந்தியாவுடன் நாம் நேரடியாக மோதவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டோம். இந்தியா தன் நலனிலும், இலங்கையைத் தன் வல்லாதிக்கத்தில் கொண்டுவரவும் இராணுவ ரீதியில் புலிகளை அழிக்கவும்- கொண்டிருந்த திட்டம் அம்பலமானது.**

இரண்டு வருடமாகப் போர் நடந்தது. இந்தியாவை எவ்வகையிலும் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற அவசர தேவையின் நிமித்தம் ஜனாதிபதி எம்முடன் நிபந்தனையற்ற பேச்சுக்கு வந்தார். அரசியல், ராஜதந்திர அடிப்படையில் செயல்பட்ட இந்தியா அபகீர்த்தியுடன் புலிகள்- அரசு பேச்சுவார்த்தையுடன் வெளியேறியது.

உலக வரலாற்றில் வியட்நாம் போர் முதல் பல நாடுகளின் போர் எல்லாம் மற்றைய நாடுகளின் உதவியுடன் வெற்றி பெற்றன. எம்போர் எந்த நாட்டின் உதவியும் இன்றி போராளிகளின் கணக்கில் அடங்கா தியாகத்தாலும், மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாலும் இன்று வெற்றி பெற்றுள்ளது." என்று அன்ரன் பாலசிங்கம் தனது உரையில் கூறினார்.

(தொடர்ந்து வரும்)




நன்றி: ஈழநாதம்-1990

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

## ஜனநாயகம்-மனித உரிமை-சிவில் நிர்வாகம்

**பா**ரிஸ் மாநாட்டை முன்னிட்டே கொழும்புக் கைதுகள் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு விசாரணை நடத்துவதுபோல பாசாங்கு செய்தது என்று சென்றவாரம் தெரிவித்திருந்தோம்.

**இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உடனுக்குடன் விசாரித்து, தக்க நடவடிக்கை எடுப்பதாகக் காண்பிப்பதே அந்த விசாரணை நாடகத்தின் நோக்கம் என்பதையும் குறிப்பிட்டிருந்தோம்.**

**பாரிஸ் மாநாட்டில் நீதியமைச்சர் ஆற்றிய உரை நாம் கூறிய கருத்துக்களை துல்லியமாக உறுதிப்படுத்துவதாக அமைந்திருந்தது.**

"கொழும்புக் கைதுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகுந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மனித உரிமைகள் விடயத்தில் அரசாங்கம் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயற்படுகிறது," என்று நீதியமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ் உள்ளூராட்சித் தேர்தல்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன, என்பதையும் தனது உரையில் நீதியமைச்சர் குறிப்பிடத் தவறவில்லை.

யாழ் குடாநாட்டில் நீர், மின்சாரம், கல்வி போன்ற சேவைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், சிவில் நிர்வாகம் ஏற்பட்டு வருவதாகவும் நீதியமைச்சர் யாழ் நிலவரம் பற்றி விளக்கமளித்திருந்தார்.

**தமிழ்க் கட்சிகளின் துணையுடன் ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளே பாரிஸ் மாநாட்டில் நீதியமைச்சரின் உரைக்கு கருப்பொருளாகவும், அடிப்படையாகவும் அமைந்திருந்தன.**

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்டமையானது அதற்கு முன்னர் அங்கு நிலவிய இராணுவ நிர்வாகத்தின் இறுக்கத்தை எவ்வகையிலும் தளர்த்தவில்லை.

**உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேர்தல் மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படாவிட்டாலும் அவை இயங்கிக்கொண்டே இருக்கும். ஆணையாளர்களும், அதிகாரிகளும் தமது கடமைகளைச் செய்துகொண்டே இருப்பர்.**

யாழ் மாநகர சபையை எடுத்துக் கொள்வோமேயானால், மேயருக்குரிய பணிகளை மாநகர ஆணையாளர் மேற்கொண்டு வருவார்.

தற்போதுள்ள சூழ்நிலையில், குறிப்பிட்ட ஆணையாளர்களாலும், அதிகாரிகளாலும் செய்ய முடியாத பணிகளை, தேர்தல் மூலம் தெரிவாகும் பிரதிநிதிகள் செய்து முடிக்கக்கூடிய சூழல் நிலவவில்லை.

**உள்ளூராட்சிச் சபை அதிகாரிகளாக இருந்தாலும், பிரதிநிதிகளாக இருந்தாலும் இராணுவ நிர்வாகத்தை, இராணுவ விருப்பு- வெறுப்பு, இராணுவ நலன் என்பவற்றைத் தாண்டி தமது செயற்பாடுகளை மேற்கொள்ள ஒருபோதும் முடியாது.**

வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டாலும்கூட இராணுவ நலன்களுக்கு மாறாக அச் சபையால் செயற்படமுடியாது.

யாழ் குடாநாட்டில் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களால் சிபாரிசு செய்யப்பட்டு வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட சமுர்த்தி ஊழியர்கள் இராணுவ அதிகாரியின் உத்தரவின்பேரில் இடை நிறுத்தப்பட்டிருந்தனர்.

சமுர்த்தி அமைச்சு வழங்கிய நியமனங்களைக்கூட குறுக்கிட்டுத் தடுக்கும் அதிகாரம் வடக்கு-கிழக்கைப் பொறுத்தவரை இராணுவத்தினருக்கு இருக்கிறது.

**தொண்டர் ஆசிரிய நியமனம்கூட இராணுவ அதிகாரியின் தலையீட்டால் நிறுத்தப்பட்டது. யாழ் குடாநாட்டில் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் ஈ.பி.டி.பி.யினால் தலையீடுகளைத் தடுக்க முடியாதிருந்தது.**

இராணுவ அதிகாரிகளுடன் பவ்வியமாகப்பேசி, தாம் சிபாரிசு செய்தவர்கள் புலிகள் அல்ல என்று ஆதாரங்கள் காண்பித்தே இராணுவ அதிகாரிகளது அனுமதி பெறுவதற்கு முயற்சித்தனர்.

**திருமலையில் நகரசபையால் வழங்கப்பட்ட பழைய சந்தைக்கான குத்தகையை அந்த மாவட்ட இராணுவப் பிரிகேடியர் இரத்துச் செய்திருந்தார். அதன் பின்னர் தற்போது நகரசபையால் கட்டப்பட்டுள்ள புதிய சந்தையைத் திறப்பதற்கும் பிரிகேடியர் தடை விதித்துள்ளார்.**

பழைய சந்தைக் குத்தகை எடுத்துள்ள சிங்கள முதலாளியும், அச் சந்தையில் வியாபாரம் செய்யும் சிங்கள வியாபாரிகளும் புதிய சந்தை திறக்கப்பட்டால் பாதிக்கப்படுவார்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே புதியசந்தை திறப்பதை பிரிகேடியர் தடுத்து வருகிறார்.

**தாம் போரிடுவது என்பது வெறுமனே அரசின் கட்டளைப்படியல்ல; தமது இனத்தின் நலன்களையும், மேலாதிக்கத்தையும் கட்டிக் காப்பதற்கே என்பதையும் படைத்தரப்பினர் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியே வருகின்றனர்.**

திருமலைச் சந்தை விவகாரம் படைத்தரப்பின் உள்ளே நிலவும் பேரினவாத குணாம்சத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றேயாகும்.

**யாழ் குடாநாட்டிலும் தம்மை நிலைப்படுத்திய சூட்டோடு சூடாக பௌத்த ஆலயங்களைப் புனரமைப்பதில் படைத்தரப்பு ஆர்வம் காட்டியிருந்தது.**

வன்னியில் 'பறையனாங்குளம்' என்பதை 'சப்புமல்புர' என்று படையினர் பெயர் மாற்றம் செய்திருந்தனர்.

அது தொடர்பாக சர்ச்சைகள் ஏற்பட்டதால், தமக்குத் தெரியாமல் நடந்ததாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்தார்.

**அதன்பின்பும் வன்னியில் படையினர் நிலைகொண்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பெயர்ப் பலகைகள் சிங்கள மயப்படுத்தலின் வெளிப்பாடுகளாகவே அமைந்துள்ளன.**

இவற்றையெல்லாம் தனிச் சம்பவங்களாகவோ, தற்செயல் நிகழ்வுகளாகவோ கருதுவதும், இச் சம்பவங்கள் சிலவற்றுக்கு அரசு பரிகாரம் காணும்போது நீதி கிடைத்துவிட்டதாக புளகாங்கிப்பதும் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும்.

அரசின் நலனுக்காகவும், அதன் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றவுமே ஆயுதப் படைகள் போரிடுகின்றன.

**இலங்கை அரசின் அரசியல் நோக்கம் என்ன? இலங்கைத் தீவில் பௌத்த-சிங்கள மேலாதிக்கத்தை பாதுகாப்பதும்; அதற்கு சரிசமமாக தமிழ் தேசிய இனம் உருவாகி விடாமல் தடுக்கக்கூடிய சூழலை ஏற்படுத்துவதேயாகும்.**

வடக்கு-கிழக்கை பிரித்து துண்டுபோடுவதன் மூலம் தமிழ் தேசிய இனத்தின் பலத்தை சிதைப்பதுடன், நாளடைவில் தேசிய தனித்துவத்தை இழக்கவும் செய்யலாம் என்பதே பேரினவாதத்தின் அடிப்படையான நோக்கமாகும்.

**இந்த அடிப்படை நோக்கத்தை எட்டவேண்டுமானால் தமிழ் பேசும் தரப்பை பலவீனமாக்க வேண்டும். சுருக்கமாக சொல்வதாயின் கொடுப்பதை வாங்கி தலை குனிந்து நிற்கும் அளவுக்குப் பலவீனமாக்க வேண்டும்.**

தமிழ் பேசும் தரப்பின் மத்தியில் இருந்து ஆயுதப் போராட்டம் தோற்றம் கொண்டிருக்காதுவிட்டால், எப்போதோ பேரினவாதம் தனது அடிப்படை நோக்கத்தை ஈடேற்றியிருக்கும்.

**கிழக்கு மட்டுமன்றி, வடக்கின் பெரும்பகுதியும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற வெள்ளத்தால் அள்ளுண்டு போயிருக்கும். தமிழ் தேசிய இனம் படிப்படியாக சிங்களமயமாகி இன்று காணாமல் போயிருக்கும்.**

1983க்கு பின்னர் தீவிரம் பெற்ற ஆயுதப் போராட்டமும், அதன் வீச்சுமே இன்று



### மாயமான்களும்-மயக்கங்களும்

பாரிய நெருக்கடிகள் இடையிலும் தமது தனித்துவத்தை தமிழ்தேசிய இனம் இழக்காமலிருப்பதற்கு பிரதான காரணமாகும்.

**அதுமட்டுமன்றி, தற்போதுகூட சந்திரிக்கா அரசாங்கம் தன்னிடமுள்ள அரைகுறையான தீர்வுப் பொதியை தமிழ் பேசும் தரப்பிடம் திணிப்பதற்கும், சர்வசன வாக்கெடுப்பு நடத்தி, மக்களின் அங்கீகாரம் பெற்ற பொதியாக உலகை நம்பவைப்பதற்கும் தடையாக இருப்பது புலிகளின் ஆயுத பலமேயாகும்.**

எனவேதான், அரசாங்கமும், பேரினவாதமும் கைகோர்த்து நின்று, தமது மூல உபாயத்தை நிறைவேற்றும் பிரதான கருவியாக படைத்தரப்பை உசுப்பிவிட்டுள்ளனர்; இராணுவத்தீர்வையே நம்பியுள்ளனர்.

**ஆனால், மூல உபாயம் என்பது நீண்டகால அடிப்படையிலானது. தமிழ் பேசும் தரப்பை பலவீனமாக்கும் மூல உபாயம் புலிகளை ஓரம்கட்டி வீழ்த்துவது மூலமே நிறைவேறும். அது குறுகிய காலத்தில் சாத்தியமாகக்கூடிய ஒன்றல்ல என்பதை 'ஜயசிக்குறுய்' களமுனை நன்கு புலப்படுத்தியுள்ளது.**

எனவே மூல உபாயத்தை நிறைவேற்றி முடிக்கும்வரை, உலக அனுதாபம், உலக உதவிகள், புலிகளின் பலத்திற்கு அடித்தளமாக உள்ள மக்களிடம் இருந்து புலிகளை தனிமைப்படுத்தல் போன்ற பல தேவைகள் ஆட்சியாளருக்கு அவசியமாகின்றன.

**இத் தேவைகளை நிறைவேற்ற ஆட்சியாளர்கள் வகுக்கும் உத்திகளே தந்திரோபாயங்கள் அல்லது நடைமுறைத் தந்திரங்கள் என்று அழைக்கப்படும்.**

உலக அனுதாபம், உலக உதவி என்பவற்றை பெறுவதற்காக மனித உரிமை ஆணைக்குழுக்கள், விசாரணைக் கமிஷன்கள் என்பவற்றை அரசே நியமிக்கும். இவற்றுக்கு நியமிக்கப்படுவோர் ஆட்சியாளரின் நம்பிக்கையை பெற்றவர்களாகவோ, அல்லது ஆட்சியாளருடன் முரண்டு பிடிக்காத, ஆட்சியாளரது விருப்பத்திற்கு மாறாக நடக்க விரும்பாதவர்களாகவுமே இருப்பர்.

**கொழும்புக் கைதுகள் பற்றிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த மனித உரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்த தமிழர் ஒருவர், 'ஜனாதிபதியின் கவனத்திற்கு இவ்விடயங்களை கொண்டு செல்லாததே காரணம்' என்று சிறுபிள்ளைத்தனமாக விளக்கம் அளித்திருந்தார். எத்தகைய கண்ணோட்டம், புரிதல் உள்ளவர்கள் அரசின் மனித உரிமை ஆணைக்குழு, விசாரணைக் குழு போன்றவற்றுக்கு நியமிக்கப்படுகிறார்கள் என்பதற்கு மேற்கண்ட விளக்கம் ஒரு சிறு உதாரணமாகும்.**

மனித உரிமை மீறல்கள் உலகின் கவனத்திற்கு செல்லும் அளவுக்கு பாரியதாகும்போது, உலக அதிருப்தியை தணிக்கவே மனித உரிமை ஆணைக்குழு, விசாரணைக்குழு போன்றவை அரசாங்கங்களுக்கு உதவிவந்துள்ளன.

பத்தில் ஒரு அத்துமீறலுக்கு பரிகாரம் செய்வதுகூட, ஏனைய ஒன்பது அத்துமீறல்களை மூடி மறைப்பதான உத்தியேயாகும்.

**கொழும்புக் கைதுகள் தொடர்பாக பொலிஸ் அதிகாரிகளிடம் மனித உரிமை ஆணைக்குழு விளக்கம் கோரியதாக செய்திகள் வெளியான நான்காவது நாள் நள்ளிரவில் கொழும்பில் தமிழர் பகுதிகள் பலவற்றை படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியதோடு, முப்பதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகளையும் அள்ளிச்சென்றனர்.**

ஆக, மனித உரிமை ஆணைக்குழு போன்றவை இலங்கையில் மனித உரிமையை அரசு பாதுகாக்கிறது என்று உலகை நம்பவைக்க உருவாக்கப்பட்ட அமைப்புக்களாகவே உள்ளன.

**மனித உரிமை பேச்சுக்கள் எந்தளவுக்கு மாயையாக உள்ளனவோ, அதே போன்றதே ஜனநாயகம் பற்றிய மாயைகளுமாகும்.**

தமது மூல உபாயத்துக்கு பாதகமில்லாத வகையிலான ஜனநாயக உரிமைகளை மட்டுமே தமிழ் பேசும் மக்களுக்கு ஆட்சியாளர்கள் விட்டுவைத்துள்ளனர்.

**மிக முக்கியமான அரசியல், ஜனநாயக உரிமைகளை அவசரகால சட்டம், பயங்கரவாத சட்டம், பிரிவினைத் தடைச்சட்டம் போன்றவற்றின் மூலம் தடைசெய்தே உள்ளனர்.**

தேசிய இனம் தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கும் உரிமையே சுயநிர்ணய உரிமை என்றழைக்கப்படுகிறது. ஆனால் பிரிவினை தடைச் சட்டம் அந்த ஜனநாயக உரிமையை தடை செய்துள்ளது.

தமது வீடுகளுக்குள் முன் அனுமதி இன்றி யாரையும் அனுமதிக்காதிருக்க சாதாரண பொதுமக்களுக்கு ஜனநாயக உரிமை உண்டு. அவசரகால சட்டம் அதனை பறித்தெடுக்கிறது.

**ஜனநாயகம் என்பது தேர்தல் மட்டுமல்ல, தேர்தலில் போட்டியிடுவது மட்டுமல்ல, ஜனநாயகத்தின் ஒரு அம்சம் மட்டுமே தேர்தல்களாகும்.**

இத் தேர்தல்களைக்கூட தமக்கு சாதகமான சூழலுக்காக மட்டுமே அரசு நடத்துகிறது. யாழில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்திய ஆட்சியாளர்கள், வடக்கு-கிழக்கு மாகாணசபை தேர்தலை நடத்த மறுத்துள்ளனர்.

**இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணசபை தேர்தலை நடத்துவது தமது மூல உபாயத்துக்கு பாதகமாகிவிடும் என்று கருதியே தேர்தல் நடத்த மறுத்துள்ளனர்.**

இதனை உணராததுபோல: உள்ளூராட்சி தேர்தலை ஜனநாயக வெளிப்பாடாகவும், அதில் போட்டியிட்டோரை ஜனநாயகவாதிகளாகவும் சித்தரித்து தமிழ்க் கட்சிகள் போலி ஜனநாயகத்திற்கு புகழாரம் சூட்டி வருகின்றன. வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு பணிவான வேண்டுகோளும் விடுத்துள்ளன.

அரசின் குணம் என்ன என்பதைக்கூட புரியாதளவுக்கு தமிழ்க் கட்சிகள் கற்றுக் குட்டிக் கட்சிகளாக மாறிவிட்டதன் அடையாளமே வடக்கு-கிழக்கு மாகாணசபை தேர்தலை நடத்துமாறு கோரியிருப்பதாகும்.

**இத்தேர்தலை நடத்தினால் மேலும் அரசியல்தீர்வை இழுத்தடிக்கலாம் என்று தெரிந்தும் ஆட்சியாளர்கள் நடத்த முன்வராமல் உள்ளமையானது, தமிழ் பேசும் மக்களது தாயகத்தை துண்டுபோடும் திட்டத்தில் அவர்களுக்குள்ள உறுதியையே காண்பித்துள்ளது.**

இதன்பின்னரும் கண் இருந்தும் குருடராய், காது இருந்தும் செவிடராய் சிவில் நிர்வாகம் பற்றிய கனவுகளிலும், அடிப்படைப் பிரச்சனைகளை தீர்க்க முடியும் என்று பல்லவி பாடிக் கொண்டும் தமிழ்க் கட்சிகள் இருக்கப்போகின்றனவா?

பாரிஸ் மாநாட்டில் அரசுக்கு கடன் உதவி பெற்றுக் கொடுத்தது தவிர, யாழ் உள்ளூராட்சித் தேர்தலால் யாதொரு பலனும் அங்குள்ள மக்களுக்கு கிடைக்கவில்லை.

எனவே, அரசின் ஜனநாயகம், மனித உரிமை, சிவில் நிர்வாகம் போன்ற மாயமான்களின் பின்னால் ஓடி, தாமும் ஏமாந்து, உலகையும் ஏமாற்ற துணை போய்வருகின்றன தமிழ்க் கட்சிகள்.

---

# சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

## தூது போன கட்சி

**இ**ந்தியாவுக்கு விஜயம் செய்துவிட்டு வந்துள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் பிரேமச்சந்திரன். இந்த இரகசிய விஜயத்தின் பின்னணியில் பல சங்கதிகள் உள்ளன.

பொதுஜன முன்னணியின் அங்கத்தவர் போன்றே மாறிவிட்டவர் சுரேஸ் பிரேமச் சந்திரன்.

கொழும்பு சமிட் பிளேஸில் ஆடம்பரமான வீடொன்று சந்திரிக்கா அரசினால் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. கொழும்பில் அரசுக்கு சொந்தமான சிராவஸ்தியில் எவ்வித கட்டணமும் இல்லாமல் அலுவலகம் நடத்தவும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. சில மாதங்களுக்கு முன்னர்தான் அதனைக் காலி செய்தனர்.

இது தவிர மீன்பிடி அமைச்சின் ஆலோசகர் என்ற பதவி வழங்கப்பட்டதுடன், அதன் பெயரில் வாகனமும் தரப்பட்டது.

அமைச்சின் ஆலோசகர் பதவிகள் என்பது, ஆளும் கட்சியினர் தமது நெருங்கிய ஆதரவாளர்களுக்கு மாதாமாதம் அரசுக் கணக்கில் ஊதியம் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்படுபவையாகும்.

தேர்தல்களில் தோல்வி கண்ட தமது விசுவாசிகள், தேர்தலில் போட்டியிட ரிக்கெட் கொடுக்க முடியாதவர்கள் போன்றோருக்காக, அவர்களைத் திருப்திப்படுத்த இவ்வாறான பதவிகள் உருவாக்கப்படுவது வழக்கம்.

அதனால்தான் மீன்பிடி பற்றியே தெரியாத சுரேஸ் பிரேமசந்திரனுக்கு மீன்பிடி அமைச்சு ஆலோசனை பதவியும் வழங்கப்பட்டது.

கட்சித் தலைவரே இவ்வாறான பதவியை ஏற்பதா? என்று கடசிக்குள் பிரச்சனை எழுந்தும், விடாமல் தொங்கிக் கொண்டார் சுரேஸ் பிரேமச்சந்திரன். மாதாந்தம் 50 ஆயிரம் வரை தேறுவதாக கேள்வி.

அது தவிர மீனவர்களுக்கு வழங்க என்று மீன்பிடிவலைகள் பெற்றுக் கொள்ளலாம்.

இதுதவிர மட்டக்களப்பில் ராசிக் தலைமையில் இயங்கும் குழுவினர் மூலம் மட்டக்களப்பு மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கான நிதி உதவி அரசிடம் பெறப்படுகிறது. துணைப் படை என்ற பெயரில் ராசிக் குழுவினரை பதிவு செய்துவிட்டு, அவர்களுக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். கூறிவருகிறது.

ஈ.பி.டி.பி, புளொட் ஆகிய கட்சிகளிடம் எம்.பிகள் உள்ளனர். அதனால் அரசுக்கு அவர்களது தேவை இருக்கிறது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் தேவை அரசுக்கு கிடையாது. ஆனாலும் பொதுஜன முன்னணிக்கு ஆதரவாக கடந்த காலத்தில் செயற்பட்டதை நினைவூட்டி, அதற்கு பிரதியுபகாரமாக சுரேஸ் பிரேமச்சந்திரன் பெற்ற உதவிகளே மேற்கண்டவை.

ஆனாலும், தீர்வு யோசனை பற்றிய பேச்சுக்களுக்கு அரசாங்கம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பை அழைப்பதில்லை.

அதிலும் உள்ளூராட்சித் தேர்தலில் படுதோல்வி கண்ட பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பற்றிய அரசின் கண்ணோட்டமும் அலட்சியக் கண்ணோட்டமாகிவிட்டது.

மோசடியான தேர்தல், அதுதான் தோற்று விட்டோம் என்று கூறவும் முடியாது. ஏனெனில் சந்திரிக்கா அரசே நடத்திய தேர்தல் இது.

மீன்பிடி அமைச்சின் ஆலோசகர் பதவியை மீளப்பெறுவது பற்றி அரசாங்கம் யோசித்திருக்கிறது. இத் தகவல் எப்படியோ சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு எட்டிவிட்டதாம்.

இதையும் விட்டால் கட்சிக்குள் தனக்கு மதிப்பிருக்காது. ஏற்கனவே கட்சிச் சொத்துக்களை தனது பெயரில் சுரேஸ் வைத்திருப்பதை யிட்டு அதிருப்தி ஏற்பட்டுள்ளது. கணக்கு காட்டுமாறு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்பிரச்சனையால் கேதீஸ் லோகநாதன் போன்றோர் கட்சியைவிட்டு விலகியுள்ளனர்.

சுரேஸ் பிரேமச்சந்திரனை நீக்கிவிட்டு வரதராஜப் பெருமாளை தலைமைப் பொறுப்புக்கு கொண்டுவர கட்சிக்குள் ஆதரவு ஏற்பட்டுள்ளது.



ஜோர்ஜ் பெர்னாண்டஸ்

என்னதான் குற்றம் குறை இருந்தாலும், நிதியை கையாடாதவர், கட்சிச் சொத்துக்களை தன் பெயரில் வைத்துக்கொள்ளாதவர் என்ற பெயர் வரதராஜப் பெருமாளுக்கு இருக்கிறது.

எனவே, தனது ஆலோசகர் பதவியையும் தலைமைப் பதவியையும் தக்க வைத்துக்கொள்ள சுரேஸ் பிரேமச்சந்திரன் மேற்கொண்ட உலா தான் இந்திய உலா.

பாரதிய ஜனதா அரசிடம் புலி எதிர்ப்பு பிரசாரம் செய்வதற்காகவும், இலங்கை தொடர்பான பாரதிய ஜனதா அரசின் கொள்கையை நாடி பிடித்தறிந்து வந்து அதிகாரத் தரப்பிடம் விளக்குவதற்காகவுமே இந்தியாவுக்கு விஜயம் செய்தார்.

'அரசுக்கான தூது' என்று அதிகாரத்தரப்பாருக்கு கூறிவிட்டே புறப்பட்டுச் சென்றாராம்.

கட்சியில் முக்கியமான எவரையும் உடன் அழைத்துச் செல்லவில்லை. தனது வியாபாரக் கூட்டாளியான வில்சன் என்பவரை மட்டுமே அழைத்துப் போயுள்ளார்.

ஆனால், பாரதிய ஜனதா பிரமுகர்கள் சிலரைத்தான் சந்திக்க முடிந்ததாம். அரசுத் தலைவர்கள் சந்திக்க முன்வரவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்றதும் வெளியுறவுத்துறை அதிகாரிகள் கூட நமட்டுச் சிரிப்புடன் நழுவி விட்டனராம்.

பல நாட்கள் புதுடில்லியில் நின்றபோதும், ராஜஸ்தானில் உள்ள வரதராஜப் பெருமாளை எட்டிக்கூடப் பார்க்கவில்லை சுரேஸ் பிரேமச் சந்திரன்.

தமிழ்க் கட்சித்தலைவர்களது பலவீனங்கள் எப்படியெல்லாம் அரசுக்கு உதவுகின்றன பார்த்தீர்களா.

அதேவேளை இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னான்டஸ் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா? 'எனது பதவியை இழந்தாலும் இழப்பேனே தவிர, இலங்கைத் தமிழர்களது உரிமைக்காக குரல் கொடுப்பதை நிறுத்த மாட்டேன்!'



படிப்பகம்

www.padippakam.com

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 12

**கடந்தவாரம்**

**உகண்டாவில்
ஜனாதிபதி ஒபேடேக்கு
விசுவாசமான துருப்புக்கள்
இடி அமீன்
விசுவாசப்படைகளால்
கொல்லப்படுகின்றன.
இடி—அமீனின்
கைகள் மேலோங்குகின்றன....**

**இனி....**

# இடி அமீன்

இடி அமீனின் படைகளிடம் இருந்து தப்புவதற்காக ஒபேடேக்கு விசுவாசமான படைவீரர்களும், அதிகாரிகளும் நாட்டைவிட்டு ஓடினார்கள்.

உகண்டா எல்லையைக் கடந்து சூடான் நாட்டுக்குள் புகுந்தவர்களுக்கு பயங்கரம் காத்திருந்தது.

இடி அமீனின் உதவியுடன் செயற்பட்டுவந்த சூடான் கிளர்ச்சியாளர்களின் துப்பாக்கிகள் ரவைகளைத் துப்பின.

தப்பியோடிய படையினரும், அதிகாரிகளும் எல்லைப்புறத்தில் பிணமாகச் சரிந்தனர்.

**"என் எதிரிகள் எங்கு போயும் தப்ப முடியாது. உகண்டாவிற்கு வெளியேயும் இடி அமீனின் கைகள் நீளும்!"** என்று தன் அதிகாரிகளிடம் கூறிச்சிரித்தான் அமீன்.

ஒபேடேயின் விசுவாசமான படைகள் கொல்லப்பட்ட செய்திகள் பெரியளவில் மக்களை எட்டவில்லை.

முன்னர் துணிச்சலாக முழக்கமிட்டு தோள்தட்டிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஓடி ஒளிந்துகொண்டனர். பலர் இடி அமீனிடம் சரணடைந்தனர்.

பத்திரிகையாளர்களும்- இனிமேல் இடி அமீன் வைத்ததே சட்டம் என்று தெரிந்ததும், பத்திரிகை சுதந்திரத்தை மூட்டை கட்டிப்போட்டுவிட்டனர்.

உகண்டாவின் பத்திரிகையாளர் அனைவரையும் நள்ளிரவு நேரத்தில் சந்திக்க அழைத்திருந்தான் இடி அமீன்.

இடி அமீனை கண்டதுமே எல்லோருக்கும் தூக்கக் கலக்கம் இருந்த இடம் தெரியாமல் பறந்துபோனது.

இடி அமீனுக்கு மட்டும் ஒரு நாற்காலி போடப்பட்டிருந்தது.

பத்திரிகையாளர்கள் அவனைச் சுற்றி தரையில் இருக்க வைக்கப்பட்டனர்.

வேறு ஒரு சந்தர்ப்பம் என்றால், வேறு ஒருவர் முன்பாக என்றால் போர்க்கொடி உயர்த்தியிருப்பர்.

இப்போது போர்க்கொடி உயர்த்தினால் தங்களை குழிவெட்டி புதைத்துவிடவும் அமீன் தயங்கமாட்டான் என்பது தெரியும்.

அனைவரையும் ஒரு பார்வையால் மேய்ந்துவிட்டு, **"உங்களுக்கெல்லாம் பத்திரிகைச் சுதந்திரம் வேண்டுமா, வேண்டாமா?"** என்று கேட்டான். கேட்ட தொனியை வைத்து கேலி செய்கிறானா, உண்மையாகக் கேட்கிறானா? என்று ஊகிக்க முடியாதிருந்தது.

**"எழுதமட்டும்தான் தெரியுமா? பேச வராதா?"** என்று அதட்டலாக அமீன் கேட்ட கேள்வியில் ஆடிப் போனார்கள் பத்திரிகையாளர்கள்.

ஆனாலும் பதில் மட்டும் சொல்ல வில்லை. வேண்டும் என்று சொன்னாலும் ஆபத்து. வேண்டாம் என்று கூறினாலும் ஆபத்து.

அவர்கள் முழிப்பதைப் பார்த்து விட்டு அமீனே, **"உங்களுக்கு பத்திரிகைச் சுதந்திரம் தருகிறேன். தாராளமாக எழுதுங்கள், தாராளமாக வசை பாடுங்கள், எதிர்ப்புக் குரல் கொடுங்கள். ஒரு தடையும் கிடையாது!"** என்றான்.

அந்த வார்த்தைகளை சற்றும் எதிர் பாராத பத்திரிகையாளர்கள் தங்களை மறந்து கரகோசம் செய்தனர்.

அவர்களது கரகோசம் ஓய்ந்ததும் இடி அமீன் கூறியது ஒவ்வொன்றும் ஒவ்வொரு வெடிகுண்டாக விழுந்தது.

**"என்னைப்பற்றி நன்றாக எழுத உங்களுக்கு சுதந்திரம் தருகிறேன். ஒபேடேயை திட்டித் தீர்க்கவும் சுதந்திரம் தருகிறேன். ஒபேடே ஆட்சிக் காலத்தை அங்குலம் அங்குலமாக ஆராய்ந்து கிழித்துத் தள்ளுங்கள், இது என் ஆசையல்ல, உகண்டா மக்களின் ஆசை. மக்களின் ஆசையை மதிக்காதவர்களை இந்த இடி அமீன் மன்னிக்கமாட்டான்! புரிகிறதா? ம..ன்...னி...க்...க...மா...ட்...டா....ன்!"** என்று அவன் அழுத்திச் சொன்னவிதமே பத்திரிகையாளர்களைக் கலக்கிவிட்டது.

அவர்கள் முகம் வெளிறிப்போய் மூச்சைப் பிடித்துக்கொண்டு அமர்ந்திருக்க, **"முன்னர் கரகோசம் செய்தீர்கள், இப்போது சத்தத்தையே காணோமே? என்ன, எனக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறீர்களா?"**

சட்டென்று மௌனம் உடைத்து அனைவரும் ஒரே குரலில்: "இல்லை யில்லை!" என்றதும், **"கரகோசம்..."** என்று அமீன் கேட்டதற்கு முன்பைவிட வேகமாக, உரமாக கரகோசம் எழுந்தது.

மறுநாள் பத்திரிகைகளில் "ஜனாதிபதி ஒபேடே உல்லாசப் பேர்வழி. சிங்கப்பூரில் சல்லாபம் புரிகிறார். நாடு சீரழிகிறது. நாட்டைக் காக்க யார் இருக்கிறார்கள்?" என்று கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டன.

மக்களுக்கும் அது நியாயமான கேள்வி போலவே தெரிந்தது.

"அதுதானே! யார் இருக்கிறார்கள்? நாட்டை ஆள யார் இருக்கிறார்கள்?" என்று மக்கள் தமக்குள் பேசிக்கொள்ள, மறுநாள் பத்திரிகைகள் அனைத்திலும் கொட்டை எழுத்துக்களில் ஒரே செய்தி தலைப்புச் செய்தியாக வந்தது.

**"நாட்டின் ஜனாதிபதியாக பொறுப்பேற்குமாறு இராணுவத் தளபதி இடி அமீனுக்கு நெருக்குதல்!**

**பதவியை ஏற்பதா? தளபதி இடி அமீன் தீவிர ஆலோசனை!"**



'இடி அமீன்தான் ஜனாதிபதியாக வேண்டும்!' என்று மக்கள் பேசிக்கொள்ளத் தொடங்கிவிட்டனர்.

ஒபேடேமீது மக்களுக்கு இருந்த சலிப்பும், இடி அமீனின் நாசூக்கான தந்திரங்களும் ஒன்று கலந்து ஒத்துழைத்தன.

தன் எதிரிகளை ஒழித்துக் கட்டுவதில் கொடூரமான வழிமுறைகளை பின்பற்றிய இடி அமீன் ஆட்சியைப் பிடிப்பதில் மட்டும் நெளிவு சுழிவான வழிகளை கையாண்டான்.

இறுதியாக இடி அமீன் உகண்டாவின் ஜனாதிபதியானான்.

**'உகண்டாவை ஒருநாள் ஆளப் போகிறேன்!'** என்று இடி அமீன் கண்ட கனவு பலித்தது.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற தினத்தின் இரவு தனது இரண்டாவது மனைவியின் வீட்டில் இருந்தான் அமீன்.

பல நாட்களாக ஓயாமல், உறக்கமில்லாமல் உழைத்த உடலுக்கும், மனதுக்கும் ஓய்வு தேவைப்பட்டது.



இரண்டாவது மனைவியுடன்

## தருவது ரசிகன்

ஓய்வு தேவைப்படும்போது அமீன் நாடுவது பெண்களை.

மூன்றாவது திருமணம் செய்துகொண்ட தகவலை அறிந்த இரண்டாவது மனைவி அமீனைக் கண்டதும் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டாள்.

**"நாட்டின் ஜனாதிபதியாக வந்திருக்கிறேன், வாடி!"** என்றான்.

"ஏன், அவளிடம் போக வேண்டியது தானே?"

**"எவளிடம்?"**

"மூன்றாவதாக ஒருத்தியை பிடித்தீர்களே அவளிடம்தான்."

**"மூன்றாவதாக என்ன-முப்பதாவதாகக் கூட ஒருத்தியைப் பிடிப்பேன்! எனக்குப் போதும் என்று படும்வரை பிடிப்பேன். உனக்கென்ன, வாடி..."** என்றான். அவள் தொடர்ந்து முரண்டு பிடிக்க, அமீனின் முரட்டுக்கை அவள் கன்னத்தை பதம் பார்த்தது.

அப்படியே சரிந்து கட்டிலில் விழுந்தவள், பயத்தில் மிரண்டு பார்த்துக் கொண்டிருக்க, அவனது உடைகளை அவசரமாகக் களைந்தபடி சொன்னான்: **"பார்த்துக்கொண்டிரு போதும்."**

அவள் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. அந்த இராட்சத உடம்பு அவளுக்குத் தேவையாக இருந்தது. அந்த உடம்பை மூன்றாவதாக ஒருத்தியும் பங்கு போடுவது தான் பொறாமையாக இருந்தது.

தன்மேல் கவிழ்ந்தவனை வளைத்து, அவன் பிடறியை அழுத்தி, உதடுகளை தன் உதடுகளோடு இறுக்கிக் கொண்டாள்.

பின்னர் காதுக்குள் கேட்டாள்? **"உனக்கு எத் தனைபேர் தேவை?"** அவளை கழுத்தில் முகர்ந்து கொண்டு, கைகளை பரவவிட்டுக்கொண்டு, **"உடம்பு அடங்கும் வரை தேவை! வாயை மூடடி!"** என்றான்.

★★

தனது அலுவலகத்துக்கு அமீன் சென்றுகொண்டிருக்கும்போது கார்ச்சாரதியிடம், **"மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள்?"** என்று கேட்டான்.

"நேற்று ஒபேடேயை புகழ்ந்தவர்களே இன்று உங்களை புகழ்கிறார்கள்..." என்றான்.

**"ஏன்?"**

"புகழாவிட்டால் வாழ முடியாது. தவிர உங்களைப் போன்ற ஒருவர்தான் உகண்டாவுக்குத் தேவை என்றும் நினைக்கிறார்கள்."

ஜனாதிபதி அலுவலகம்வரை கார்ச் சாரதியுடன் பேசிக்கொண்டு சென்ற அமீன், அலுவலகத்திற்குள் கார் பிரவேசித்ததும் கூறினான்: **"இன்று முதல் நீ கார் ஓட்டத் தேவையில்லை!"**

சாரதிக்கு மரணபயம் முகத்தில் மொய்த்தது. 'வாயை வைத்துக் கொண்டு பேசாமல் இருந்திருக்க லாம்!' என்று அவன் நினைத்து முடிப்பதற்கு இடையே, **"இன்று முதல் நீதான் டோரோ மாவட்ட ஆளுநர்!"** என்றுவிட்டு காரைவிட்டு இறங்கிப் போய் விட்டான்.

கார்ச் சாரதியான ஜுமா எய்கா வால் அமீன் சொன்னதை நம்ப முடியவில்லை

புதுவிதமான தண்டனை ஒன்றுக் குத்தான் 'மாவட்ட ஆளுநராக்குவது' என்று அமீன் பெயர் சூட்டியிருக் கிறான், தன் கதை இன்றோடு முடிந்தது என்றே நினைத்தான்.

அன்று மாலையே அமீன் தான் சொன்னதை நிறைவேற்றினான். கார்ச்சாரதியை மட்டுமல்ல, தனக்கு நம்பகமான பலரை முக்கியபொறுப்புக்களில் மளமளவென்று நியமித்தான் அமீன்.

அத்தனைபேரும் தனக்கு விசுவாசமானவர்கள் என்பதை நன்கு எடை போட்டே நியமனம் செய்தான்.

திடீரென்று கிடைத்த பெரும் பதவியால் பிரமை பிடித்து நின்ற தனது கார்ச் சாரதியான ஜுமா எய்காவிடம் அமீன் கூறினான்:

**"நீ ஒரு திறமைசாலி. ஆனால் திறமை இருந்தாலும் அதிஷ்டம்தான் சிலரை ஆகாயத்தில் பறக்கவைக்கிறது. நீ அதிஷ்டசாலி. இனி உன் திறமையைக் காட்டு."**

அவன் திறமையைக் காட்ட சில நாட்களுக்குள்ளேயே சந்தர்ப்பம் கிடைத்தது.

உகண்டாவில் நடந்த படுகொலைகளை விசாரிப்பதற்காக இரண்டு அமெரிக்கர்கள் உகண்டாவுக்கு வந்திறங்கினர்.

அமீனுக்கு வெள்ளையர்கள் என்றாலே பிடிக்காது. அதுவும் விசாரிக்க வந்திருக்கிறார்கள் என்றதும் பற்றிக் கொண்டது:

**"வந்துவிட்டார்களா? திரும்பிப் போக மாட்டார்கள்!"** என்றான். என்றவன் **"அவர்களை டோரா மாவட்டத்திற்கு அழைத்துச் செல்லுங்கள், மாண்புமிகு ஆளுநர் உரிய மரியாதை செய்வார்!"** என்றான்.

இடி அமீனின் அகராதியில் 'மரியாதை' என்பதற்கு என்ன அர்த்தம் என்பது அடுத்த சில நாட்களில் தெரிந்தது.

(இடி தொடரும்)

# அரசியலும் அழகிகளும்

இந்தியாவிலும் நம்நாட்டிலும் தேர்தலை நம்பியிருக்கும் கட்சிகள் பதவியைப் பிடிக்க அழகான பெண்களை பாவிப்பதுண்டு. கட்சிப் பிரமுகர்களுக்கு ஆறுதலாக இருப்பதுடன், தேர்தல் பிரசாரங்களில் வாக்காளர்களை மயக்கவும் இவர்கள் உபயோகப்படுவர்.

மற்றப்படி பெண்விடுதலை, சமத்துவம் என்ற எண்ணமெல்லாம் பதவிதேடும் அரசியல்வாதிகளிடம் கிடையவே கிடையாது. இத்தகைய அரசியல்வாதிகளை நாடும் பெண்களும் பதவி ஆசை, மற்றும் பல ஆசைகளை கொண்டிருப்பர்.

காங்கிரஸ் கட்சி பெண்களை எப்படி பயன்படுத்துகிறது என்பதை முன்னாள் பிரதமர் பி.வி.நரசிம்மராவ் எழுதிய நாவல் அம்பலப்படுத்துகிறது.

காங்கிரஸ் கட்சியில் வைஜெயந்திமாலா உட்பட பல நடிகைகள் சேர்ந்து பதவி பெற்றனர். தீபா, மாயா போன்ற கவர்ச்சி நடிகைகளும் அரசியலில் குதித்து மிரட்டினார்கள்.

காங்கிரஸ் கட்சிகளைவிட்டு மூப்பனார் அணி தனியாகப் பிரிந்தபோது கவர்ச்சி நடிகை மாயாவும் மூப்பனார் பின்னால் சென்றுவிட்டார். பசையுள்ள கட்சி என்ற நம்பிக்கையில் மூப்பனாருடன் சேர்ந்தார்



மாயா

கடந்த தேர்தலில மூப்பனார் கட்சி படுதோல்வி கண்டதல்லவா.

பார்த்தார் மாயா. கட்சி மாறிவிட்டார். மீண்டும் காங்கிரசில் போய் ஒட்டிக் கொண்டார்.

"பதவி தராமல் மூப்பனார் ஏமாற்றி விட்டார். அதுதான் கட்சி மாறிவிட்டேன்" என்று பத்திரிகையாளர்களை அழைத்துப்பேட்டி கொடுத்திருக்கிறார்.

மாயா மட்டுமல்ல அவரது அக்கா மகளான நடிகை ரூமியாவும் இளைஞர் காங்கிரசில் சேர்ந்துள்ளாராம். இனி இளைஞர் காங்கிரஸ் பாடு வேட்டைதான்.

# சோகத்தில் வெடிக்கும் கவர்ச்சிக் குண்டு

**1970**களில் இந்திப் பட உலகில் கவர்ச்சிக் குலுக்கல் மூலம் இரசிகர்களின் மனங்களை உலுப்பியவர் ஜீனத் அம்மன்.



'செக்ஸ் குண்டு' என்று பட்டம் சூட்டப் பட்டார். ஜீனத் அம்மன் இருந்தால் படம் பிய்த்துக்கொண்டு வசூல் கொட்டும்.

'சத்யம், சிவம், சுந்தரம்', 'யாதோங்கி பாரத்' போன்ற படங்கள் ஜீனத்தின் கவர்ச்சிக்காக பிளந்து கட்டி ஓடிய படங்கள். பல இலட்சம் இரசிகர்களின் தூக்கத்தை இரக்கமின்றி கொள்ளையடித்தார்.

இரசிகர்களின் இதயங்களை கொள்ளையடித்த அந்தக் கவர்ச்சிக் கன்னியின் இரவுகளை கொள்ளையடிக்க பலர் போட்டி போட்டனர். அவர்களிடம் இருந்து தப்ப பிரபலமான நடிகர்கள் சிலருடன் நட்பு வைத்துக் கொண்டார் ஜீனத். அதற்கு விலையாக அவர்களுடன் இரவுகளை பகிர்ந்து கொண்டார்.

இயக்குநர் சஞ்சய்கானுடனும் நெருங்கிப் பழகினார். இருவரும் தாஜ் ஹொட்டலில் பல நாட்கள் சேர்ந்திருந்தனர். பின்னர் உறவு கசந்தது. வேறு சிலர் ஜீனத்துடன் படுக்கையை பகிர்ந்து கொண்டுவிட்டு, அவரது பணத்தை சுருட்டிக் கொண்டு கம்பி நீட்டினார்கள்.

இந்நிலையில் மசார்கான் என்னும் நடிகரின் வலையில் விழுந்தார் ஜீனத். தன்னைவிட பல வயது மூத்தவரான மசார் கான் தன்னை புரிந்து கொண்டு ஆதரவாக இருப்பார் என்று கருதினார் ஜீனத்.

மசார்கான் லேசுப்பட்ட ஆசாமியல்ல நடிகைகள் பலரை ஏமாற்றியவர். ஜீனத்தின் பணத்துக்காக அவரை மணந்தார். இரண்டு பிள்ளைகள் பிறந்தன.

பணத்தின்மீதே குறியாக இருந்த மசார்கான் ஒரு கோடி ரூபாய் வரை சுருட்டிக்கொண்டார். பணம் கொடுக்க மறுத்தால் அடி, உதை. இறுதியில் அவரிடமிருந்து விவாகரத்து பெற்றார் ஜீனத்.

தற்போது இளைஞரான ஜசீர் அஸ்லாம் என்பவரை ஜீனத் அம்மன் காதலித்துவருகிறார். ஜீனத்தைவிட அவருக்கு 25 வயது குறைவு.

இதற்கிடையே ஜீனத்திடம் பணம் பறிக்க மசார்கான் முயற்சிக்கிறார். தனது உறவினர்கள் சகிதம் வீடு புகுந்து ஜீனத்தை தாக்கியும் இருக்கிறார். இதனால் விவகாரம் பொலிசுக்கு போயிருக்கிறது.

நடிகை டிம்பிள் கபாடியா ஜீனத் அம்மனுக்காக குரல் கொடுக்கிறார்: "எப்படி வாழ்வது என்று முடிவு செய்வது எங்கள் உரிமை ஜீனத்தின் விருப்




மிஸ் ஏசியா-ஜீனத்

வெறுப்பில் குறுக்கிட யாருக்கும் உரிமை இல்லை. அவளது காதலருக்கு 25 வயது குறைவாக இருந்தால் அது அவளது விருப்பம்" என்று கூறியிருக்கிறார்.

அன்று இரசிகர்களின் தூக்கத்தை திருடிய ஜீனத் இன்று நிம்மதியில்லாமல் தூக்கத்தை தொலைத்து தவிக்கிறார். பல நடிகைகளின் வாழ்க்கை இப்படித் தான் சோகத்தில் முடிகிறது.

# பொம்மை டயானா

பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் விற்பனையில் சாதனை படைத்து வருபவை பார்பி பொம்மைகள். உயிருடன் இருப்பது போன்ற தத்ரூபமான தோற்றம்தான் பார்பி பொம்மைகள் குழந்தைகளைக் கவரக் காரணம்.



இப்போது பார்பி பொம்மைக்கு போட்டியாக டயானா பொம்மைகள் வந்து விட்டன. பிரிட்டன், அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளில் டயானா பொம்மைகளுக்கு வரவேற்பு. டயானா பொம்மையின் உயரம் 38 சென்ரி மீட்டர்.


டயானா பொம்மையை விற்பனை செய்வதை எதிர்த்து டயானா அறக்கட்டளை சார்பாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

"டயானாவின் தோற்றத்தை பயன்படுத்த அறக்கட்டளையின் அனுமதி பெறவேண்டும்" என்று வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது

# நாவல் தயாராகிறது

மொடல் அழகிகளில் முதல் இடத்தில் இருப்பவர் சிண்டி கிராபோர்ட். தற்போது இவர் நாவல் ஒன்றை எழுதி வருகிறார்.

மொடல் உலகில் தற்போது பிரபலமாக உள்ளோரின் அந்தரங்க சமாச்சாரங்கள், செக்ஸ் அனுபவங்கள், அவர்கள் சந்தித்த அத்துமீறல்கள் பற்றியெல்லாம் எழுதித் தள்ளப்போகிறாராம்.




மொடல் அழகிகளின் இரகசியக் காதலர்கள், போதைக்கு அடிமையானவர்கள் போன்ற பல சுவாரசியமான சங்கதிகள் நாவலில் இடம்பெறப்போகிறதாம்.



படிப்பகம்

www.padippakam.com



## காற்றுக்குத் தடை

← காற்றே இல்லாமல் சில நொடிகள் இருந்தால்கூட மூச்சுத் திணறிவிடுவோம். இவரோ காற்றுப் புகாத பிளாஸ்டிக் பைக்குள் உடல் முழுக்க நுழைத்துக் கொண்டு ஆடி மகிழ்கிறார்.

அமெரிக்காவின் புகழ்பெற்ற சர்க்கஸ் குழு ஜிம்ரோஸ். அதில் ஒரு சாகசக் கலைஞர் இவர். பெயர் கேட்டி வில்சன். தென் ஆபிரிக்காவில் ஜோகன்ஸ்பர்கில் இந்த சாதனையை நிகழ்த்தினார். பல நிமிடங்கள் தாக்குப்பிடித்து கடைசிக் கட்டத்தில் சற்றுத் திணறும்போத எடுக்கப்பட்ட படம் இது. ■

## கம்பியில் ஓட்டம்

→ மோட்டர் சைக்கிளில் செய்யும் சாகசங்கள் பலவற்றை முன்னரும் முரசில் தந்திருக்கிறோம். இதுவும் அசத்தலான மோட்டார் சைக்கிள் சாகசம்தான்.

தரையில் இருந்து 100 மீட்டர் உயரத்தில் கட்டப்பட்ட கம்பியில் 350 மீட்டர் தூரம் வெற்றிகரமாக ஓட்டிக் காட்டியிருக்கிறார். மணிக்கு 96 கிலோமீட்டர் வேகத்தில் செலுத்தியிருக்கிறார்.

இந்த சாதனைக்கு சொந்தக்காரர் ஜோகன் ப்ராபர். ஜெர்மன் நாட்டவர். பிரெய்பெர்க் நகரில், கதீட்ரல் தேவாலயம் அருகே இந்த சாதனை செய்யப்பட்டது. உலக சாதனையாக இது பதியப்படலாமா என்று ஆராய்கிறது கின்னஸ் நிறுவனம். ■



# தகவல் பெட்டி


## வந்ததும் போனதும்



↙ மனிதப் பிறவியில் எத்தனை வினோதங்கள். வேதனைகள். சவுதியில் ஒரு உடலில் இரு தலையுடன் பிறந்த குழந்தை இது.

பிறந்த சில நாட்களுக்குள் இறந்துவிட்டது. உடல் இணைந்து பிறந்தால் பிரிக்கலாம். ஒரு உடலில் இரு தலைகள், எப்படி பிரிப்பது? வைத்தியர்கள் மூளையைக் கசக்கினர்.

அவர்களை சிரமப்படுத்தாமல் இறந்துவிட்டது இந்த அபூர்வ பிறவி! ■



## ஆகாயக் கப்பல்

← படத்தில் இருப்பதுதான் ஆகாயக் கப்பல். இரண்டாம் உலகப் போர்வரை பல ஆகாயக்கப்பல்கள் போக்குவரத்தில் ஈடுபட்டன. பின்னர் ஓரம்கட்டி போட்டுவிட்டு, நவீன விமானங்களை போக்குவரத்தில் ஈடுபடுத்தினர்.

தற்போது மீண்டும் ஆகாயக் கப்பல் ஒன்றை 66 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 'கவுன்ட் பெர்டினான்ட் வான் சைப்லைன்' என்ற நிறுவனம் தயாரித்துள்ளது.

விமானங்களில் ஏற்றிச் செல்வதைவிட பல மடங்கு எடை கொண்ட பொருட்களையும், இயந்திரங்களையும் இதில் ஏற்றிச்செல்லாம், அதுதான் மேலதிக வசதி. விரைவில் போக்குவரத்தில் ஈடுபட உள்ளது. இது பாவனைக்கு வந்தால் கனரக இயந்திரங்களை ஏற்றிச் செல்ல கடற் கப்பல்களை நம்பி மாதக்கணக்காக காத்திருக்கத் தேவையில்லை. ■

## கடிகார தொலைபேசி



↗ செல்ஃபோன், கோட்லெஸ் ஃபோன் என்று பலவிதமான தொலைபேசிகள் வந்துவிட்டன. இவற்றை கையிலும், ஏன் சட்டைப்பையிலும்கூட எடுத்துச் செல்கிறார்கள். இப்போது கைக்கடிகாரத்திலேயே தொலைபேசி வந்துவிட்டது. நேரமும் பார்க்கலாம். தூரத்தில் உள்ளோருடனும் பேசலாம். ரு இன் வன்.

இந்த கைக்கடிகாரத்தை ஜப்பானைச் சேர்ந்த என்.டி.டி.எலெக்ட்ரானிக் கம்பனி தயாரித்துள்ளது.

ஜப்பானில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்காக முதற் கட்டமாக 40 கடிகார தொலைபேசிகள் தயாராகியுள்ளன. 2000ம் ஆண்டில் சந்தைக்கு வந்துவிடும். ■




## பலத்த மோதல்

← இரண்டு ராஜநாகங்கள் இடையே வசமாக மாட்டிக்கொண்டார் கீரியார். பின்னல் போட்டு பிடித்துவிட்டன. மோதலின் உச்சகட்ட அபூர்வக்காட்சி இது.

கீரியும் பாம்பும் சண்டையிடுகையில் கீரியின் பலம் மேலோங்கினால் பாம்பு வாபஸாகி ராஜநாகத்தை அழைக்கும். சண்டையிடும் கீரி மூளையில் மசாலா உள்ளதானால் வாபஸாகி ராஜகீரியை அழைக்கும்.

ராஜகீரி கீரிப்படை சூழ வந்து, ஒரே தாக்குதலில் ராஜநாகத்தை முடித்துவிடும். ஆனால் ராஜகீரி அடிக்கடி வெளியே வராது. இந்தக் கீரி ராஜகீரியை அழைக்கவே முடியாமல் வசமாக மாட்டிக்கொண்டதோ?! பட உதவி: முஹமட் ஷம்சுதீன். சவுதி அரேபியா. ■



## சாதனைப் பிரசவம்

← மனிதர்கள் மட்டும்தான் உலக சாதனை படைக்கமுடியுமா? நியூசிலாந்து நாட்டில் ஒக்லான்ட் தீவில் உள்ள மிருக வைத்தியசாலையில் நாய் ஒன்று உலக சாதனை படைத்துள்ளது.

ஒரே பிரசவத்தில் 19 குட்டிகளை ஈன்றுள்ளது. மூன்று குட்டிகளை சுகப்பிரசவமாகவும், ஏனைய 16 குட்டிகளை சிசேரியன் செய்தும் பிரசவித்துள்ளனர் டாக்டர்கள். ஜெர்மன் செற்றர் ரக நாய்தான் உலக சாதனை படைத்துள்ளது. தாயும் சேய்களும் நலமாக உள்ளனர். ■



## பழங்கதையானது

ஒலுமடு மோதலில் காலில் ரவை துளைத்த புலிகளது பெண் உறுப்பினரை சக உறுப்பினர் தாங்கி அழைத்துச் செல்கிறார். எதையும் தாங்கும் மனோதிடம் இல்லாதவர்கள், மென்மையானவர்கள், துன்பம் என்றதும் கலங்கிவிடுவார்கள் என்ற ப்ழம் கதையெல்லாம் எங்கே போனது?! ■



படிப்பகம்

www.padippakam.com

## சூர்யாவின் சிநேகிதிகள் சிவகுமார் ஆழ்ந்த கவலை

நடிகர் சிவகுமார் தமிழ் சினிமா உலகின் மார்க்கண்டேயர். மது, மாது, புகைத்தல் என்று எந்தப் பழக்கமும் இல்லாமல் உடலை பேணியவர்.

அவரது மகன் சூர்யா. 'நேருக்கு நேர்' மூலம் அறிமுகமான இளம் காளை. சினிமா உலகில் 'செக்ஸ்' என்பது சகஜம். மாட்டிக் கொள்ளாதவர்கள் அரிது.

அதுவும் நெருங்கி நடிக்கும்போது பஞ்சும் நெருப்பும் ஒன்றை ஒன்று பற்றிக் கொள்ளாமல் இருக்குமா?

முன்னரைவிட நெருக்கம் இப்போது அதிகம். நடிகனோ, நடிகையோ உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது அபூர்வம்.

தனது மகன் சூர்யாவும் தன்னைப் போலவே இருக்க வேண்டும் என்று விரும்புகிறார் சிவகுமார்.

தனது அனுபவங்களை கூறி ஏராளமான ஆலோசனைகளை வழங்கியுள்ளதுடன், மகனது ஒவ்வோர் அசைவையும் கண்கொத்திப் பாம்பாக கவனித்தும் வருகிறார்.

அவ்வாறு இருந்தும் சூர்யாவுக்கு சில சிநேகிதிகள் கிடைத்துள்ளனர். சிம்ரான், ப்ரீதா விஜயகுமார் இருவரும் சூர்யாவுடன் தொலைபேசியிலும் நேரிலும் அரட்டை அடிக்கிறார்கள். இருவரிலும் சிம்ரான்தான் அதிக நெருக்கம்.

தற்போது வெறும் நட்பு மட்டும்தான். இது எங்கே போய் முடியுமோ? எப்படித் தடுப்பது? என்று திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறாராம் சிவகுமார்.

## திரையுலக மறுபக்கம் 58
# கொஞ்சும் குமரியில் கதாநாயகி அழுது கெஞ்சிய இயக்குநர்

மாடர்ன் தியேட்டர்ஸ் என்பது பழம்பெரும் படத் தயாரிப்பு நிறுவனம். மு.கருணாநிதி, கண்ணதாசன் போன்ற பலர் அங்குதான் தங்கள் திறமைகளை பட்டை தீட்டிக்கொண்டனர் உரிமையாளர் டி.ஆர். சுந்தரம்.

ஸ்ரீதரின் 'நெஞ்சம் மறப்பதில்லை' படப்பிடிப்பு கேரளத்தில் நடந்து கொண்டிருந்தது. கலைஞர்களும், டெக்னீஷியன்களும் திருச்சூரில் தங்கியிருந்தனர். சில கலைஞர்கள் அருகிலிருந்த குருவாயூர் கோமிலுக்குப் போனார்கள்.

கோமிலைச் சுற்றி சிறு சிறு விளக்குகள் வரிசையாகப் பிணைக்கப்பட்டிருந்தன. "யாராவது ஏதாவது இப்போது நினைத்துக்கொண்டு அது பலித்துவிட்டால் இந்த விளக்குகளுக்கு எண்ணெய் ஊற்றி, திரி இட்டு ஏற்றி வைப்பார்கள்" என்று ஒருவர் கூறினார்.

"குருவாயூரப்பா! நான் சாவதற்குள் ஒரே ஒரு படத்திலாவது என் மகள் கதாநாயகியாக நடிக்க வழிசெய். அப்படிச் செய்தால் விளக்குகளுக்கு எண்ணெய் ஊற்றி திரி ஏற்றி வைக்கிறேன்" என்று வேண்டிக்கொண்டார் மனோரமாவின் அம்மா.

படப்பிடிப்பு முடிந்து சென்னைக்கு வந்த அன்று மனோரமாவுக்கு மாடர்ன் தியேட்டஸிலிருந்து கடிதம் வந்தது. "உன்னை எங்களது அடுத்த படம் கொஞ்சும் குமரியில் கதாநாயகியாகப் போட்டுள்ளோம். உடனே வரவும்" என்று டி.ஆர். சுந்தரம் எழுதியிருந்தார்.

'கொஞ்சும் குமரி' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. மனோரமா, மனோகர் மனோரமாவின் அம்மா ஆகியோர் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

ஊழியர் ஒருவர் வந்து அந்தச் சோகச் செய்தியைக் கூறினார். "ஐயா இறந்து விட்டார்" ஆம், தயாரிப்பாளர் டி.ஆர்.சுந்தரம் இறந்துவிட்டார். 97 படங்களை தயாரித்தவர். மேலும் மூன்று தயாரித்தால் செஞ்சுரி போட்டிருப்பார்.

மனோரமா கடைசியும் முதலுமாக கதாநாயகியாக நடித்த ஒரே படம் கொஞ்சும் குமரி. 1963ல் வெளி வந்தது.

### 'கண்ணியமான மனிதர்.'

பக்திப் படங்களை இயக்கிப் பெயர் பெற்ற இயக்குநர் அவர். நெற்றியில் பட்டையாக விபூதி தரித்திருப்பார். படப்பிடிப்பில் நடிகைகளை தொடுவதற்கே கூச்சப்பட்டு எட்ட நின்றுதான் காட்சிகளை விளக்குவார்.

கண்ணியமான இயக்குநர் என்றே எல்லோருக்கும் அபிப்பிராயம். இரண்டெழுத்து இனிசியல் கொண்ட முன்றெழுத்து நடிகை அவரது படம் ஒன்றில் நடித்தார்.

படப்பிடிப்பு முடிந்து வீடு திரும்பிய நடிகையை ஃபோன் செய்து அழைத்தார் இயக்குநர். ஏனைய இயக்குநர்கள் தனியாக அழைத்தால் காரணத்தை உடனே ஊகிக்கலாம். கண்ணியமான மனிதராயிற்றே ஏன் அழைக்கிறார்? என்று தெரியாமல் நடிகையும் அவரது பங்களாவுக்கு விரைந்தார்.

இயக்குநரின் குடும்பத்தினர் வெளியூர் சென்றிருந்தனர். அதனால் வீட்டிலேயே வேட்டை நடத்தவே நடிகையை அழைத்திருந்தார் இயக்குநர்.

நடிகை உள்ளே சென்றதுமே கட்டி அணைத்துக் கொண்டார் இயக்குநர். அத்தனை அவசரம். நடிகைக்கோ எதிர்பாராத அதிர்ச்சி. பெரிய இயக்குநர் என்பதால் அதிர்ச்சியை வெளிக்கு காட்டாமல் அவரது போக்குக்கு இசைந்து போனார் நடிகை.

எல்லாம் முடிந்த பின்னர் நடிகையின் கால்களைக் கட்டிக் கொண்டு அழத்தொடங்கிவிட்டார் இயக்குநர். "வெளியே கண்ணியமானவன் என்று எனக்குப் பெயர் இருக்கிறது. இங்கே நடந்ததை வெளியே சொல்லிவிடாதே" என்று கெஞ்சினார்.

அந்த இயக்குநருக்கு ஒரு வழக்கம் இருக்கிறது. ஒரு முறை தொட்ட நடிகைகளை மீண்டும் அழைக்கமாட்டார். அதனால் நடிகைக்கு அந்த இயக்குநரால் பின்னர் அன்புத் தொல்லை ஏற்படவில்லை.



ஊர்மிளா



பாண்டியராஜன்-ரஞ்சிதா
படம்: சபாஷ் சபாஷ்

முகப்பில்: சூர்யா, இந்து, வனிதா விஜயகுமார்

### முத்த உதவி

'மனசு' என்ற படத்திற்காக காஷ்மீருக்கு போனார்கள். அப்போது காஷ்மீர் தீவிரவாதிகள் சிலர் படப்பிடிப்பு குழுவினரை சுற்றிவளைத்து மிரட்டினார்களாம்.

கதாநாயகி ஒவியாவுக்கு இந்தி தெரியும். "நாங்கள் படப்பிடிப்புக்கு இங்கே வந்துள்ளோம். எங்களை எதுவும் செய்யாதீர்கள்" என்று சொல்லி அழுதாராம்.

உடனே இரண்டு தீவிரவாதிகள் ஒவியாவிடம் முத்தம் கேட்டனராம். ஆபத்துக்கு பாவம் இல்லை என்று இரண்டு பேருக்கும் முத்தம் கொடுத்து படப்பிடிப்பு குழுவினரைக் காப்பாற்றினாராம் ஒவியா.

## மினி சினி

* நடிகர் திலகத்தை வைத்து அதிக படங்களைத் தயாரித்தவர்கள் நடிகர் கே. பாலாஜியும், இயக்குநர் முக்தா சீனிவாசனும். விரைவில் முக்தா சீனிவாசன் தயாரிக்கும் படமொன்றில் நடிகர் திலகம் நடிக்கவுள்ளார்.

* அரவிந்தசாமிக்கு ஜோடியாக தமிழில் அறிமுகமாகும் இஷா கோபிகர், இந்தியில் முதலாவதாக நடித்துள்ள 'ஏக்தா தில் ஏக் தி தடுகன்' என்ற படம் வெளியாகவுள்ளது. இப்படத்தில் அர்பாஸ்கரன் கதாநாயகனாக நடித்துள்ளார்.

* 'சின்னத்தாயி', 'மாமியார் வீடு' போன்ற படங்களை இயக்கியவர் கணேஷ்ராஜ். நீண்ட இடைவெளிக்குப் பிறகு இவர் மூன்றாவது படத்தை இயக்கப்போகிறார். இப்படத்திற்கு 'பரணி' எனப் பெயரிடப் பட்டுள்ளது.

* சங்கீதா கதாநாயகியாக நடிக்கும் 'புண்ணியவதி'யில் கதாநாயகனாக நடிப்பவர் மாவீரன். இரண்டாவது கதாநாயகனாக நடிப்பவர் அமித்குமார். இவர் சங்கீதாவின் உடன் பிறந்த சகோதரர்.

* சுமன்-கஸ்தூரி கன்னடத்தில் நடித்த 'ஒன் மேன் ஆர்மி' என்ற படம் இதே பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இப்படத்தை 'பொலிஸ் ஸ்டோரி' படத்தை இயக்கிய கன்னட இயக்குநர் 'த்ரில்லர்' மஞ்சு என்பவர் இயக்கியுள்ளார்.

* தமிழில் முன்னணியில் இருக்கும் ரம்பா தற்போது மம்முட்டிக்கு ஜோடியாக 'சித்தார்த்தா' என்ற மலையாளப் படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தை பிரபல மலையாள இயக்குநர் ஹரிஹரன் இயக்குகிறார்.

* 'பாரதி கண்ணம்மா' படத்திற்குப் பின் ஹென்றி தயாரிப்பில் பார்த்திபன் கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் 'புதுமைப் பித்தன்.' இந்தப் படத்திற்கு முதலில் வைத்த பெயர் என்ன தெரியுமா? 'ஞானக்கிறுக்கன்.'

* 'மாணிக்கம்', 'சந்திரலேகா' படங்களின் படுதோல்வியால் வாய்ப்புக்கள் இன்றி இருக்கும் வனிதா விஜயகுமார், நடித்த தெலுங்குப் படமொன்று 'தேவி' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

* சரத்குமாருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் தமிழில் இருந்த ஒரே பட வாய்ப்பையும் இழந்த நக்மா இந்திப் படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். படத்தின் பெயர் 'ஜப் ஜப் தில் மிலே'.

* 'ஜீன்ஸ்' படத்தைத் தயாரித்த அமிர்தராஜ் சகோதரர்கள் ஆங்கிலப் படங்கள் தயாரிப்பது தெரிந்ததே. தற்போது இவர்கள் 'காந்தி' படத்தில் காந்தியாக நடித்த பென்கிங்ஸ்லி இயக்கும் 'கன்பெஷன்' என்ற படத்தைத் தயாரித்து வருகிறார்கள்.

### கமல் படம்

'காதலா காதலா' படத்தை அடுத்து மருதநாயகம்தான் அடுத்த படம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதற்கிடையே இன்னொரு படத்தில் நடிக்கப்போகிறார் கமல்.

பிரபல மலையாளப்பட இயக்குநர் பிரியதர்ஷன் இயக்கும் அப்படத்தில் இன்னொரு ஹீரோவும் உண்டாம்.

### சுவலட்சுமிக்கு திருமணமா?

நடிகை சுவலட்சுமி தனது மனேஜரை திருமணம்செய்து கொண்டதாக செய்தி. அந்த மனேஜர்தான் சுவலட்சுமியின் திரை உலக முன்னேற்றத்திற்கு உதவியாக இருந்தவராம்.

திருமணச் செய்தியை சுவலட்சுமி இன்னமும் உறுதி செய்வில்லை. ஆனால் மனேஜரும் அவரும் குளுகுளு ஊட்டி சென்று திரும்பியுள்ளனர்.

### பெரும் ஊதியம்

'இருவர்' படம் படு தோல்வி. 'ஜீன்ஸ்' எதிர்பார்த்த வசூல் இல்லை. இந்தியில் நடித்த படமும் பப்படம். அப்படியிருந்தும் ஐஸ்வர்யா ராய் மவுசு குறையவில்லை.

நகைக்கடை விளம்பரம் ஒன்றில் நடிக்க ஐஸ்வர்யா ராயை அணுகினார்கள். "அதற்கென்ன" என்று சம்மதித்தார். "ஊதியம் எவ்வளவு மேடம்" என்றனர். அவர் சொன்ன பதிலால் மூர்ச்சையாகாத குறை. இந்திய மதிப்பில் 30 இலட்சம் கேட்டாராம் ஐஸ்.

### மீண்டும் அங்கே

'ரட்சகன்' படத்தில் கவர்ச்சிகாட்டி இரசிகர்களை ரட்சித்தவர் சுஷ்மிதா சென். படம் மட்டும் அவரை ரட்சிக்கவில்லை. தோல்வி கண்டுவிட்டது.

உலக அழகி என்ற பந்தாவோடு தமிழ், தெலுங்கு, இந்தி என்று மொத்தம் ஐந்து படங்களில் நடித்தும், ஒன்றுகூட தேறவில்லை.

வெறுத்துப்போன சுஷ்மிதா இப்போது மீண்டும் விளம்பரத் துறைக்குள் புகுந்திருக்கிறார். இனிமேல் சோப்பு, சீப்பு, கண்ணாடிகளுக்கு போஸ் கொடுப்பார்.

### தொடர் மழை

கமல், ரஜினி, விஜய், முரளி ஆகியோரின் படங்கள்தான் இப்போது பூஜையன்றே விலைபோகின்றன.

'காலமெல்லாம் காதல் வாழ்க', 'பொற்காலம்' ஆகிய படங்களால் முரளியின் மார்க்கெட் நிமிர்ந்து நிற்கிறது. 'ரத்னா' படம் தற்போது வெளியாகி முதலுக்கு பாதகமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறது.

சிவாஜியுடன் முரளி நடிக்கும் 'என் ஆச ராசாவே' படமும் நல்ல விலைக்கு போயுள்ளது. முரளியின் காட்டில் தொடர் மழை.

### பிரபு நிறுத்தம்

முன்பெல்லாம் அடிக்கடி சிகரெட் பிடிப்பார் பிரபு. குஷ்பு பலமுறை முயன்றும்கூட நிறுத்தவில்லை. பிரபு-குஷ்பு பிரிவிற்கு சிகரெட்டும் சிறு பங்கு வகித்தது.

தற்போது தானாகவே சிகரெட் பழக்கத்தை நிறுத்திவிட்டார் பிரபு. உடலை அழகு படுத்துவதில் கரிசனை காட்டத் தொடங்கியுள்ளாராம்.




படிப்பகம்

www.padippakam.com

## அர்ஜூனுடன் மீனா

'செங்கோட்டை' படத்தில் அர்ஜுன்-மீனா இருவரும் இணைந்து நடித்தனர். அதன்பின்னர் இருவரும் இணைந்து நடித்துவரும் படம், 'ரிதம்'.

'கேளடி கண்மணி', 'ஆசை', 'நேருக்கு நேர்' ஆகிய படங்களை இயக்கிய வஸந்த் இதனை இயக்குகிறார்.

லட்சுமி, மணிவண்ணன், ஆகியோருடன், இளம் காதல் ஜோடிகளாக புதுமுகங்கள் இருவரும் அறிமுகமாகின்றனர்.

படத்தின் இசை: ஏ.ஆர். ரகுமான், ஒளிப்பதிவு வினோத், இவர் அறிமுகம். தயாரிப்பு: பிரமிட் நடராஜன்.

## ரவிச்சந்திரனின் வாரிசு

நடிகர் ரவிச்சந்திரன் நடிகை ஷீலா தம்பதியின் அருந்தவப் புதல்வன்தான் அம்சவிர்தன். ரவிச்சந்திரனின் இளமைக்கால நகலாக தோற்றமளிக்கிறார்.

'அதே கண்கள்', 'உத்தரவின்றி உள்ளே வா', 'காதலிக்க நேரமில்லை', 'நான்' என்று ஏராளமான வெள்ளிவிழா படங்களில் கதாநாயகனாக நடித்தவர் ரவிச்சந்திரன். இறுதியாக 'அருணாச்சலம்' படத்தில் ரஜினியின் அப்பாவாக நடித்திருந்தார்.

ரவிச்சந்திரனும் ஷீலாவும் பிரிந்துவிட்டனர். ஆனாலும் அம்சவிர்தனின் வளர்ச்சியை ரவிச்சந்திரன் ஊன்றிக் கவனிக்கிறார்.

## ரம்பா எதிர்

"கவர்ச்சி காட்டி நடிப்பதில் தப்பில்லை. ஆனால் தொப்புளில் பம்பரம் விடுவது, திராட்சை ரசம் பிழிவது, எண்ணெய் மசாஜ் செய்வது, கோலி குண்டு விளையாடுவது போன்ற விளையாட்டுக்களுக்கு நான் எதிரி.

அந்த விளையாட்டுக்களுக்கு தடை போட்டால்கூட தப்பில்லை. இது எத்தனை பேருடைய மனதைக் கெடுக்கிறது தெரியுமா?" என்று வருந்துகிறார் ரம்பா.

## அக்கா-தங்கை

முகப்பில் இருப்பவர் வனிதா விஜயகுமார். விஜயகுமார், மஞ்சுளா தம்பதியின் வாரிசு. தொடர்ந்து தாக்குப்பிடிக்க முடியாமல் ஒரம் போய்விட்டார்.

இப்போது நடித்துவரும் ப்ரீதா விஜயகுமார் இவருக்கு தங்கை. வனிதா போன்று ப்ரீதாவும் விரைவாக கழன்றுவிடக் கூடாதே என்பதற்காகத்தான் மஞ்சுளா மாய்ந்து மாய்ந்து நுணுக்கங்களைக் கற்றுக் கொடுக்கிறார்.

## வாழ்த்திய நடிகை

இந்தியா அணுக் குண்டு செய்ததை அடுத்து பிரதமர் வாஜ்பேயிக்கு ஏகப்பட்ட பாராட்டுக்கள். நடிகர் நடிகைகளும் பாராட்டு மழை பொழிந்துள்ளனர்.

நடிகை சுவலட்சுமி பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில்: "இந்தியாவின் பெருமையை உலகுக்கு உணர்த்திய உத்தமரே, உங்களை வாழ்த்த வயதில்லை, வணங்குகிறேன்!" என்று குறிப்பிட்டுள்ளார்.



## தங்கை அல்ல

இங்கே போஸ்கொடுக்கிறார் பாருங்கள் அமுல்யா. இவர் தன்னை ரம்பாவின் தங்கை என்று அடித்துச் சொல்கிறார். ரம்பாவோ "எனக்கு தங்கை யாரும் கிடையாது. அமுல்யா ஒரு ஏமாற்றுப் பேர்வழி" என்று மறுக்கிறார்.

தொடையழகி என்று பெயர் எடுத்த ரம்பாவின் பாதையிலேயே அமுல்யாவும் நடைபோட நினைப்பது மட்டும் புரிகிறது.



முரளி-இந்து
படம்: ரத்னா




அப்பாஸ்-லக்ஷ்மி
படம்: இனியெல்லாம் சுகமே

## உலக அழகன்

'ஜீன்ஸ்' படத்தில் ஒரு சில காட்சிகளில் மட்டும் வருகிறார் எஸ்.வி.சேகர். அதற்கு சேகர் சொன்ன காரணம் இது:

சில சமயங்களில் பாத்திரம் தவிர வேறு சில அம்சங்களை கவனிக்க வேண்டியிருக்கிறது. 'ஜீன்ஸ்' மிகப் பிரமாண்டமான பட்ஜெட் படம். எல்லாத்துக்கும் மேலே உலக அழகி ஐஸ்வர்யா ராய் படத்தில் இருந்தார். அவர்களுக்கு நிகராக ஒரு உலக அழகனும் படத்தில் இருந்தால் நல்லது என்று தோன்றியது. "சரி நடிக்கிறேன் என்று ஒப்புக்கொண்டு விட்டேன்."

## காணாமல் போன ஜோடி

பாண்டியராஜனும் அவரது மனம் கவர்ந்த ரசிகாவும் ஜோடி சேர்ந்து நடித்த படம் 'கபடி கபடி'. கிட்டத்தட்ட இரண்டு வருடமாக படப்பிடிப்பு 'இழுபட்டது.

ரசிகா முதலில் அறிமுகமான படம் 'பூஞ்சோலை'. கங்கை அமரன் இயக்கத்தில் அவரது மகன் கதாநாயகனாக நடிக்கும் படம் அது. அதன் படப்பிடிப்பு இன்னமும் முடிந்தபாடில்லை.

அதற்குள் ரசிகா பின்னர் நடித்த படங்கள் வெளியாகிவிட்டன. பாண்டியராஜனின் கடைக்கண் பார்வைபட்டபின்னர் பல பட வாய்ப்புக்களை இழக்கவேண்டியும் ஏற்பட்டது.

பாண்டியராஜனுடனேயே தங்கியிருக்க வேண்டிய கட்டாயத்தால் ஏற்பட்ட இழப்புக்கள் அவை.

'கபடி கபடி' படப்பிடிப்பு தாமதமானது ஏன்? என்று கேட்டால் பாண்யராஜன்-ரசிகா இருவரும் திடீர் திடீர் என்று ஜோடியாக காணாமல் போனதுதான் காரணம் என்று பொருமுகிறார் தயாரிப்பாளர்.




அம்சவிர்தன்-ரேஷ்மா
படம்: இனித்தம் எத்தினம்

## உடன்பிறவா சகோதரிகள்

ஸ்ரீதேவி போனி கபூரை மணந்தது, போனி கபூரின் முதல் மனைவிக்கு பிடிக்கவில்லை. அதனால் ஸ்ரீதேவியும் அவரும் கீரியும் பாம்புமாக இருந்தனர்.

ஸ்ரீதேவிக்கு பெண் குழந்தை பிறந்ததும் கதையே தலைகீழாகிவிட்டது. முதல் மனைவிக்கு பிறந்த இரண்டும் ஆண் குழந்தைகள். அதனால் முதலில் பிறந்த பெண் குழந்தை என்று ஸ்ரீதேவியின் குழந்தையான ஜகனவிமீது பாசம் பொழிகிறாராம் முதல் மனைவி.

ஸ்ரீதேவிமீது போட்ட வழக்கையும் முதல் மனைவி வாபஸ் பெற்றுவிட்டாராம். இப்போது இருவரும் உடன்பிறவா சகோதரிகளாகி விட்டனராம்.

## நிருபர் அப்பாஸ்

'மனசுக்குள் வரலாமா' படத்தில் சன் ரி.வி. நிருபராக நடிக்கிறார் அப்பாஸ.

அதற்காக சன் ரி.வி. நிருபர்கள் எப்படி பேட்டி எடுக்கிறார்கள், எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று பார்வையிட்டாராம்.

## காதோடு சொல்லுகிறோம்

பஞ்ச பாண்டவரில் ஒருவரது பெயர் கொண்ட ராவுக்கு மனைவியும் இரண்டு குழந்தைகளும் ளனர். ஏற்கனவே சில நடிகைகளுடன் ஒட்டுதலாக ந்த நடிகர், தற்போது படு சிரத்தையாக 'பிரேம' கையை சுற்றுகிறாராம். சென்னையில் வடக்கு உஷ்மான் ட்டில் உள்ள விடுதி ஒன்றில் இருவரையும் அடிக்கடிக்க முடிகிறதாம்.

புதிய பாதை' போட்ட 'பா' நடிகரின் மனைவிக்கும் ரின் மனைவிக்கும் பெயர் ஒன்றுதான். ஆனால் நடிகர் ர் அல்ல. மனைவியும் முன்னாள் நடிகை என்பதால் ரின் திருகுதாளங்களை உடனுக்குடன் கண்டுபிடித்து றார். "தொட்டதுக்கெல்லாம் மனைவியைப் புகழ்ந்து ணம் பாடும் யாரும் மனைவிக்கு விசுவாசமாக இருப்பல. இவர்கள் பச்சைத் துரோகிகள். இவர்களை நம்பக் து" என்று கூறிவருகிறார் நடிகரின் மனைவி.

காந்த நடிகரோடு ஜோடியாக நடித்துவருகிறார் ந்திர குடும்ப வாரிசு நடிகை. காதல் காட்சிகளில் க முதலில் கூச்சப்பட்டாராம். தந்தை வயதுள்ள நடி கட்டி அணைத்து நடிக்க சங்கடமாக இருந்ததாம். ார், அனுபவமுள்ள தாய்க்குல நடிகைதான் மகளின் டத்தைப் போக்கியதுடன், எப்படி கட்டிப்பிடித்து பது என்றும் பயிற்சி கொடுத்துள்ளாராம்.

மாவீரன் பெயர் கொண்ட நடிகர் பற்றிய தகவல் இது. 'தமிழச்சி' படப்பிடிப்பின்போது சிறிய வேடத்தில் நடித்த பெண் அழகாக இருந்தார். அவரை இயக்குநர் கணக்குப் பண்ணி யாருக்கும் எட்டாத தூரத்தில் கொண்டுபோய் வைத்தாராம். மாலையானதும் இயக்குநர் காணாமல் போகும் மர்மம் என்னவென்று மாவீரன் நடிகரும், வெற்றியை பெயரில் கொண்டிருக்கும் குமார நடிகரும் சந்தேகப்பட்டனர். மோப்பம் பிடித்து உண்மையை அறிந்தனர். பிறகென்ன, இருவரும் இணைந்து தங்களது சாகசவலையில் நடிகையை வீழ்த்தி இயக்குநரால் கண்டுபிடிக்க முடியாத இடத்திற்கு கொண்டு போய்விட்டனராம். அந்த நடிகை மூலம் தற்போது தான் தகவல் கசிந்துள்ளது.

## யார் அழைத்தது?

'ஜீன்ஸ்'பட இயக்குநர் ஷங்கர் தனக்கு ஹொலிவுட்டின் பிரபல படநிறுவனங்கள் அழைப்பு விடுப்பதாகக் கூறிவருகிறார். அப்படி யாரும் அவரை அழைத்ததாகத் தெரியவில்லை.

'ஜீன்ஸ்' படம் எதிர்பார்த்தளவு போகவில்லை என்ற வருத்தத்தில், கதை விடுகிறது ஷங்கரின் வட்டாரம்.

www.padippakam.com

## கனவுகளைத் தொலைத்துவிட்(ட்)டு

ஜீவனே!
கனவுகளைத்
தொலைத்துவிட்டு
நிஜங்களோடு
ஒன்றித்துவிடு!
கடலிற்குக்கூட
எல்லையுண்டு....
கற்பனையின் எல்லை
பூச்சியம்தான்!

பக்கத்து
ரோசாவைவிட,
முற்றத்து
மல்லிகையை
சுவாசித்துப்பார்!
அது மணக்கும்
தூரத்துப் பச்சை
அழகல்ல!

இரவு
திரையரங்கில்
காட்சிகள்
காண்பிக்கப்படும்:
முடிந்தவுடன்
வெளியே வந்துவிடு!
முற்றுப் பெறாத
இரவுகளுக்காக
ஏங்கிவிடாதே!

உறங்குகின்ற
மனதின் வேலை
கனவு எனில்
நீ எப்போது
விழிக்கப் போகின்றாய்?
ஒரே ஒரு தடவை
மீண்டும்
உள்ளங்கையை
கிள்ளிப்பார்!

நிலவின் அழகு
நிஜத்தில் அல்ல,
நீண்ட
இடைவெளியிலே....
ஆம்ஸ்ரோங்
முத்தமிட்டது
வெறும் பாறையையும்
மண்ணையும்தான்!

நாளை
நிச்சயமில்லாத
நாட்டில் நாம்
அவசரகால
விதிகளின் கீழ்
சீவிப்பு!

இந்த நிமிடத்திற்கு
வாழ்ந்திடு!
கனவுகளை
பெட்டிபெட்டியாக
சுமந்துகொண்டால்
மிஞ்சப்போவது
கந்தல் துணி
மட்டும்தான்!

உத்திரன்-இணுவில்.

## அன்புள்ள துரோகிக்கு...!

நிறைமதி பூத்த
நிசப்த ராத்திரி:
முற்றத்து மல்லிகைகளின்
பனிக்குளியல்;
நீசிக் குயிலின்
முகாரி...
எல்லாமே-
புதைக்க முயலும்
என்
அடிமன
ஞாபகங்களுக்கு
புத்துயிர்
ஊட்டுகிறது..!
*-*
எழேழு ஜென்மங்களும்
என்னருகில்
இருப்பேன் என்ற
நீ-
எழு கடலையும்
தாண்டி
பறந்தபோது,
விதியருவியில்
சோகம் பிரவகிக்க
சோர்ந்து நின்றதென்னவோ
உண்மை தான்...!
*-*
ஆனால்...
வசந்தங்கள்
கருக்கப்பட்டு,
வார்த்தைகள்
வஞ்சிக்கப்பட்டு,
வாலிபம்
துடித்தாலும்
வாழ்க்கை மட்டும்
வற்றிவிடவில்லை...!
*-*
அன்புள்ள துரோகியே!
என்
துயரங்கள்
தூக்குக்கயிறாகும்
கவலைகள்
கல்லறையாகும்
என நினைக்காதே...!
*-*
மாறாக-
ஊனமான
பட்டாம் பூச்சி
சிறகடிக்கப்போகிறது:
ஊமையான
குயில்
இசைபாடப் போகிறது:
உன்னால்
தீயிடப்பட்ட
வசந்தங்கள்
புடம்போட்ட
பொன்னாக
மின்னுகிறது....!
*-*
ஆமாம்..!
நீ முடிவுரை
கூற முயன்ற
வாழ்க்கை
தொடர்கதையாகிறது....!!

'குறிஞ்சி நிலா'
எஸ். கல்யாணி- இரத்தினபுரி.

## மௌனிக்க விதிக்கப்பட்டோம்!

காற்று
மீண்டுமொருமுறை
கவிதை சொல்ல முயன்று
தோற்றுப் போனது!

அடிவானம்
அழுது கண்சிவக்கையிலே
அது நாணி
கன்னம் சிவந்து போனதாய்
கதை சொல்லப்படுகிறது....
காற்று மௌனித்தது!

அடிபட்ட மனிதர்கள்
ஆனந்தக் கண்ணீர் வடிப்பதாய்
அரிச்சந்திரர்கள்
சத்தியம் செய்கிறார்கள்....
காற்று மௌனித்தது!

பாலைவனத்து பசுமையை
மழை வந்து
குலைக்கப்போவதாய்
கண்ணீர் வடித்தனர்....
காற்று மௌனித்தது!

சந்திரனின் செந்தணலால்
சூரியன்
சுட்டெரிக்கப்பட்டு
பூமி இருண்டுபோனதாய்
சொல்லப்படுகிறது....
காற்று மௌனித்தது!

"இனப்பிரச்சனை
எமது பேச்சில்
தீர்க்கப்படும்!"
பேசிக்கொள்கிறார்கள்...
காற்று மௌனித்தது!

உரும்பிராய் சிவன்சுதன்.

## விபத்து ஏற்படுத்திய படம்



↑ வியக்க வைக்கும் படங்களும் இருக்கின்றன. விபத்தாக வைக்கும் படங்களும் உள்ளன. இதில் இப்படம் எந்த ரகம் என்று உங்களுக்கே தெரிந்திருக்கும்.

நடிகை ஸ்ரீப்பிரியா கனவுக் கன்னியாக உலா வந்த நேரம் அது. 'கவர்ச்சியாக நடிக்கமாட்டேன்' என்று பேட்டி கொடுத்தபடி நடித்துக் கொண்டிருந்தார்.

'ஓடி விளையாடு தாத்தா' படத்தில் ஸ்ரீப்பிரியாவின் இந்தக் கிறங்கடிக்கும் தோற்றத்தை சென்னை அண்ணாசாலையில் மாபெரும் கட் அவுட் விளம்பரமாக வைத்திருந்தனர்.

சென்னையின் பிரதான சாலை என்பதால், மகா பயங்கர போக்குவரத்து. அதற்குள்ளும் இந்த கட் அவுட்மீது பார்வையைத் திருப்பியதால் நிறைய விபத்துக்கள் ஏற்பட்டன.

பின்னர் போக்குவரத்து பொலிசார் இதனை அகற்றச் சொல்ல, ஸ்ரீப்பிரியாவின் கால்களுக்கு ஸாக்ஸ் வரைந்து மறைத்து சமாளித்தார் படத் தயாரிப்பாளர்.

## என் கீதம் உனைத்தேடும்

புலர்ந்தும்
புலராப் பொழுதொன்றில்
மனதை அழுத்தும் துயரிடையே
மெதுவாய் எழுகிறதென் கவிதை!
-o-
தாய் மண்ணை இழந்து
உயிரில் மேவிய
உறவுகளைப் பிரிந்து
உடைந்து சிதறிய
உள்ளத்தை அள்ளி
நெஞ்சோடு அணைத்தவாறு
தேசம் தாண்டி
தொலைதூரம் போனாய்!
-o-
என் கனவுகள் அறுந்த
நாளும் அதுதான்:
கன்னங்களினூடே
நீர்க்கோடுகள் அணிவகுத்த
நாளும் அதுதான்!
-o-
தனித்துத் தவித்துத்
தாங்க முடியாச்
சுமை ஏற்று வாழும்
என் மனதின் கனத்தை
எந்த முகாரியில்
உன்னிடம் பாடிக் காட்டுவேன்?
-o-
ஒரு சுந்தர அந்தியில்
அந்தப் பொய்கைக் கரைதனில்
உன்னோடு கைகோர்த்து
உலாப்போன நினைவுகளும்
அதன் கரைகளுக்கு
அப்பால் அடர்ந்திருந்த
அழகிய காடுகளும்
நீரலைகளிடையே
நாம் விட்டு வந்த
காகித ஓடமும்
இன்னும் என் நினைவுகளில்
பசுமையாக உள்ளன!
-o-
அந்தச் சிற்றோடம்
உனைப்போல
தூரக் கரைதனில் ஒதுங்கியதுவோ?
எனைப்போலக்
கண்ணீரில் மூழ்கித்
தரைதட்டி நின்றதுவோ?
-o-
நீபோன பின்னர்
இங்கு எனக்கிருந்த
எல்லா வண்ணக் கோலங்களும்
வெறுமை படர்ந்து
சிறிது சிறிதாய்ச்
சிதைந்து போயின!
-o-
மரக்கிளைகளில்
தாவித் திரிந்த
அழகிய பறவைக் கூட்டங்களும்
கடல் கடந்து
கண் காணாத் தேசம்
உன்னோடு போயினவோ?
அதிகாலைகளில்
அந்தப் பெயரறியாக்
குருவிகளின்
சுப்ரபாதங்கள் எதுவும்
இப்போது கேட்பதில்லை!
-o-
என்னுள்ளே
ஆயிரமாயிரம்
சோகங்கள் உண்டு-
உன்னிடம் சொல்லியழ!
-o-
என்றாவது,
அலைமோதும்
கடலோரம் நின்று-என்
கவிவரிகளைப் பாடுவேன்!
அவையாவது என்
துயரத்தின் ஒலங்களை
நீ வாழும் தேசத்திற்குக்
கொண்டு வந்து சேர்க்கட்டும்!

பஹீமா ஜஹான்-
அட்டாளைச்சேனை.

## தேன் கிண்ணம்



## பேனா நண்பர்கள்



பெயர்:
ரி. வசந்தி,
வயது: 20
முகவரி:
பாரதிபுரம்,
பாலம் போட்ட ஆறு,
தம்பலகாமம்.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்:
எம். அனஸ்கான்,
வயது: 20
முகவரி:
179, தெமட்டகஸ்தென்ன,
அக்குறணை.
பொழுது போக்கு:
வழமையானவை.

## இந்த வாரம் உங்கள் பலன்

(07.06.1998 தொடக்கம் 13.06.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| இடபம் | - சூரியன், செவ்வாய். |
| மிதுனம் | - புதன். |
| சிங்கம் | - இராகு. |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - வியாழன். |
| மேடம் | - சனி, வெள்ளி. |

சந்திரன்- துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம் — சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| **திங்கள்**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. | 2 மணி |
| **செவ்வாய்**- வெளிமிட வாழ்க்கை உயர்ந்த நிலை. | மு.ப. | 10 மணி |
| **புதன்**- அந்நியர் உதவி, காரிய சித்தி. | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பகல் | 11 மணி |
| **வெள்ளி**- பெரியோர் உதவி, பண வரவு. | பி.ப. | 2 மணி |
| **சனி**- முயற்சி பலிதம், காரியானுகூலம். | பகல் | 11 மணி |

**அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-1**

### மேடம் — சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வெளிமிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் | 12 மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, பண வரவு. | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **புதன்**- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| **வியாழன்**- இனசன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | மு.ப. | 10 மணி |
| **வெள்ளி**- பலவித பேறு, முயற்சி பலிதம். | பி.ப. | 2 மணி |
| **சனி**- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | பகல் | 11 மணி |

**அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8**

### இடபம் — சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வீண் மனஸ்தாபம், அந்நியர் பகை. | பகல் | 11 மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், பணச் செலவு. | மு.ப. | 10 மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| **புதன்**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **சனி**- வீண் செலவு, கடன் படல். | பகல் | 11 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6**

### மிதுனம் — சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, செலவதிகம். | மு.ப. | 10 மணி |
| **திங்கள்**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **புதன்**- உயர்ந்த நிலை, இனசன மகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| **வியாழன்**- முயற்சி பலிதம், பணக் கஷ்டம். | மு.ப. | 10 மணி |
| **வெள்ளி**- அந்நியர் உதவி, பலவித நன்மை. | பகல் | 11 மணி |
| **சனி**- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 1 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### கும்பம் — சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **திங்கள்**- பிரயாண மிகுதி, பணச் செலவு. | மு.ப. | 10 மணி |
| **செவ்வாய்**- அந்நியர் நட்பு, காரியானுகூலம். | பகல் | 12 மணி |
| **புதன்**- வெளிமிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | மு.ப. | 10 மணி |
| **வியாழன்**- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **வெள்ளி**- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| **சனி**- வெளிமிடப் பயணம், உயர்ந்த நிலை. | பகல் | 11 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3**

### கர்க்கடகம் — சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- புதிய முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. | 2 மணி |
| **திங்கள்**- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. | 1 மணி |
| **புதன்**- வெளிமிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. | 10 மணி |
| **சனி**- முயற்சி பலிதம், வெளிமிடப் பிரயாணம். | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

### மகரம் — சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- இனசனப் பகை, மனக் கலக்கம். | பகல் | 11 மணி |
| **திங்கள்**- வீண் முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 2 மணி |
| **செவ்வாய்**- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| **புதன்**- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை. | பகல் | 11 மணி |
| **வியாழன்**- வெளிமிடப் பயணம், காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| **வெள்ளி**- தொழில் உயர்ச்சி, இனசன நன்மை. | பகல் | 11 மணி |
| **சனி**- வெளிமிடப் பயணம், பணச் செலவு. | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### சிம்மம் — சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| **திங்கள்**- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **செவ்வாய்**- வீண் துயர், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 11 மணி |
| **புதன்**- பிரயாண மிகுதி, சஞ்சலம். | மு.ப. | 10 மணி |
| **வியாழன்**- பயனுள்ள செயல், காரிய சித்தி. | பி.ப. | 2 மணி |
| **வெள்ளி**- உயர்ந்த நட்பு, பண வரவு. | பகல் | 12 மணி |
| **சனி**- பிரயாணக் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 1 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4**

### தனு — சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| **புதன்**- வீண் துயர், பணச் செலவு. | பி.ப. | 1 மணி |
| **வியாழன்**- பெரியோர் உதவி, பலவித பேறு. | பகல் | 11 மணி |
| **வெள்ளி**- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| **சனி**- அந்நியர் பகை, காரியத் தடை. | பகல் | 11 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1**

### விருட்சிகம் — சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வெளிமிடப் பயணம், அந்நியர் நட்பு. | பகல் | 11 மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. | 10 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் உதவி, காரியானுகூலம். | மு.ப. | 9 மணி |
| **புதன்**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| **வியாழன்**- வெளிமிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 மணி |
| **வெள்ளி**- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 1 மணி |
| **சனி**- மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 2 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2**

### துலாம் — சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மனக்குறை நீங்கும், பலவித பேறு. | பி.ப. | 2 மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| **புதன்**- அந்நியர் நட்பு, பணச் செலவு. | பகல் | 12 மணி |
| **வியாழன்**- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **வெள்ளி**- பிரயாணக் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 1 மணி |
| **சனி**- தொழில் மந்தம், பயனற்ற செயல். | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5**

### கன்னி — சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் பகை, மனக் கவலை. | பகல் | 11 மணி |
| **திங்கள்**- துயர் நீங்கும், பலவித பேறு. | மு.ப. | 10 மணி |
| **செவ்வாய்**- அந்நியர் நட்பு, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| **புதன்**- வெளிமிட வாழ்க்கை, பணச் செலவு. | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **வெள்ளி**- மனக்குறை நீங்கும், சுபகாரிய நன்மை. | பி.ப. | 2 மணி |
| **சனி**- வெளிமிடப் பயணம், காரியானுகூலம். | பகல் | 11 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7**



படிப்பகம்

www.padippakam.com

## புட்டிப்பால்



குழந்தைகளுக்கு நான்கு மாதம் நிறைவடைநததும் தாய்ப்பாலோடு வேறு திரவ உணவுகளும் கொடுக்கலாம். போத்தல் மூலம் திரவ உணவு கொடுக்கும்போது மிகக் கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் போத்தல் மூலம் திரவ உணவு வழங்கும்போது குழந்தைக்கு உணவு மூலம் விஷத்தன்மை ஏற்படும் நிலை உள்ளது.

போத்தல் மூலம் திரவ உணவுகள் கொடுக்கும்போது கவனிக்கவேண்டியவை:

* குழந்தைக்கு உணவு தயாரிக்க ஆயத்தமாகும்போது முதல் வேலையாக கைகளைச் சுத்தமாக சோப் போட்டுக் கழுவிவிடவேண்டும்.
* போத்தல், நிப்பிள், மூடி போன்றவைகளைச் சூடான நீரில் போட்டு தொடர்ந்து சிறிது நேரம் சூடாக்குங்கள். கொதிக்கும்போது 10 நிமிடம் அவைகளைப் போட்டு எடுக்கவும்.
* குழந்தைக்கு கொடுக்க வேண்டிய தண்ணீரைக் கொதிக்க வைத்து, ஆற வைத்த பின்னர் போத்தலில் விடுங்கள்.
* தேவையான அளவு நீரை போத்தலில் ஊற்றிப் பின்பு அதில் மாவைக் கொட்டி போத்தலை மூடி நன்றாகக் குலுக்குங்கள். தேவைக்கு மட்டும் நீர் எடுக்கவும். கூடுதலாகவோ குறைவாகவோ நீர் இருக்கக்கூடாது.
* போத்தல் மூடியைக் கொதிக்கும் நீரில் மாற்றி போட்டு எடுக்க வேண்டும்.
* நிப்பிளைக் குழந்தையின் கையில் வைத்து விளையாட அனுமதிக்காமல் நேராக வாயில் கொடுங்கள்.
* குழந்தை தேவைக்குக் குடித்துவிட்டு மீதம் வைக்கும் பாலை வெளியே கொட்டி விட்டு சுத்தப்படுத்துங்கள்.
* குழந்தைக்கு உணவு கொடுக்க பயன்படுத்தும் எல்லாப் பொருட்களையும் சுத்தமாக வைத்திருங்கள்.

## தூங்குவதற்கு முன்



இரவில் தூங்கச் செல்வதற்கு முன்னால் கவனிக்க வேண்டியவை:

* வீட்டின் வெளிப்புற, உட்புற கதவுகள் எல்லாம் சரியாக அடைத்திருப்பதை உறுதி செய்யுங்கள். பாதுகாப்பற்ற முறையில் இருக்கும் ஜன்னல்களையும் அடைத்துப் பூட்டி விடுங்கள்.

* ஜன்னலின் அருகில் படுக்கக்கூடாது. அப்படியே படுத்தாலும் என்ன காரணத்தைக் கொண்டும் ஜன்னலைத் திறந்து போட்டபடி தூங்கக் கூடாது.

* குளியல் அறையின் மேல்பகுதி திறப்பை அடைத்து விடுங்கள்.

* படுக்கையின் அருகில் மண்ணெண்ணெய் விளக்கு, மெழுகுவர்த்தி போன்றவைகளை எரிய விடாதீர்கள். அத்தியாவசியமாகத் தேவைப்பட்டால் சற்று தூரத்தில் கொளுத்தி வைக்க வேண்டும்.

* படுக்கையின் அருகில் இரவில் டோர்ச் லைட்டை வைத்திருங்கள்.

* கேஸ் சிலிண்டரை மூடி விட்டீர்களா? என்பதையும் பார்த்துக்கொள்ளுங்கள்.

* தேவையில்லாத லைட்டுக்களை எல்லாம் அணைத்து விடுங்கள். அறையின் பிரகாசம் குறைந்த ஏதாவது ஒரு லைட் எரிந்து கொண்டிருப்பது நல்லது.

* தயிருக்கு வைப்பவர்கள், பாலில் 'உறை' ஊற்ற மறந்து விடக்கூடாது.

## மருந்தும் முருங்கையும்

முருங்கை இலையில் இருக்கும் மருத்துவ குணங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.

▫ முருங்கை இலைச்சாற்றை வெறும் வயிற்றில் குடித்தால் நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு நோய் குறையும்.

▫ முருங்கை மரத்தின் பட்டையை கஷாயம் வைத்துக் குடித்தால் பெண்களுக்கு ஏற்படும் வயிற்று வலி குறையும்.

▫ உணவுக்கு முன் அல்லது பின் முருங்கை இலைச்சாறு குடித்தால் இரத்த அழுத்தம் குறையும்.

▫ வாத நோயால் ஏற்படும் வலிக்கு முருங்கை மரப்பட்டையை அரைத்துத் தேய்க்கலாம்.

▫ முருங்கை இலை, பூ, காய் போன்றவற்றில் விட்டமின் ஏ.பி.சி. உள்ளது.

## எப்படியான புடவை?

★ கல்யாண வைபவங்களுக்குப் போகும்போதும், தெய்வ வழிபாட்டில் கலந்து கொள்ளும் போதும் பட்டுப் புடவைகளை அணியுங்கள். நல்ல அகலமான சரிகைக் கரையை விட, உடல் முழுக்க வேலைப்பாடுகள் செய்த புடவைகளே கவர்ச்சியான தோற்றத்தைத் தரும்.

* சாதாரணமாக புடவைகள் கனத்த நிறமாயின் ஜாக்கெட் வெளிர்நிறமாகவும், புடவைகள் வெளிர் நிறமாயின், கனத்த நிற ஜாக்கெட்டுக்களும் உகந்ததாக இருக்கும்.

* கடைகளுக்குச் செல்வதாக இருந்தால், நைலக்ஸ் புடவைகளை அணியுங்கள்.

* எங்கேயாவது ஹாயாகப் போவதென்றால் கைத்தறிப் புடவைகளை அணியுங்கள்.

* சினிமா போன்ற இடங்களுக்குச் செல்லும்போது, அந்தச் சமயத்தில் நாகரிகப் புடவைகளையே அணியுங்கள்.

* விருந்து போன்றவற்றிற்குச் செல்லும்போது, அழகு வேலைப்பாடுகள் செய்த உடைகளே உகந்தவை.

* மேலே சொன்ன விதங்களில் புடவை உடுத்திப் பாருங்கள். மற்றப் பெண்களும் உங்களைப் பின்பற்றி புடவை உடுத்த ஆரம்பிப்பார்கள்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DV

பெயர்:.......................

முகவரி:.......................

.......................

தொழில்:.......................

கையொப்பம்:.......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 13-06-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 38

**புவனா**

தனது புத்திரர்கள் இருவரும் அரண்மனை என்னும் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடப்பதை டயானா விரும்பவில்லை.

அவர்கள் சாதாரண மனிதர்களது உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள வேண்டும். துன்ப துயரங்களை தெரிந்து கொண்டு பக்குவப்பட வேண்டும் என்றே விரும்பினார்.

டயானாவின் நெருக்கமான சிநேகிதி அட்ரியன் வாட் ஜாக்சன்.



அவர் நோய் காரணமாக மரணப்படுக்கையில் கிடந்தார். அவரைப் பார்வையிடச் சென்ற டயானா தன்னுடன் வில்லியம், ஹரி இருவரையும் கூட்டிச் சென்றார்.

டயானாவின் சிநேகிதியின் ஆவி பிரியும் போதும் புத்திரர்கள் இருவரும் அருகிலேயே நின்றனர்.

டயானா எதிர்பார்த்ததைவிட வில்லியம் உலக அனுபவங்களை முதிர்ச்சியான கண்ணோட்டத்துடன் நோக்க ஆரம்பித்தான்.

தனது தாயாரின் சினேகிதியின் சடலம் அருகே நின்று வில்லியம் கூறிய வார்த்தை டயானாவை ஆச்சரியப்படவைத்துவிட்டது.

"கடைசியாக அவருடைய வேதனைகள் ஓய்ந்துவிட்டன. அமைதி நிலையை அடைந்துவிட்டார். இதுவே மகிழ்ச்சியான நிலை!" என்று கூறினார் வில்லியம்.

டயானாவுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. வில்லியம்மை வாரி அணைத்து உச்சியில் முத்தமிட்டார்.

அதன்பின்னர் தினமும் மாலை ஆறு மணியானதும் டயானா ஒரு காரியம் செய்ய ஆரம்பித்தார்.

இளவரசர் வில்லியம் அவரது தம்பி ஹரி இருவருக்கும் அவர்களது பாடசாலை நண்பர்கள் கடிதம் போடுவார்கள்.

அதைவிட அரச குடும்ப உறவினர்கள் மற்றும் நண்பர்களும் கடிதம் போடுவார்கள்.

அக் கடிதங்களை பிள்ளைகளுடன் அமர்ந்து படித்துப் பார்த்து, அவற்றுக்கு அவர்கள் கைப்படவே பதில் எழுதிப் போடச் செய்தார் டயானா.

தினமும் மாலை ஆறு மணிமுதல் ஒரு மணிநேரமாவது கடிதங்களைப் பார்வையிடவும், பதில் எழுதிப் போடவும் பழக்கினார்.

கடிதங்களுக்குப் பதில் போடுவது மட்டுமல்ல, அழைப்பின்பேரில் இராப்போசன விருந்துக்கோ, தேநீர் விருந்து போன்றவற்றுக்கோ சென்று வந்ததும், அழைப்பு விடுத்தவர்களுக்கு நன்றி தெரிவித்து கடிதம் போடவேண்டும் என்றும் டயானா சொல்லிக்கொடுத்தார்.

அரச குடும்பம் என்ற திமிர், பகட்டு, சோம்பேறித்தனம் போன்றவைதான் சாள்ஸை கெடுத்துக் குட்டிச்சுவராக்கின.

அந்தப் பழக்கங்கள் தன் பிள்ளைகளை அண்டக்கூடாது என்று டயானா விரும்பினார்.

தன் சிநேகிதி ஒருத்தருடன், டயானா பேசிக்கொண்டிருக்கும்போது, "என் பிள்ளைகளுக்கு மனைவியாக வருகிறவர்களும் டயானாக்களாகி விடக்கூடாது. அடுத்தவர் மனதைப் புரிந்து கொண்டு, ஒருவருக்கொருவர் அனுசரணையாக வாழ்வது எப்படி என்பதை அவர்கள் இப்போதிருந்தே கற்றுக் கொள்ளட்டும்!" என்று கூறினாராம்.

### பொலிஸ் வில்லியம்

ஒருமுறை பிள்ளைகளுடன் டயானா விளையாட்டாகப் பேசிக்கொண்டிருந்தார்.

ஹரி, டயானாவின் மடியில் படுத்திருந்தார். வில்லியம் டயானாவிடம், "மம்மீ! நான் பெரியாளாக வளர்ந்ததும் பொலிஸ்காரனாக வந்து உங்களைப் பாதுகாப்பேன்!" என்றார்.

டயானா நெகிழ்ந்து போனார். தனது பிள்ளைகள் தன்னை புரிந்துவைத்திருக்கிறார்கள், தன்மேல் உயிரையே வைத்திருக்கிறார்கள் என்ற நினைப்பால் அவரது இதயம் விம்மியது.


மடியிலே கிடந்த ஹரி: "அதுதான் முடியாதே! நீங்கள் அரசனாக வரவேண்டியவராயிற்றே!" என்று பெரும் உண்மையை கண்டுபிடித்துவிட்ட பெருமிதத்துடன் கூறினார்.

டயானாவின் சகோதரர் சாள்ஸ் ஸ்பென்சர். அவருக்கும் அரச குடும்பத்துக்கும் ஆகாது. எப்போதாவது வந்து டயானாவை நலம் விசாரித்துவிட்டு, மருமக்களான இளவரசர்கள் இருவருடனும் சிறிது நேரம் பொழுதைக் கழித்துவிட்டுச் செல்வார்.

இளவரசர்கள் வில்லியம், ஹரி இருவரும் ஓரளவு வளர்ந்துவிட்டதால் அவர்கள் பற்றியும் பத்திரிகைகள் எழுத ஆரம்பித்தன.

தன் மருமக்கள் பற்றி சாள்ஸ் ஸ்பென்சர் பின்வருமாறு கூறினார்: "பத்திரிகைகள் இளவரசர் வில்லியம்ஸ் கடுமையான குணம் உடையவர் என்றும், ஹரி மிகவும் அமைதியான சாது என்றும் கூறுகின்றன. ஆனால் வில்லியம் நல்ல புத்திசாலி. சிந்தித்துச் செயலாற்றும் தன்மை உடையவர். ஆனால் வெட்க சுபாவம் கொண்டவர். ஹரி மிகவும் துடுக்கானவர்!" என்று கூறினார்.

## அம்மா பிள்ளைகள்



"வில்லியம் தொலைபேசியில் உரையாடும்போது கவனித்தேன்; அனுபவ முதிர்ச்சியான ஒருவரைப்போல பேசுகிறார்," என்றும் சாள்ஸ் ஸ்பென்சர் கூறினார்.

### நீச்சல் பயிற்சி



பிள்ளைகளுக்கு விளையாட்டுக்களில் ஈடுபாட்டை ஏற்படுத்த டயானா ஆர்வம் காட்டினார்.

உடலுக்கும், மனதுக்கும் நம்பிக்கையும் பலமும் ஏற்படுத்துவதில் விளையாட்டுக்கள் பிரதான பாத்திரம் வகிக்கின்றன.

வெற்றி தோல்விகளை சுலபமாக எடுத்துக்கொள்ள விளையாட்டு உதவுகிறது. தன்னம்பிக்கையை வளர்க்கிறது.

பிள்ளைகள் இருவருக்கும் தானே நீச்சல் கற்றுக்கொடுத்தார் டயானா. இடைக்கிடையே படகுகளில் பயங்கரவேகத்தில் சவாரி செய்வார்கள்.

டயானாவுக்கு சாகசங்கள் செய்வது, ஆபத்துக்களோடு விளையாடுவது என்றால் பிடிக்கும்.

வாழ்க்கையில் ஒரு 'திரில்' இருந்துகொண்டே இருக்க வேண்டும் என்பது அவரது அபிப்பிராயம்.

அந்த அபிப்பிராயம் தன் உயிருக்கே ஒருநாள் உலை வைக்கப்போகிறது என்பதை டயானா அறிந்திருக்கமாட்டார்.

பயங்கரமான வேகத்தில் சென்ற கார் வழுக்கிச் செல்வதை இரசித்துக்கொண்டேதான் உலகைவிட்டு பிரிந்தார் டயானா.

படகுச் சவாரி செய்ய வில்லியமும் கற்றுக் கொண்டார். நீலக்கடலில் நீச்சலடிப்பது, படகுச் சவாரிகள் செய்வது என்றால் சிறு குழந்தை மாதிரியாகிவிடுவார் டயானா. அதனால் மூன்று குழந்தைகள் கடலில் விளையாடுவார்கள்- வில்லியம், ஹரி, டயானா.

### எங்கே வில்லியம்?

தன் பிள்ளைகள்மீது டயானா கொண்டிருந்த ஆழ்ந்த பாசத்திற்கு உதாரணமாக சம்பவம் ஒன்று நீச்சலின்போதும் நடந்தது.

ஹைகுரோஸ் மாளிகையில் நீச்சல் தடாகத்தில் டயானாவும், வில்லியமும் நீந்திக்கொண்டிருந்தனர்.

டயானா நீச்சலை முடித்துக்கொண்டு கரையேறி மாற்றுடை அணிந்தார். வில்லியமும் கரைக்கு வந்தார்.

திடீரென்று நீரில் தவறி விழுந்தார் வில்லியம். 'தொபுக்கடீர்' என்று சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்த டயானா பதறிப்போனார்.

"வில்லியம்!" என்று உரத்துக் கத்தினார்.

வில்லியம் கண்ணில் படவில்லை. உற்றுப் பார்த்தபோது நீரின் அடியில் கிடப்பது தெரிந்தது.

உடையைக்கூட மாற்றாமல் மீண்டும் நீரில் குதித்தார்.

அப்போது திடுதிப்பென்று எழுந்துதாவி நீரின்மேல் வந்த வில்லியம் பலத்த சப்தமிட்டு சிரித்தார்.

தாயை ஏமாற்றி பயப்படச் செய்துவிட்ட சந்தோசத்தில் வில்லியம் சிரித்துக்கொண்டிருக்க, டயானா கண்களில் கண்ணீருடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

### அண்ணன் – தம்பி

தான் பிரிட்டிஷ் ராணியாகப் போவதில்லை என்பது டயானாவுக்கு நன்கு தெரிந்தே இருந்தது.

இளவரசர் சாள்ஸ் மூன்றாவது சாள்ஸ் மன்னர் என்ற பெருமையைப் பெறப்போவதில்லை என்பதும் டயானாவின் நம்பிக்கை.

ஆனால் தனது பிள்ளைகள் இளவயதிலிருந்தே கட்டுப்பாட்டுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் வளர்ந்துவருவதால், பிரிட்டிஷ் சிம்மாசனத்துக்குரிய பொறுப்புக்களை ஏற்று நடப்பார்கள் என்று டயானா நம்பிக்கை கொண்டிருந்தார்.

அண்ணன்-தம்பி இருவரும் ஒருவர்மேல் ஒருவர் ஆழ்ந்த பற்றுதல் கொண்டிருந்தனர்.

ஆனால் இளவரசர் சாள்ஸோ அவரது சகோதரர் ஆன்ட்ரூவோ ஒருவர் மீது மற்றவர் அப்படி ஒட்டுதல் கொண்டிருக்கவில்லை. வெறும் சம்பிரதாய உறவாகவே அண்ணன்-தம்பி உறவும் அவர்களுக்கிடையே நிலவியது.

வில்லியம், ஹரி இருவரும் டயானாவின் அரவணைப்பில் ஒருவர்மீது ஒருவர் பாசமுடன் வளர்க்கப்பட்டார்கள்.

அதனால் அண்ணன் அரியணை ஏறினால் தம்பி அவருக்கு அனுசரணையாக இருப்பார் என்பதில் டயானாவுக்கு சந்தேகம் இருக்கவில்லை.

பிள்ளைகள் இருவரும் டயானாவின் தனிமையை போக்கினார்கள். 1991 செப்டம்பரில் அந்த சந்தோசமும் பறிபோனது.

வில்லியம் படித்த லுட்குரோஸ் பள்ளியில் ஹரியும் சேர்ந்தார். அதனால் தனிமையில் கூண்டுக்கிளியானார் டயானா.

அந்த தனிமையைப் போக்க புதிய நட்பு ஒன்று கிடைத்தது. (அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான்

**எஸ். ரோஜினி,**
168/4, இன்னர் ஃபிளாவர் வீதி, கொழும்பு-03

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக,வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## தினமுரசு–அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு–அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன் இல 04


* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
* தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com





வானமுண்டு, மாரி யுண்டு:
ஞாயிறும் காற்றும் நல்ல நீரும்
தீயும் மண்ணும் திங்களும் மீன்களும்
உடலும் அறிவும் உயிரும் உளவே!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# ஓநாயும் குதிரையும்

ஒரு காட்டில் ஓநாய் ஒன்று நரிகளுடன் நட்பாக இருந்து வந்தது. ஓநாய் மிகவும் நல்ல குணம் கொண்டது. ஆனால் ஓநாயுடன் நட்புக்கொண்டிருந்த நரிகள் கபடத் தன்மை கொண்டவை.

இருப்பினும் ஓநாய் நரிகளுடன் நட்புடன் மட்டுமே பழகி, அவற்றுடன் விளையாடி வந்தது. நரிகள் செய்யும் வஞ்சகச் செயல்கள் எதிலும் ஓநாய் பங்கெடுப்பதில்லை.

ஒருநாள் காட்டின் ஓரிடத்தில் குதிரை ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. அந்த வழியால் நரிகளின் இருப்பிடத்திற்குச் சென்று கொண்டிருந்த ஓநாய், குதிரையைக் கண்டது.

காய்ந்த புற்களை மேய்ந்து கொண்டிருந்த குதிரையைப் பார்த்த ஓநாய்க்கு பாவமாய் இருந்தது. உடனே குதிரையின் அருகே சென்று,

"நண்பா, பசும் புற்கள் சிறிதும் இல்லாமல் காய்ந்து போயிருக்கும் இந்தப் புற்களை மேய்கிறாயே! இதனால் உன் பசி அடங்குமா? இந்தக் காட்டின் ஓர் ஓரத்தில் பச்சைப்பசேலென புற்கள் செழுமையாக வளர்ந்திருக்கின்றன.

என்னோடு வந்தால் உனக்கு நான் அந்த இடத்தைக் காட்டுகிறேன். நீ அங்கு சென்று மேயலாம். இன்று மட்டுமல்ல, நீ தினந்தோறும் அங்குவந்து உன் பசி தீரும்வரை மேய்ந்துவிட்டுத் திரும்பலாம்,' என்று கூறியது.

இதைக்கேட்ட குதிரை, ஓநாயை ஒரு முறை ஏறெடுத்துப் பார்த்தது. பின் ஓநாயைப்



பார்த்து,

"ஓநாயே! உன்னுடைய யோசனைக்கு நான் மிகவும் நன்றி செலுத்துகிறேன். நீ சொல்வது உண்மையாகக் கூட இருக்கலாம். என்றாலும் உன்னுடைய நண்பர்களின் இயல்பை எண்ணிப் பார்க்கும்போது ஏதோ எனக்குக் கெடுதல் செய்யப் போகிறாயோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

நீ வேண்டுமானால் நல்லவனாக இருக்கலாம். ஆனால் உன் நண்பர்கள் மிகவும் கொடியவர்கள். அதனால் அவர்களுடன் சேர்ந்திருக்கும் உன்னையும் நம்ப முடியாது. ஆகவே உன் பேச்சை நம்பி உன்னோடு வர நான் தயாராக இல்லை."

இவ்வாறு சொல்லிவிட்டு தன் இருப்பிடத்தை நோக்கி விரைந்து சென்றது குதிரை.

சிலர் மிகவும் நல்லவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்களது நண்பர்கள் கெட்டவர்களாக இருந்தால், மற்றவர்கள் அவர்களையும் கெட்டவர்களாகவே நினைப்பார்கள். அவர்கள் நல்லது செய்ய நினைத்தாலும் அவர்களது கூடாத நட்பால் தீய நோக்கத்துடன் செய்வதாகவே மற்றவர்கள் எண்ணுவார்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள் சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.06.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 248**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 246

**பரிசுக்குரியவர்:**
இந்திரன் சேதுபதி,
மா/ கந்தேநுவர த.வி.அல்வத்த, மாத்தளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எஸ். மனோரஞ்சிதம்,<br>இ/ஹவுப்பை தமிழ் வித்தியாலயம், காஹவத்தை. | வை. சியாட்,<br>அநுராதபுர, நேகம, முஸ்லிம் மகா வித்தியாலயம். |
| ஐறின் றூபட்,<br>புதுமுகத்துவாரம் வீதி, கல்லடி, மட்டக்களப்பு. | எஸ். வேணுகரன்,<br>விஷ்ணு மகா.வி.பெரியநீலாவணை, கல்முனை. |
| ஏ. கியாஸ்,<br>அலிகார் தேசிய பாடசாலை, ஏறாவூர்-03. | யோ. பெனி,<br>6ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். |
| ஆர். சுரதிஸ்,<br>க/ கலாபொக்க த.வி, மடுல்கெல. | பா. அஸ்லா,<br>பாத்திமா மகளிர் ம.வி.,புத்தளம். |
| ஏ.பீ. நூர்முஹம்மத்,<br>ஸாஹிரா தேசிய பாடசாலை, புத்தளம். | எஸ். ரதீஸ்,<br>ஹைலன்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன். |

## மரியா மொண்டிசோரி

இத்தாலி நாட்டில் 1870ம் ஆண்டு பிறந்தார் மரியா மொண்டிசோரி. சிறு வயதிலேயே புத்திசாலியாக விளங்கிய இவர், 1890ல் மருத்துவக்கல்லூரியில் சேர்ந்தார். நாட்டின் முதல் பெண்மருத்துவ மாணவி என்ற பெருமையையும் பெற்றார்.

இவர் மருத்துவரான பிறகு மந்த



புத்தியுடைய சிறுவர்கள் பற்றியநூல் ஒன்றை எழுதினார்.

1900ம் ஆண்டு ரோமின் சிறப்பு மருத்துவப் பாடசாலையின் இயக்குநராக மொண்டிசோரி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

3 முதல் 6 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்காக 1906ம் ஆண்டு இவர் பள்ளிக்கூடத்தைத் தொடங்கினார். இங்கு சிறுவர்களுக்கு கருவிகள்கொண்டு கற்பிக்கும் முறையை அறிமுகப்படுத்தினார். அந்தக் கருவிகளை அவரே உருவாக்கினார். இதுவே இன்றும் 'மொண்டிசோரி கல்விமுறை' எனப்படுகிறது.

1918ம் ஆண்டு இவர் இறக்கும்வரை உலகெங்கும் சுற்றி, சிறுவர்களுக்குக் கற்பிக்கும் மொண்டிசோரி பள்ளிகளை அமைத்தார்.

## குட்டிச் செய்திகள்

★ ஹவாய் தீவில் உள்ள வை-எலே-எலே மலைப்பகுதியில் ஒரு வருடத்திற்கு 350 நாட்கள் மழை பெய்கிறது.

★ அமெரிக்கா 1781ம் ஆண்டே சுதந்திரப் போரில் வெற்றி கண்டாலும், 1783ம் ஆண்டு தான் சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்டது.

★ ருமேனியா நாட்டவர்கள் தாடி வைத்துக்கொள்ள வேண்டுமானால் அரசாங்கத்திடம் அனுமதி பெற வேண்டும்.

★ உலக அதிசயங்களில் ஒன்றான இந்தியாவில் அமைந்துள்ள தாஜ்மஹாலைக் கட்டி முடிக்க 15 ஆண்டுகள் பிடித்தன.

## அதிசயம் – ஆனால் உண்மை!

### பழமையான தூபி:



← லக்ஸம்பேர்க்கில் 882ல் இந்தத் தூபி கட்டப்பட்டது. 1944ல் லக்ஸம்பேர்க்கில் நடந்த விமானக்குண்டுவீச்சில் இந்தத்தூபி மட்டும்தான் அழியாமல் இருந்தது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், 1910ல் இது உறுதியற்ற தூபி என்றும் இதை உடைக்க வேண்டும் என்றும் தீர்மானித்திருந்தனர்.

### காவல் முதலைகள்:

↓ பாகிஸ்தானின் கராச்சிக்கு அருகேயுள்ள சிந்து நதிக்கரையில் மங்கோபீர் என்ற முஸ்லிம் பெரியாரது சமாதி உள்ளது. இந்தச் சமாதியை கடந்த 50 வருடங்களாக 4 முதலைகள் காவல்காத்து வருகின்றன.



### பாதிரியாரின் பயம்:

↓ ஜெர்மன் நாட்டில் 1803 முதல் 1832 வரை பாதிரியாராக இருந்தவர் கிறிஸ்டியன் ஃபிரான்ஸ் வெர்லமன். மேடைப் பேச்சென்றாலே பயப்படும் இவர் பாதிரியாராக இருந்த 29 வருடத்தில் ஒருமுறைகூட மதப் பிரசங்கம் செய்யவில்லை.



### டொனியின் சாதனை:

↓ அமெரிக்காவைச் சேர்ந்த டொனி டௌஸ்வெல் என்பவர் 1530 கிராம் உருகாத பனிக்கட்டியை 31.67 வினாடிகளில் சாப்பிட்டு முடித்து விட்டார்.



## வாரம் ஒரு நாடு

# கஸாக்ஸ்தான்

தலைநகர்– அல்மாதி
பரப்பு– 27,17,300 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை– 1.71 கோடி
மொழி– கஸாக், ரஷ்யன், ஜெர்மன்
சமயம்– இஸ்லாம், கிறிஸ்தவம்
எழுத்தறிவு– 97%
நாணயம்– டெங்கே
தனி நபர் வருமானம்– 2470 டொலர்

**அமைவிடம்:**

வடக்கே ரஷ்யா, கிழக்கே மொங்கோலியா, தெற்கே உஸ்பெகிஸ்தான், மேற்கே கஸ்பியன் கடல் ஆகியவற்றையும் எல்லைகளாகக் கொண்டது கஸாக்ஸ்தான்.

**வரலாறு:**

முன்னாள் சோவியத் குடியரசுகளில்



ஒன்று. 1991 டிசம்பரில் தனிநாடாய் பிரிந்தது.

**பொருளாதாரம்:**

முன்னாள் சோவியத் குடியரசின் மொத்த விவசாயப் பரப்பில் 20% கஸாக்ஸ்தானிலேயே இருக்கின்றது. தானியங்கள், பழவகைகள், பருத்தி போன்றவை முக்கிய விளைபொருட்கள். செம்பு, தாமிரம் போன்ற கனிவளச் சுரங்கங்களும் அதிகம் உள்ளன.

## சோளம்

சோளத்தின் பூர்வீகம் அமெரிக்கா என்று கூறப்படுகிறது. ஆனால் இதன் உண்மையான பூர்வீகம் எது என்பது இன்னும் நிரூபிக்கப்படாத இரகசியமாகவே உள்ளது.

'புல்' குடும்பத்தைச் சேர்ந்த சோளம் மக்காச்சோளம் மற்றும் சோளம் என இரண்டு வகைப்படுகிறது. மக்காச்சோளம் பல நாடுகளில் உணவாகப் பயன்படுத்தப்படுகிறது.

சோளம், காகிதம், நூல் போன்றவை தயாரிக்கப் பயன்படுகிறது. மேலும் சோளத்திலிருந்து எண்ணெயும் தயாரிக்கப்படுகிறது.



இங்கிலாந்தில் சோளம் கால்நடைகளின் உணவாகப் பயன்படுத்தப்படுகின்றது.

## கில்லட் ரேசர்

இப்பொழுது உலகம் முழுவதும் நாள்தோறும் கோடிக்கணக்கானோர் முகசவரம் செய்துகொள்ள பாதுகாப்பான சவரக்கத்தியைப் (RAZOR) பயன்படுத்துகின்றனர். பழங்காலத்தில் இப்போதுள்ள சவரக்கத்திகள் (RAZOR) போன்று இருக்கவில்லை. இரும்புக் கத்திகள் கொண்டே முகச்சவரம் செய்தனர். இதனால் முகத்தில் காயங்கள் ஏற்பட்டன.



இதனைத் தவிர்க்க ஏதுவாக அமெரிக்காவைச் சேர்ந்த கில்லட் என்பவர் புதுவகை சவரக்கத்தியைக் கண்டுபிடித்தார். அதுதான் தற்போது புழக்கத்தில் இருக்கும் சவரக்கத்தி. கில்லட் கண்டுபிடித்த சவரக்கத்திக்குப் பின் பல வகையான சவரக்கத்திகள் வந்துவிட்டன.

முதன் முதலாக ரேசரை அறிமுகப்படுத்தியவர் கில்லட் என்பதால் ரேசர்களுக்கு கில்லட் என்ற பெயர் வந்தது.

## வீசல்

மாமிசம் உண்ணும் விலங்குகளில் மிகவும் சிறியது வீசல் என்ற விலங்கு ஆகும். இதன் நீளம் 23 சென்டிமீட்டர் ஆகும். ஆண் வீசலின் நீளம்தான் இப்படி இருக்கும். ஆனால் பெண் வீசல் 10சென்டிமீட்டர்தான்.

மத்திய தரைக்கடல் பகுதிகளிலும் வட அமெரிக்காவிலும் பரவலாக இவை உள்ளன.

வரண்ட மணற்பாங்கான பகுதிகளிலேயே இவை அதிகம் வாழ்கின்றன. மணலில் வளை தோண்டியும், சிறுகற்களை அடுக்கியும், மரங்களின் வேர்ப்பள்ளங்களிலும் இவை தமது இருப்பிடத்தை அமைத்துக் கொள்கின்றன.

வீசல்கள் பெரும்பாலும் இரவு வேளைகளில்தான் நடமாடும். பகலில் இரை தேடுவது மிகவும் குறைவு. நிலத்தில் வாழும் எலி போன்ற சிறிய உயிரினங்கள் தான் இவற்றின் உணவு.



இவை தனித் தனியே வாழ்கின்றன. குட்டிகள் தாயுடன் சில மாதங்கள் சேர்ந்து வாழும். தம்மைக் கவனித்துக் கொள்ளும் அளவுக்கு வளர்ந்ததும் அவை தனியே போய்விடும்.



படிப்பகம்

www.padippakam.com

# நந்தினி 440 வோல்ட்

## திக் திக் திக் 14

### கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

இரவு பதினொரு மணி.

வழுக்குப்பாறை எஸ்டேட் பூராவும் நிசப்தமாய் இருந்த அந்த வேளையில்- தன்னுடைய பங்களா ஹாலில் யாரோ நடக்கும் சத்தம் கேட்டு, சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள் நந்தினி. "தப்... தப்..." என்று யாரோ நடக்கும் சத்தம்.

'இந்நேரத்துக்கு ஹாலில் யார்?'

தலையைத் திருப்பி- தன் அருகே படுத்திருந்த பாரியைப் பார்த்தாள் நந்தினி. அவன் லேசான குறட்டையொலியோடு, ஆழமான தூக்கத்திலிருந்தான்.

நந்தினி கட்டிலினின்றும் கீழே இறங்கி- மெதுவாய் அடிமேல் அடி வைத்து தன் அறைக் கதவை நோக்கிப் போனாள். கதவின் தாழ்ப்பாளைத் திறந்து ஹாலை எட்டிப் பார்த்தாள்.

ஹால் பூராவும் ஒருவித சாம்பல் இருட்டுத் தெரிய- அநத இருட்டில் யாரோ வாசல் கதவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். கொஞ்சம் பயந்த நடை.

பார்வையை உன்னிப்பாக்கிப் பார்த்தாள் நந்தினி.

ஆச்சரியப்பட்டாள்!

அங்கே சொப்னா!

'சொப்னா எதற்காக இந்த நேரத்திற்கு வெளியே போகிறாள்?' சுற்றும் முற்றும் ஒரு முறை பார்த்துக்கொண்டு வேக வேகமாய் சொப்னாவை நோக்கிப் போனாள்.

சொப்னா பங்களாவை ஒட்டின மாதிரி அவுட் ஹவுஸை நோக்கிப் போன- சிமெண்ட் பாதையில் தயக்கமாய்த் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போக-

நந்தினி அவளைத் தொடர்ந்தாள்.

சொப்னா விறுவிறுவென்று நடந்து போய்- ஸீரோ வாட்ஸ் வெளிச்சத்தில் தெரிந்த அவுட் ஹவுஸுக்குள் நுழைந்தாள்.

கதவருகே காத்திருந்த எஸ்டேட் சூபர்வைஸர் பிரகாஷ், இருட்டில் தாவி வந்து சொப்னாவின் இடையில் கையை வைத்தான். சொப்னா மெல்லச் சிரித்துக் கிசுகிசுத்தாள்.

"என்ன அய்யாவுக்கு ரொம்பவும் ஆசையோ...?"

"பின்னே... நீ பாட்டுக்குக் கோயமுத்தூர்ல போய் பத்து நாள் இருந்திட்டியே, நான் இந்தக் குளிர்ல ஆடிப்போயிட்டேன்."

"வாங்க... உள்ளே போயிடலாம்..."

"எல்லாரும் தூங்கிட்டாங்களா...?"

"பத்து மணிக்கே பாலைக்காய்ச்சி ஆளுக்கொரு தூக்க மாத்திரையைப் போட்டுக் குடுத்திட்டேன்... அந்தக் குருட்டுச்சனியன் மட்டும் பாலை வேண்டாம்ன்னு சொல்லிடுச்சு. எல்லாமே உங்களாலே வந்தது..."

"என்னாலா....?"

"பின்னே...? போட்ட பிளானை ஒழுங்கா பண்ண வேண்டாமா?"

"நான் சரியாத்தான் பண்ணினேன் சொப்னா... காரோட கண்டிஷன் என்னை ஏமாத்திடுச்சு. காட் ரோட்லேயே கவிழ வேண்டிய கார், கோயமுத்தூர்வரைக்கும் போய்த்தான் தன்னோட சுயரூபத்தைக் காட்டியிருக்கு. டிரைவர் கிருஷ்ணன் கொஞ்சம் புத்திசாலித்தனமா மண் மேட்டுல கொண்டு போய்- காரை மோதி நிறுத்தினதுல மூணுபேரும் தப்பிச்சுட்டாங்க. இந்த வாட்டி தப்பிச்சுட்டாங்க. அடுத்த தடவை நிச்சயமா சாகப்போறாங்க..."

வீட்டின் இருட்டுக்குள்ளே இருவரும் போனார்கள். கட்டில் 'க்றீச்'சிட்டுக் கொள்ள உட்கார்ந்தார்கள்.

"அக்ஸிடெண்டைப் பத்தி யாருக்கும் எந்த டவுட்டும் வரலியே?"

"பொலிஸுக்கு வந்தது... நாங்க எதையோ சொல்லிச் சமாளிச்சுட்டோம்...!"

"நந்தினிக்குக் கண்போன விஷயம் நமக்கு ஒரு ப்ளஸ்பாயிண்ட் சொப்னா... இந்த வீட்ல ஏறக்குறைய அவ ஜடம் மாதிரி ஆயிட்டா... அதே ஏக்கத்துல பாரியும் கொஞ்சம் கொஞ்சமா..."

"இதோ பாருங்க பிரகாஷ்... நீங்க என்ன செய்வீங்களோ, ஏது செய்வீங்களோ எனக்குத் தெரியாது. நந்தினியையும் பாரியையும் சீக்கிரமா முடிக்கணும். இந்த எஸ்டேட்டுக்கு சொந்தமான சொத்து பூராவும்- என்னோட மாமனாருக்குப் பின்னாடி என்னோட ஹஸ்பெண்ட்டுக்கு வரணும்..."

"கண்டிப்பா வரும்...!"

"நீங்க சீக்கிரமா ஏற்பாடு பண்ணணும்..."



"பண்றேன்... பண்றேன்... நீ மொதல்ல இப்படி வா... அப்பப்பா... இந்த உடம்பைத் தொட்டு எத்தனை நாளாச்சு...? உனக்கு என்னோட ஞாபகமே வரலையா...?"

"வராமே இருக்குமா...?"

"விமலை வெச்சு சமாளிச்சுட்டியாக்கும்..."

"சேச்சே... அவர் என்னைத் தொடவேயில்லை... அண்ணி நந்தினி மேலே அவருக்கு அபார பாசம்... அண்ணிக்குக் கண் ஆபரேஷன் நல்லபடியா முடியணும்ன்னு ராத்திரி பூராவும் புலம்பிட்டேயிருந்தார்... நந்தினிக்கு பார்வை இல்லேன்னதும் துடிச்சுப் போயிட்டார்... எவ்வளவு செலவானாலும் பரவாயில்லையாம்... அமெரிக்கா வரைக்கும் போயாவது பார்வையை மீட்டுத் தரப் போறாராம்.."

"அதுவரைக்கும் அவ உயிரோட இருந்தாத்தானே...?"

"என்ன பண்ணப் போறீங்க பிரகாஷ்...?"

"அடுத்த வாரக் கடைசிக்குள்ளே பாரியும் நந்தினியும் சாகப்போறாங்க...!"

"எப்படி...?"

"பாம்பு கடிச்சு..."

"எனக்குப் புரியலை..."

"காட்டு விரியனோட ரெண்டு குட்டிகளை ரெண்டுநாளா ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள்ளே போட்டு வளர்த்துட்டு வர்றேன்... அரை வயித்துக்குச் சாப்பிடக் குடுத்து... குச்சியாலே குத்திக் குத்தி அந்த ரெண்டு குட்டிக்கும் சீற்றத்தை வளர்த்துட்டு வர்றேன்... அடுத்த வாரத்துல ஏதாவது ஒரு நாள் நந்தினி- பாரி பெட்ரூம்ல அவங்க தூங்கிட்டிருக்கிற நேரத்துல- போர்வைக்குள்ளே அந்த ரெண்டையும் நீ விடப்போறே..?"

"நானா...?"

"ஒண்ணும் பயப்படாதே சொப்னா...! உனக்கும் ஆபத்தில்லாமே- மத்தவங்களுக்கும் தெரியாமே- அந்த ரெண்டு விரியன் குட்டியையும் எப்படி போர்வைக்குள்ளே விடறதுன்னு நான் உனக்குச் சொல்லித் தர்றேன்..."

சொப்னா மெல்லச் சிரித்தாள்.

"இந்தப் பிளானையாவது ஒழுங்காப் பண்ணுங்க பிரகாஷ்! ப்ளான் ஃபெய்லியரானாலும் பரவாயில்லை... நாம மாட்டிக்கக்கூடாது..."

"மாட்டிக்க மாட்டோம்...."

"நீ மாட்டிக்கிட்டாலும் என்னை மாட்டிவிட்டிடக் கூடாது..."

"நாம மொதல்ல பண்ணின இந்த ஒப்பந்தத்திற்கு என்னிக்குமே மதிப்புண்டு... அதேமாதிரி நாளைக்கு நீயும் உன் புருஷனும் இந்த எஸ்டேட்டுக்கு ஏகபோக ஓனர்ஸா மாறின பின்னாடி என்னைய மறந்துடக் கூடாது...!"

"என்னால மறக்க முடியுமா...? நான் மறந்தாலும் இந்த உடம்பு உங்களை மறக்காதே... ம்... மெதுவா...தோள்பட்டை ரெண்டும் நொறுங்கிடும் போலிருக்கு..."

"பத்து நாள் மோகம்...!"

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு- பிரகாஷ் கேட்டான்:

"நந்தினி ட்ரீட்மெண்ட் எடுத்த ஹாஸ்பிடல்ல ஏதோ மர்டர் நடந்ததாமே... உண்மையா சொப்னா?"

"ஆமா...! டாக்டர் ஒருத்தரை யாரோ கொன்னுட்டாங்க..."

"யாரு...?"

"யாருன்னு பொலிஸ் கண்டுபிடிக்க முடியாமே திணறிட்டிருக்காங்க...!"

"சரி...சரி...இந்த நேரத்துல அந்த பேச் செல்லாம் வேண்டாம்... இந்த சந்தோஷ மூட் அவுட்டாயிடும்...! என்ன சொப்னா... உடம்பு பூராவும் இந்த வாசம் அடிக்குது! வரும்போது சந்தன சோப் போட்டு குளிச்சிட்டு வந்தியா?"

"ஆமா...!"

"லைட்டைப் போடட்டுமா?"

"வேண்டாம்...வேண்டாம்..."

என்று பதற்றமாய்ச் சொன்னாள் சொப்னா, சட்டென்று பிரகாஷின் பிடியிலிருந்து திமிறி எழுந்து உட்கார்ந்தாள். அந்த ஸீரோ வாட்ஸ் வெளிச்சத்தில் முகம் மாறியிருந்தது.

"என்ன ' சொப்னா...ஏன் எழுந்துட்டே...?"

பிரகாஷும் எழுந்து உட்கார்ந்தபடி கேட்டான்.

"பிரகாஷ்!"

"ம்..."

"வெளியே ஏதோ சத்தம் கேட்கலை...?"

"சத்தமா...? என்ன சத்தம்...?"

"யாரோ பெருமூச்சு விடற மாதிரி சத்தம்...!"

சொப்னா சொல்ல, பிரகாஷ் காதுகளுக்கு உன்னிப்பைக் கொடுத்துக் கேட்டான். நிமிஷ நேரத்திற்குப் பின் உதட்டைப் பிதுக்கினான்.

"ஒரு சத்தமும் கேட்கலையே சொப்னா... நான் விட்ட மூச்சு உனக்கு அப்படிக் கேட்டிருக்கும்..."

"இல்லீங்க.. பிரகாஷ். அந்த மூச்சு சத்தம் வெளியேயிருந்துதான் கேட்டது. எதுக்கும் ஒரு தடவை நீங்க வெளியே போய்ப் பார்த்துட்டு வந்துடுறீங்களா?"

"வீணா நீ பயப்படறே சொப்னா. வெளியே காத்து வேகமா வீசியிருக்கும்... ம்..படு..." சொல்லிக்கொண்டே அவளை மல்லாத்தினான் பிரகாஷ். அவளுடைய முகத்தை மோப்பம் பிடித்து, நெற்றியில் முத்தமிட்டான்.

அவனுடைய கைகள் அவளுடைய உடம்பின்மேல்-

இயங்குகிற அதே விநாடி-

"தட்...தட்..."

கதவை யாரோ மெலிதாய்த் தட்டினார்கள். முதுகில் நெருப்பால் சுட்ட மாதிரி விருட்டென்று எழுந்து உட்கார்ந்தார்கள் இருவரும். சொப்னா வெறுமையாகிவிட்ட தன்னுடைய உடம்பை சேலையால் மூடிக்கொள்ள- பிரகாஷ் கதவை நோக்கிப் போனான்.

(தொடர்ந்து வரும்)

---

## வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்.

# 'அன்ன பூரணி அம்மா'

## பயணம் - 05

### ஈ.கே. ராஜகோபால்

சுந்தர மேஸ்திரியாரினால் கட்டப்பட்ட வல்வெட்டித்துறை 'அன்னபூரணி' அமெரிக்கா போகப்போகிறாள் என்ற சங்கதி பரவலாக எங்கும் அடிபடத் தொடங்கியது!

இந்தச் செய்தி-

கடலில் உலகம் சுற்றத் துடித்துக் கொண்டிருந்த இளைஞன் இரத்தினசாமிக்குத் தேனாக இனித்தது!

அந்தக் .கப்பலில் தானும் ஓர் ஊழியனாகச் சேர்ந்து கொள்வதென்று தீர்மானித்து விட்டார்!

கப்பலை வாங்கிய றொபின்சனுக்கு, அவரது கொழும்பு முகவரிக்குத் தன்னைப்பற்றியும், தன் அனுபவத்தைப் பற்றியும் குறிப்பிட்டுக் கடிதம் எழுதினார்.

தன்னைக் கடலோடியாகச் சேர்த்துக் கொள்ளும்படி விண்ணப்பித்தார்.

பதில் இல்லை.

சளைக்காத இரத்தினசாமி மீண்டும் கடிதம் எழுதினார்.

பதில் இல்லை.

லேசாக விட்டுவிடுபவரா இரத்தினசாமி?

கொழும்புக்குப் போனார்; றொபின்சனைச் சந்தித்தார்!

முன்னர் விண்ணப்பித்த விபரங்களையும், தனது விருப்பத்தையும் தெரிவித்தார்.

நிறைந்தளவு வேலைக்குள் ப்தில் எழுதுவது முடிந்த காரியமா? என்று கேட்டார் றொபின்சன்.

சில நிமிட நேரங்கள் இரத்தினசாமியுடன் பேசினார்.

இரத்தினசாமியைப் பிடித்து விட்டது!

'அன்னபூரணி'யில் அவரும் அமெரிக்காவுக்குச் செல்வது உறுதியாகி விட்டது!

★★

வல்வெட்டித்துறையில் அன்னபூரணிப் பாய்மரக் கப்பலை வாங்கிய றொபின்சன், பழைய தண்டையலையே தன்னுடையதான பின்னரும் நியமித்தார்.

தம்பிப்பிள்ளைத் தண்டையலும் இதற்குச் சம்மதித்தார்.

-தனது சுதந்திரத்தில் 'கைவைக்காத' அளவுக்கு நிர்வாகம் நடாத்தக் கூடிய ஒருவருக்குக் கீழ் தம்பிப்பிள்ளைத் தண்டையல் பணியாற்றுவதற்கு எப்பொழுதுமே தயாராக இருந்தார்!

அமெரிக்கருக்குக் கீழ் பணியாற்றுவது அவருக்கு அவ்வளவு கஷ்டமாகத் தோன்றவில்லை!

நாகப்பச் செட்டியாரிடம் பணியாற்றிய திறமை மிக்கவர் தம்பிப்பிள்ளையார்!

வல்வெட்டித்துறையிலிருந்து கொழும்புத் துறைமுகத்துக்குக் கப்பல் சென்றது! தம்பிப்பிள்ளைத் தண்டையல் கப்பலை ஓட்ட, றொபின்சன் அந்த அழகை இரசித்துக்கொண்டிருந்தார்.

அன்ன பூரணிப் பாய்மரக் கப்பல் அமெரிக்கா செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினார், றொபின்சன்!

கொழும்பில் 'அன்னபூரணி' புது மெருகு பெற்றுக் கொண்டிருந்தாள்!

வாக்கர்ஸ் கம்பனியினரே அவளுக்குப் புதிய தோற்றத்தை அளித்துக் கொண்டிருந்தார்கள்!

அமெரிக்காவுக்குப் போகிறாளல்லவா, சாதாரண விஷயமா?

எத்தனை ஆயிரம் மைல்கள்! ஆழ்கடலில் எத்தனை பயங்கரங்கள்!

இரட்டை பாய்மரக் கப்பலாக இருந்த அன்னபூரணி அம்மாளுக்கு 'என்ஜின்' பொருத்தப்பட்டது!

காற்றிலே அசைந்து, அசைந்து செல்வதற்குப் 'பாய்கள்' தான் அன்னபூரணிக்கு இயக்கமாக இருந்த போதிலும், சூனியப் பிரதேசத்தில் சமாளித்து, அதனை வெற்றி கொள்ள அந்த 'என்ஜின்கள்'தான் உதவும் என்பதை, 'அன்னபூரணியின் தண்டையல்' தம்பிப்பிள்ளை, றொபின்சனுக்கு யோசனை சொன்னார்.

அவசர அவசரமாக றொபின்சன் அமெரிக்காவுக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது!

றொபின்சன் திடீரென்று அமெரிக்காவுக்குப் புறப்பட்டதற்கு பிரமாதமான காரணம் ஒன்றுமில்லை!

தன் இதயராணி புளொறினை நினைத்துவிட்டார்!


செல்வத்தில் புரளும் அவருக்கு அமெரிக்காவுக்குப் போய்வருவது கஷ்டமான காரியமா?

பறந்து போய்விட்டார்!

'அன்னபூரணி'யின் அழகில் மயங்கி, அதன் அரவணைப்பிலே ஆழ்ந்து போயிருந்த றொபின்சனுக்கு, தன் காதல் ராணியின் அணைப்பும் அவசியம் தேவைப்பட்டது!

அவ்வளவுதான்!

அமெரிக்காவில் தன் அன்புக்குரியவளின் இதமான அணைப்பில் தன்னை



ஒரேயடியாக றொபின்சன் மறந்து போய்விடவில்லை!

இலங்கைக்குச் சில நாட்களிலேயே திரும்பிவிட்டார்! (அடுத்த வாரமும்...)

www.padippakam.com




33

> "டி. ஆர். ராஜகுமாரிக்கு விவாகம் செய்து கொடுக்கிற அளவுக்கு ஒரு வயது வந்த பெண் உள்ளதாமே?"
> "டி. ஆர். ராஜகுமாரிக்கே இன்னும் விவாகம் ஆகவில்லையே; பிறக்காத பெண் குழந்தை பற்றி என்ன சொல்வது?"
> *ஒரு கேள்வி பதிலில்...'கலை'–மார்ச் 1945 இதழில்...*

## பட்டுக்கோட்டை பிரபாகர்

**மு**கம் வெளிறிப்போய் பொம்மை மாதிரி அமர்ந்திருந்த துர்க்காவின் தோளைத்தொட்டார் ஈஸ்வர்.

"என்ன துர்க்கா? ஃபோன்ல யாரு?"

"புரொடக்ஷன் மேனேஜர் கோவிந்தராஜ் ஃபோன் செஞ்சாங்க!"

"என்னவாம்?"

"அவனுக்கு மதுமிதா ஃபோன் செஞ்சாளாம். நேத்து ஆஸ்பத்திரியிலேயே அவளும் சந்திரசேகரும் இரகசியமா கல்யாணம் பண்ணிக்கிட்டதாகவும், நாளைக்கு சாயங்காலம் ரிசப்ஷன் இருக்கிறதாகவும் சொல்லியிருக்கா!"

"இதென்ன புதுக்குழப்பம்? அவ நாளைக்குக் காலைலதான் கல்யாணம் பண்ணிக்கப்போறதாத்தானே நமக்கு தகவல் வந்தது?"

"ஆமாம். அதான் எனக்கு ஒண்ணும் புரியலை."

"கோவிந்தராஜ் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நமக்கு தகவல் தந்த அந்த வார்டு பாய் வெள்ளிக்கிழமைன்னு சொல்றதுக்குப் பதிலா ஞாயித்துக்கிழமைன்னு சொல்லியிருப்பானோ?"

"அதாங்க என்னோட பயமும்!"

"அல்ஃபோன்ஸா இன்னைக்கு ராத்திரிதானே கொல்லப்போறான்?"

"ஆமாம். வாங்க... உடனே நான் மதுமிதாவைப் பார்க்கணும். எனக்கு பதறுதுங்க."

துர்க்காவும், ஈஸ்வரும் உடனே புறப்பட்டார்கள். ஆஸ்பத்திரிக்கு வந்து மதுமிதாவின் அறைக்குள் புயலெனப் புகுந்தபோது, அவள் ஃபோனில், "சுண்டிப்பா வந்துடுங்க!" என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

அவள் கழுத்தில் புத்தம் புதிய தாலியைப் பார்த்ததுமே துர்க்காவுக்கு மயக்கம் வருவது போலிருந்தது.

ஃபோனை வைத்த மதுமிதா, "வாம்மா. என்ன இவ்வளவு அவசரமா புறப்பட்டு வந்திருக்கே?" என்றாள்.

துர்க்கா அருகில் வந்து மதுமிதாவின் கழுத்தில் தொங்கின தாலிக்கயிற்றை கையில் எடுத்துக்காட்டி, "என்னடி இது?" என்றாள்.

"தெரியலை? தாலி! உன்னோட ஆசீர்வாதத்தோட நடக்க வேண்டிய கல்யாணம், உனக்குச் சொல்லாமலேயே நடந்துடுச்சி. என்ன பண்றது? நீதான் எனக்கு கல்யாணம் நடக்கக் கூடாதுன்னு வரிஞ்சு கட்டிக்கிட்டு சதி பண்ணிட்டிருந்தியே... அப்புறம் உனக்கு எப்படி தகவல் சொல்ல முடியும்? நீ என்னோட சந்திரசேகர் மனசைக் கலைக்கப் போராடினே. ஆனால் அவர் என்மேல் வைச்சிருந்தது புனிதமான அன்புங்கறதை நேத்து எனக்குத் தாலி கட்டி நிரூபிச்சிட்டார்."

துர்க்கா வெறித்துப் பார்த்தாள்.

"அதிர்ச்சியா இருக்கா? நாளைக்குக் காலைல பிரஸ்மீட். சாயங்காலம் அம்பாஸிடர் பல்லவா ஹொட்டல்ல சிம்ப்ளா ரிசப்ஷன். இப்பகூட ஒண்ணும் மோசமில்லை. உனக்கு மனசிருந்தா நீ ரிசப்ஷன்ல கலந்துக்கலாம்."

துர்க்கா வியர்த்துப்போய் தொப்பென்று நாற்காலியில் அமர்ந்தாள்.

"என்னம்மா மயக்கமா வருதா? டாக்டரைக் கூப்பிடட்டுமா?"

"இல்லை. முதல்ல அந்த சந்திரசேகரை, ஃபோன்ல கூப்பிடு"

"எதுக்கு?"

"அவர் எந்த ஆபத்தும் இல்லாம இருக்காரான்னு முதல்ல தெரிஞ்சிக்கிடணும் மது!" என்றாள் தயக்கத்துடன்.

"என்ன செல்றே?"

"விபரம் அப்புறம் சொல்றேன். முதல்ல ஃபோன் பண்ணிப் பாரு!"

மதுமிதாவை லேசாக ஒரு பதற்றம் தொற்றிக்கொள்ள, அவன் வீட்டு டெலிஃபோன் எண்ணை அழைத்தாள். மணி அடித்துக்கொண்டே இருந்தது.

"என்னாச்சு?"

"பெல் அடிச்சுக்கிடடே இருக்கு!"

தன் தலையில் இரண்டு கைகளை வைத்துக்கொண்ட துர்க்கா, "நான் ஒரு பெரிய தப்புப் பண்ணிட்டேன் மதுமிதா. நேத்தே நீங்க ரெண்டு பேரும் கல்யாணம் செய்துக்கிட்டது தெரியாம முட்டாள்தனமா ஆத்திரத்தில் ஒரு முடிவு எடுத்துட்டேன் மதுமிதா!"

"என்னம்மா சொல்றே? சீக்கிரம் சொல்லும்மா. எனக்குப் பதறுது!"

"வந்து... வந்து நீங்க ரெண்டு பேரும் ஞாயிற்றுக்கிழமைதான் இங்க இரகசியக் கல்யாணம் பண்ணிக்கப்போறதா எனக்குத் தகவல் வந்துச்சு. இந்தக் கல்யாணம் எப்படியும் நடந்துடக்கூடாதுங்கறதில நான் ரொம்பத் தீவிரமா இருநதேன். அதனால..."

"அதனால?"

"இன்னைக்கு ராத்திரி அந்த சந்திரசேகரை கொலை செய்யச் சொல்லி மைக்கேல் அல்ஃபோன்ஸாங்கிற ரௌடிக்கு கூலி பேசி ஏற்பாடு செஞ்சிருந்தேண்டி....."



மதுமிதாவின் முகத்தில் இரத்தம் பாய்ந்தது.

"அடிப்பாவி! நீ ஒரு மனுஷியா?"

"இத பாரு! இப்ப நீ என்மேல ஆத்திரப் படறதில பிரயோஜனம் இல்லை. நம்ம சண்டையை அப்புறம் வெச்சிக்கலாம். கல்யாணம் நடந்துடக்கூடான்னுதான் மெனக்கெட்டேன். நடந்த கல்யாணத்தை நாசம் பண்ணி உன்னை விதவையாக்கற அளவுக்கு நான் அரக்கி இல்லை. அப்படி நான் நினைச்சிருந்தா சத்தம் போடாம வீட்லயே இருந்திருப்பேன். எப்படியோ உனக்கு கல்யாணம் ஆயிடுச்சி. நீ சுமங்கலியா இருக்கணும் மதுமிதா! அந்த சந்திரசேகரை காப்பாத்தியாகணும். அதுக்கு என்ன வழின்னுதான் இப்ப யோசிக்கணும். இதுவரைக்கும் எந்த விபரீதமும் நடந்திருக்கக் கூடாதுன்னு முதல்ல ஆண்டவனை வேண்டிக்கோ!" என்றாள் துர்க்கா.

***

**வி**யர்க்க விறுவிறுக்க காரை ஓட்டிக் கொண்டிருந்தான் சந்திரசேகர். அருகில் அந்தத் தடியன் கையில் கத்தியோடு உட்கார்ந்து விசில் அடித்துக் கொண்டிருந்தான்.

ஏதோ விபரீதம் என்பதை சந்திரசேகரால் உணர முடிந்தது.

நிச்சயமாக இது மதுமிதாவின் அம்மா துர்க்காவின் இன்னொரு புதிய சதி என்பதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.

'இந்த ஆபத்தில் இருந்து எப்படியாவது விடுவித்துக்கொள்ள வேண்டும். எங்கோ அழைத்துச் செல்கிறான். யாரோ இவன் தலைவன், எனக்குப் பதில் சொல்வான் என்கிறான்.

இந்தத் தனி நபரிடமிருந்து சாமர்த்தியமாகத் தப்பித்தால்தான் உண்டு. ஒருக் குரூப்பிடம் மாட்டிக்கொண்டால் பிறகு அவர்கள் கட்டுப்பாட்டில்தான் சிக்கியாக வேண்டும்.

என்ன செய்யலாம்? பேசிப் பார்க்கலாமா?'

"இத பாரு, இந்த மாதிரி என்னைக் கடத்திட்டு வரச்சொல்லி உனக்கு பொறுப்பை ஒப்படைச்சது மதுமிதாவோட அம்மா துர்க்கா தானே?" என்றான் காரை ஓட்டியபடி சந்திரசேகர்.

"அதெல்லாம் உனக்கு எதுக்கு?"

"வெளிப்படையா ஒரு பேரம்பேசத்தான் கேக்கறேன்."

"பேரமா?"

"ஆமாம். நீ என்னை எதுக்காகக் கடத்திட்டுப் போறேன்னு எனக்குத் தெரியாது. எதுக்காக இருந்தாலும் பின்னணியில கண்டிப்பா அந்த துர்க்காவோட பணம் விளையாடியிருக்குன்னு புரியுது. அவங்க எவ்வளவு பணம் இந்த வேலைக்குத் தந்தாங்களோ, அதைவிட அதிகமா நான் தர்றேன். எனக்குப் பணத்துக்குப் பஞ்சமில்லை"

"எதுக்கு?"

"என்னை சுதந்திரமா விட்டுட்டு நீ விலகறதுக்கு!"

"என் தலைவரு எனக்குக் கொடுத்த வேலையை நான் சரியா செய்யலைன்னாலே, என் தலை தப்பிக்காது. அவருக்கு எதிரா உன்கிட்ட காசு வாங்கிட்டு விட்டுட்டா... என் தலை மட்டும் இல்லை, சாம்பல் கூட என் குடும்பத்துக்குக் கிடைக்காது."

"யாரு உன் தலைவர்?"

"இப்பத்தான் நீ பார்க்கப் போறியே?"

அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே 'டமார்' என்று காரின் பின் டயர் வெடித்தது. கார் கோணல் மாணலாக ஓடி நின்றது.

இறங்கிப் பார்த்தார்கள்.

"டயர் பர்ஸ்ட் ஆயிடுச்சி" என்றான் சந்திரசேகர்.

"ஸ்டெப்னி இருக்குதில்ல?"

"இருக்கு!"

"உனக்கு டயர் மாத்தத் தெரியுமில்ல?"

"தெரியும்!"

"சீக்கிரம் மளமளன்னு மாத்து. தலைவரு வெய்ட் பண்ணிட்டு இருப்பாரு! சீக்கிரம்!"

அவன் டார்ச் லைட்டைப் பிடித்துக் கொள்ள, ஜாக்கி, டூல்ஸ், ஸ்டெப்னி எல்லாம் எடுத்து வைத்தான் சந்திரசேகர்.

ஜாக்கி வைத்து பர்ஸ்ட் ஆன சக்கரத்தைக் கழற்றினான். அந்த தடியன் ஏதாவது ஒரு விநாடி அசந்தால், அவனைத் தாக்கிவிட்டு ஓட்டம் பிடித்து விடலாமா என்று சிந்தனை ஓடியது.

அவனோ ஒரு கையில் விரித்த கத்தியும், மறுகையில் டார்ச் லைட்டுமாய் இவன் மேல் முழுக் கவனத்தையும் வைத்துக்கொண்டு நின்றிருந்தான்.

ஸ்டெப்னி சக்கரத்தைப் பொருத்தினான். ஒவ்வொரு நட்டாக டைட் செய்யத் துவங்கினான். கப் மாட்டினான். ஜாக்கியை விடுவித்தான்.

டூல்சை அதன் பையில் பொறுக்கிப் போட்டான். பழுதான சக்கரத்தை டிக்கியில் வைத்தான். ஜாக்கியை எடுத்தும் வைத்தான். ஜாக்கியை உயர்த்தும் நீள ராடை கடைசியாக, கையில் எடுத்த சந்திரசேகர் சட்டென்று அதனால் கத்தி பிடித்திருந்த கையில் ஓங்கி அடிக்க... கத்தி கீழே நழுவி விழ... அவன் வலி பொறுக்க முடியாமல் அலறி சற்றே தடுமாறி விலக...

அந்த விநாடியைப் பயன்படுத்திக் கொண்ட சந்திரசேகர், மீண்டும் அந்த ராடால் அவனது தோள் பட்டையில் தாக்கினான்..

ஆனால், அதை எதிர் பார்த்தவன் போல் அவன் தடுத்துப் பிடுங்கியதில் பிடி நழுவி, ராடு அவன் கைக்குச் சென்றுவிட்டது.

அவன் ஆவேசத்தோடு ராடைத் தூக்கித்தாக்க வந்து, அதே விநாடியில் குனிந்து கத்தியையும் கையில் எடுத்துக் கொண்டுவிட்டான்.

"இதப்பாரு, நீ அடிச்ச அடிக்கு உன் உடம்புல ஒரு எலும்பு உருப்படியா இல்லாம என்னால பின்னி எடுத்துட முடியும். ஆனா என் தலைவர் உன்மேல ஒரு கீறல் கூட விழாம கூட்டிட்டு வரச் சொன்னார். அவர் வார்த்தைக்கு மரியாதை கொடுத்து, பதிலுக்குத் தாக்காமவிடறேன். இந்த வீரசாகச விளையாட்டெல்லாம் வேணாம். மரியாதையா கார்ல உக்காரு! ம்!"

அவனுடைய அதிகார மிரட்டலுக்குக் கட்டுப்படுவதைத்தவிர வேறு வழியில்லாததால் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு காரில் அமர்ந்தான் சந்திரசேகர்.

அவனும் அமர்ந்து, "ம்! ஸ்டார்ட் செய்! பக்கம்தான். இன்னும் அஞ்சி நிமிஷம்தான்-ஓட்டு!" என்றான்.

கார் ஓடத் தொடங்கியது.

●●●

**போ**னை வைத்த துர்க்கா, "மைக்கேல் அல்ஃபோன்ஸா லாட்ஜ் ரூம்ல இல்லை. அவன் தன் திட்டத்தை எங்கே வெச்சி செயல்படுத்தறதா பிளான் செஞ்சிருக்கான்னு சத்தியமா எனக்குத் தெரியாது மதுமிதா. இப்ப என்ன செய்யறது?" என்று கைகளைப் பிசைந்தாள்.

(தொடர்ந்து வரும்)

---

# நில்–கவனி–முன்னேறு

**சி**னிமா நடிகைகள் எல்லோருமே ஒரே மாதிரி குணங்கெட்டவர்களோ, நடத்தை கெட்டவர்களோ அல்ல; அவர்களிலே உன்னதமான குணம் கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள்.

சுற்றம் காத்தல், விருந்தோம்பல், மரியாதை அனைத்தும் தெரிந்தவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்.

தயாரிப்பாளர்களின் கழுத்தை நெரித்த நடிகைகளும் உண்டு; கை கொடுத்து உதவிய உத்தமிகளும் உண்டு.

இரண்டாம் வகையைச் சேர்ந்தவர் தேவிகா.

அவர் கதாநாயகியாக நடித்தபோது இன்றைக்கிருக்கும் பல நடிகைகளைவிட, நன்றாகவே நடித்தார்; அழகாகவே இருந்தார். வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கத் தெரியாத காரணத்தால் வாழ்க்கையில் தோல்வியடைந்தார். இல்லையென்றால் தேவிகாவின் குணத்துக்கும், நடத்தைக்கும், எவ்வளவோ நிம்மதியான வாழ்க்கை அமைந்திருக்கும்.

"என்ன, உங்கள் படங்களில் தேவிகாவை விட்டால் வேறு யாரும் கிடைக்கவில்லையா?" என்று நண்பர்கள் பலர் என்னைக் கேட்பார்கள்.

"எந்தக் குடை மழையிலிருந்தும், வெயிலிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகிறதோ- அந்தக் குடையைத்தானே நான் தேர்ந்தெடுக்க முடியும்!" என்பேன் நான்.

படப்பிடிப்பிற்கு நேரத்தில் வருவார், பணம் கொடுத்தால்தான் வருவேன் என்று பிடிவாதம் செய்யமாட்டார்.

தயாரிப்பாளர்களின் கஷ்ட நஷ்டங்களில் முழுக்கப் பங்கு கொள்வார்.

என்னைப் பொறுத்தவரை, சில நேரங்களில் நான் திட்டி விட்டாலும், அழுது விடுவாரே தவிர, முறைத்துக்கொள்ள மாட்டார்.

தமிழ் நாட்டிலேயே அதிகம் வளர்ந்த ஆந்திரப் பெண்மணியான இவர், தெலுங்கை விடத் தமிழைத்தான் அழகாக உச்சரிப்பார்.

குடும்பப் பெண்ணாக நடித்தால், மயக்கம் தரக்கூடிய உருவங்களில இவரது உருவமும் ஒன்று.

இந்த வாரம், ஒரு தெலுங்குப் படம் எடுப்பது பற்றிப்பேச அவர் என்னைச் சந்தித்தார்.

குடும்பத்துக்காகவே வாழும் சினிமா நடிகைகளில் தேவிகாவும் ஒருவர்.

> **முன்னாள் பிரபல நடிகையும் இந்நாள் நடிகை கனகாவின் தாயாருமான தேவிகாவை தன் கண்ணோட்டம் என்னும் கமராவால் படம்பிடிக்கிறார் கவியரசு கண்ணதாசன்.**

எந்தக் காலத்திலும் சொந்த ஆசைகளுக்காக, குடும்பத்தின் நலனை அவர் தியாகம் செய்ததில்லை.

'அப்பாவி' என்றொரு சொல் தமிழில் உண்டு. இது 'பாவி' என்பதன் எதிர்மறை. 'பிரதட்சிணம், அப்பிரதட்சிணம்' என்பது போல, 'ஒரு பாவமும் அறியாதவர்' என்பதே அதற்குப் பொருள்.

மனமறிந்து-அல்ல, தற்செயலாகக்கூட யாருக்கும் தீங்கு செய்தறியாதவர் தேவிகா.

'ஆண்டவன் நல்லவர்களையே சோதிப் பான்' என்றபடி, அவருக்கும் சில சோதனைகள் வந்தன.

ஆண் துணை இல்லாத தேவிகா, அந்தச் சோதனைகளில் இருந்து தன்னைத்தானே காத்துக்கொள்ள வேண்டியவரானார்.

'நந்தன் படைத்த பண்டம், நாய்பாதி, பேய்பாதி' என்பார்கள் என் தாயார்.

அதுபோல், தேவிகாவின் பணத்தையும் சிலர் சாப்பிட்டுவிட்டுப் போனார்கள்.

அதனை எண்ணி, தேவிகா துன்புற வில்லை.

எப்போது அவருக்கு என்ன துன்பம் வந்தாலும், எனக்குத்தான் டெலிஃபோன் செய்வார்.

என்னவோ, ஆண்டவன், அவருக்கும் எனக்கும் ஓர் ஒற்றுமையைக் கொடுத்தான். எனக்கு இருப்பது போலவே அவருக்கும் இரத்தக் கொதிப்பு இருக்கிறது.

**கவியரசு கண்ணதாசன்**

சினிமா உலகில், ஒவ்வொரு நாளும் சோதனைகளைத் தாங்கிக்கொண்டு, மற்றவர்களுக்காகவே வாழும் உயர்ந்த பெண்களில் ஒருத்தி தேவிகா.

துரதிஷ்டவசமாக எனது 'மங்கல மங்கை'ப் படம் பாதியிலேயே நின்றுவிட்டது.

அதில் ஒரு விரகதாபப் பாடலுக்கு தேவிகா நடித்ததைப் போல, அதற்கு முன்னாலும் பின்னாலும் எவரும் நடித்ததில்லை.

லால்பகதூர் சாஸ்திரி காலத்தில் பாகிஸ்தான் யுத்தத்தின்போது, சினிமா நடிகை நடிகர்கள் பெரும்பாலோரோடு, நானும் பஞ்சாப் முழுவதையும் சுற்றுப்பிரயாணம் செய்தேன்.

இரண்டு விமானப்படை விமானங்களில்தான் பயணம்.



விமானம் உயரமாக இருக்கும். அதற்கும் ஏணிக்கும் உள்ள தூரம் மூன்றடி உயரம் இருக்கும். எல்லோரும் மள மளவென்று ஏறிவிடுவார்கள். எனக்கு மட்டும் கால்கள் நடுங்கும். எனக்குக் கை கொடுத்து விமானத்துக்குள், இழுத்துக் கொள்வது தேவிகாவே.

ஒரு படத்தில் அவருக்காக, 'பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமானே' என்ற பாடலை எழுதினேன்.

என்னிடம் செல்லமாகப் பாடவேண்டும் போல் தேவிகாவுக்குத் தோன்றினால், அந்தப் பாடலைத்தான் பாடுவார்.

வாழும்போது உலகம் கூட வரும்; தாழும்போது ஒடிவிடும். இது வாடிக்கை. இதை நன்றாக உணர்ந்தவர் தேவிகா.

சினிமாப் படப்பிடிப்பு, இப்போது தெருக்கூத்து மாதிரி ஆகிவிட்டது. அந்தக் காலங்களில், அது ஒரு தெய்வீக அம்சமாக இருந்தது.

கதை, வசனம், பாட்டு, டைரக்ஷன், நடிப்பு எல்லாமே பொறுப்போடு இயங்கிய காலம் அது.

சில சமயங்களில், தனியாக உட்கார்ந்திருக்கும்போது அந்தக் காலங்களை நினைத்துப் பார்ப்பேன்.

சில உன்னதமான உருவங்கள் படம் படமாகத் தோன்றும்.

தேவிகா-

ஒரு நாள் கூடப் படப்பிடிப்பை இரத்து செய்து என் தூக்கத்தைக் கலைக்காத தேவிகா.

என்முகம் கொஞ்சம் வாடியிருந்தால் கூட, 'அண்ணனுக்கு என்ன கவலை?' என்று கேட்டு, என்னைப் புகழ்ந்தாவது ஒரு நிம்மதியை உண்டாக்கிவிடும் தேவிகா.

அவர் ஒரு சினிமா நடிகைதான்.

ஆனால் பல குடும்பப் பெண்களை விட உயர்ந்த குணம் படைத்தவர்.

'பிரமிளா' என்ற தேவிகாவை நான் நினைக்கும் அளவுக்கு யார் நினைக்கப் போகிறார்கள்?



படிப்பகம்

www.padippakam.com

"அந்த லெட்டரை இன்னிக்கே போஸ்ட் பண்ணிடுங்க சுகந்தி!"

"ஓகே சார்!" என்றபடி இருக்கையை விட்டு எழுந்தாள். நளினமாய்த் திரும்பினாள். அழகான நடையில் கதவைத் திறந்து, மறைந்தாள்.

நான் அவள் சென்ற திசையிலேயே கதவை வெறித்தேன்.

'இது தவறு' என்று பட்டாலும், மனத்தில் சலனம். ஆடிக்காற்றினால் குளத்தில் எழும் அலை கரையை நோக்கி தவழ்வதுபோல என் மனத்திலும் சலன அலைகள். அவளை நோக்கியே செல்கின்றன.

அன்பான மனைவி, சூட்டிகையாய் இரு குழந்தைகள் கொண்ட குடும்பத் தலைவன் நான்.

இதுவரையில், அபீசிலும் சரி, நண்பர் உறவினர் மத்தியிலும் சரி, 'ஜென்டில்மேன்' இமேஜைக் காப்பாற்றி வருபவன். அதுவும் பெண்களிடையே நிலவும் அக்கப்போர் பேச்சுக்களில் அடிபடாதவன்.

ஆனால் இப்போது...? போன வாரம் புதிதாய் வேலையில் சேர்ந்தாள். எனது ஸ்டெனோ பிரசவ லீவில் சென்றுவிட எனக்கே ஸ்டெனோவாய் இவள் வந்து சேர்ந்தாள்.

முதல் சந்திப்பிலேயே எனக்குள் ஒரு 'க்ளிக்' சத்தம். அலட்சியப்படுத்தினேன். ஆனால் மீண்டும், மீண்டும் 'க்ளிக்' ஓசையினால் கலவரமடைந்தேன்.

என்னை அறியாமலே என் உணர்வுகள் ஜலதரங்கம் வாசிப்பதை நிறுத்த விரும்பினாலும் முடியாமல் திகைத்தேன்.

நான் என்ன கல்லூரி மாணவனா? காதல், கீதல் என்ற மாயையில் சிக்கும் வயதா இது? நாற்பது வயதாகியும்கூட முதிர்ச்சி அடையவில்லையா என் மனது?

குழப்பத்தில் மிஞ்சியது குழப்பம் மட்டுமே!

தொலைபேசி ஒலிக்கவே பெருமூச்சு விட்டபடி எடுத்தேன்.

அலுவலக வேலைப் பளுவில், எனது இயந்திர புத்தியின் இயக்கத்தில் ஓரளவு என் குழப்பத்தை மறந்தேன்.

ஆனால், மாலை வீடு திரும்பும்போது அவளின் நினைவுகள் மீண்டும் தலை தூக்கின.

பானு கண்டுபிடித்துவிட்டாள். எனது ஒவ்வொரு அசைவும் அத்துப்படியான அருமையான மனைவி. இவள் அருகில் இருக்கும்போது, மற்றொருத்தியைப் பற்றி எண்ணுவதே துரோகம்.

"என்னங்க ஒரு மாதிரி இருக்கீங்க?" ஒற்றைத் தலைவலியா?

"ப்ச்"

"ஒரு வாரமாகவே உங்களோட கல கலப்பு காணோமே!"

நான், அவள் கொடுத்த காபியைக் குடித்தேன்.

இவளிடம் சொன்னால் என்ன என் பிரச்சனையை?

சரியான விதத்தில் புரிந்து கொள்வாள்! எனக்கு நம்பிக்கையிருக்கிறது!

'மற்ற பிரச்சனைகள் வேறு, இது வேறு! மனைவி என்ற ஸ்தானம் பெண்ணை யோசிக்கவிடாமல், கோபப்படவே செய்யும்' என்றது திமிர் குரல்-என் உள்ளிருந்து.

இருந்தாலும், வேறு வழியில்லை! என் அவஸ்தையை வேறு யாரிடமும் சொல்லி ஆறுதல் தேட முடியாது. இந்தப் பிரச்சனையில் இவளுக்கும்கூட சம்பந்தம் உள்ளது.

முடிவுடன் பானுவை ஏறிட்டுப் பார்த்தேன்.

வருடிக்கொடுக்கும் புன்னகையுடன் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவள் கண்களையே பார்த்தபடி என் குழப்பத்தை, சஞ்சலத்தைக் கூறி வைத்தேன். அவள் பார்வையில் மாற்றம் ஏதும் இல்லாததைக் கண்டு நம்பிக்கை துளிர்த்தது.

"எத்தனையோ பெண்களைச் சந்திக்கறீங்க. ஆனால், இதுவரை இந்த மாதிரி நீங்க சொன்னதே இல்லையே?"

"உண்மைதான் பானு."

"அந்தப் பொண்ணு எப்படி இருப்பா? உங்களுக்கு நெருங்கின சொந்தம் யாரோட முக ஒற்றுமையும் அவளிடம் இருக்கா?"

யோசித்து உதட்டைப் பிதுக்கினேன்.

"ஒரு பெண் உங்க மனசுல சலனம் ஏற்படுத்தறான்னா, நிச்சயம் ஏதாவது காரணம் உங்க அடி மனசுல இருக்கணும். உங்களுக்குள்ளேயே உள்ளே போய்தோண்டிப் பாருங்க. ஏதாவது ஒரு பாதிப்பின் எதிர் விளைவுதான் இவளால் ஏற்படும் உணர்வு உங்களிடம்!" என்றவளைச் சிந்தனையுடன் பார்த்தேன்.

'யாருடைய பாதிப்பு?' புரியவில்லை.

இரவு சாப்பிடும்போதும், டி.வி.யில் செய்தி கேட்டபோதும், ஏன் பானுவை அணைத்தபடி படுத்தபோதும்கூட இதே சிந்தனை!

காற்றாடியின் சத்தம். இரவு விளக்கின் மெல்லிய ஒளிப் போர்வை. பக்கத்தில் லேசாய் வாய் திறந்து படுத்திருக்கும் பானு, சற்றுத் தள்ளி குழந்தைகள் விளையாடிய அலுப்பின் கோணங்களில் தூங்கிக்கொண்டிருக்க, நான் மட்டும் விழித்திருந்தேன்.

# சலனம்



தன் கணவன் மனம் வேறொரு பெண்ணால் சலனப்பட்டது தெரிந்தும், எப்படி இவளால் நிம்மதியாய்த் தூங்க முடிகிறது?

மாடு எங்கே மேயப் போனாலும், கயிற்றின் நுனி தன்கையில்தான் என்ற நம்பிக்கையோ!

ச்சே! என்ன மனுஷன் நான்.

சுகந்தி! ஏன் இப்படிப் படுத்துகிறாள்? அவள் உருவம் மனத்தில் தோன்றி, மெல்ல சிரித்து, கண்ணை மூடித்திறக்க...

அட! எனக்குள் ஒரு கதவு திறந்த வெளிச்சம்.

"பானு.."-பரபரப்பாய் அவளை எழுப்பினேன்.

கொட்டாவி விட்டபடி எழுந்தாள்.

"என்னங்க?"

"எனக்கு விடை தெரிஞ்சிடுச்சு!"

"என்ன விடை?"

"அதான், அந்த சுகந்தி பற்றியது!"

ஒரு நிமிடம் என்னைப் பார்த்தாள்.

நிதானமாய் எழுந்து பாத்ரூம் சென்று திரும்பினாள்.

**கிருஷ்ணா**

"இப்ப சொல்லுங்க."

அவளின் நிதானம் எனக்கு எரிச்சலூட்டியது.

"என்னங்க? என்ன விடை?"

"பானு, விடலை வயசுல, முதன் முதலில் இளமை உணர்வுகள் பெண்மையால் ஈர்க்கப்படும் பருவத்தில்தான் அது நடந்தது. மனைவின்னா எப்படி இருக்கணும்னு நான் வேடிக்கையாய் கற்பனை செஞ்சு பார்ப்பேன். என்னையறியாமலேயே ஒரு சித்திரம் என்னுள் வரையப்பட்டது. அடிக்கடி அந்த சித்திர உருவம் மனத்தில் தோன்றி பரவசப்படுத்தும் என்னை."

"ஓகோ!" என்றாள் வியப்பாய்.

"ஆனால், உன்னைக் கல்யாணம் பண்ணினதுக்குப் பிறகு அந்த உருவம் என் மனசுலே வரலே. நிழலைத் துரத்தின எனக்கு, நிஜமாகவே ஒரு மனைவி கிடைச்சதுனாலேயோ, என்னவோ, அந்த உருவம் மங்கலாகி மறைஞ்சு போச்சுன்னு நினைச்சேன். ஆனால் அந்த சுகந்தியைப் பார்த்ததும் மங்கலாய், தூசி படிந்து மறைந்திருந்த உருவம் லேசாய் வெளிச்சம் பெற்று, இப்ப பளிச்சுனு தெரியறான்னு படுது!" என்றேன்.

பானு என்னைப் பரிவுடன் பார்த்தாள்.

"என்ன பானு?"

"நீங்களே சொல்லிட்டீங்க சித்திரம்னு."

"புரியலே"

"சித்திரங்களை இரசிக்கத்தான் முடியும். அதோடு வாழ முடியாது இல்லையா?"

தலையாட்டினேன்.

"நீங்க விரும்பற சில குணங்கள் அந்தப் பெண்ணிடம் இருக்கலாம். அதே மாதிரி நான் இரசிக்கிற சில குணங்கள் உங்களிடம் இல்லாதிருந்து வேறொரு ஆணிடம் இருக்கலாம். இரசனை என்பது மனிதன் இரகசியம். தனி மனிதனின் உரிமை. அப்படி இரசிக்கிறதே தப்போன்னு ஒரு குறுகுறுப்பு உங்க மனசுல இருக்கறதுனாலே வந்த குழப்பம் தான் இதுவும். வேறெதுவும் கள்ளத்தனமிருந்தா உங்களாலே இவ்வளவு தெளிவா பேசவும் முடியாது. சிந்திக்கவும் வராது. அதனால..."

"சொல்லு பானு."

"நீங்க தாராளமாய் யாரைவேணும்னாலும் இரசிக்கலாம்.,ஒரு ஓவியத்தை இரசிக்கிற மாதிரி, ஒரு கால்பந்தாட்டத்தைப் பார்த்துப் பரவசப்படற மாதிரி. சர்க்கஸில் பார் விளையாடறவனைப் பார்த்து பிரமிக்கிற மாதிரி... இதுலேயும் தவறு ஒன்றுமில்லை!"

எனக்குள் ஒரு புதுக் கருத்தைத் தெளித்துவிட்டு புன்னகைத்தாள்.

அடுத்த நாள் சுகந்தியை ஆபீசில் சந்தித்தபோது என்னுள் சலனமில்லை.

"வாவ், உங்களுக்கு இந்தப் புடவை அமர்க்களமாயிருக்கு சுகந்தி. என் மனைவிக்குக்கூட வாங்கலாம் போலிருக்கே?" என்றேன் இரசிப்புடன்.

சுகந்தி பெருமையுடன் புன்னகைத்தாள், என் பாராட்டுதலால்.

---

ஜன்னல் வழியாக வெளியே பார்வையை ஓட்டினாள் ஜமுனா. மணி ஏழைக் கடந்து வெகுநேரமாகியும் பனிப்படலம் தடுமாறிக் கொண்டிருந்தது. மணல்மேட்டில் பசுமாடு ஒன்று தன் கன்றுக்குட்டிக்குப் பாலூட்டி அதன் முகத்தை நாக்கால் நக்கியது.

ஜமுனா 'படார்' என்று ஜன்னலை அடித்துச் சாத்திவிட்டு அருகிலிருந்த கட்டிலில் தொப்பென்று உட்கார்ந்தாள். பொருமலும், பெருமூச்சும் அவளிடமிருந்து புறப்பட்டன. கண்களில் இருந்து வழிந்தநீர் உதட்டில் உப்பாய்க் கரித்தது கூடத் தெரியாமல் ஜமுனா பலத்த சிந்தனையில் தங்கப் பதுமையாக மாறிப்போயிருந்தாள். கதிரேசனைக் கைப்பிடித்து வருடங்கள் பத்தாய் நீண்டுவிட்டன. மாளிகை போன்ற வீடிருந்து என்ன பயன்? கண் நிறைந்த கணவன் வாய்த்தும் என்ன பயன்? எந்தக் குறையும் வைக்காத கடவுள் இந்தக் குறையை ஏன் வைத்தார்? அம்மான்னு அழைத்துத் தன் பிஞ்சுக் காலால் என் நெஞ்சில் உதைக்க ஒரு குழந்தை இல்லாதது ஏன்? ஜமுனாவின் மனசில் ஓடிய எத்தனையோ 'ஏன்'கள் மடைதிறந்த வெள்ளமாய் அவள் கண்களில் இருந்து நழுவிக் கழுத்தை நனைத்தது.

பூஜை அறையிலிருந்து விபூதி, குங்குமத்துடன் வந்த கதிரேசன் ஜமுனாவின் விம்மல் கேட்டு அதிர்ந்து போனார்.

"ஜமுனா உனக்கென்ன ஆச்சு?"

"இனியும் என்ன ஆகணுங்க? நமக்குக் கலியாணமாகி வருஷம் பத்தாச்சி. உங்கபேர் சொல்ல-ஏகப்பட்ட சொத்துக்களுக்கு வாரிசா ஒரு புள்ள இல்லியே. காண்றவ எல்லாம்

# பெண் மனம்



**ரூபராணி**

"இல்லியா? இல்லியா"ன்னு கேட்டுக் கேட்டு... என்னால தாங்க முடியலீங்க!" கதிரேசன் மார்பில் முகம் புதைத்து அழுதாள் ஜமுனா

"அடி அசடே இதுக்குப்போய் அழறியே. கொழந்த இல்லாட்டி என்ன? எனக்கு நீ கொழந்த உனக்கு நான் கொழந்த!" சொல்லிவிட்டுப் பெரிதாக வாய் பிளந்து சிரித்தார் கதிரேசன்.

ஜமுனா தன் கணவனின் கரங்களைத் தன் கைகளிலேந்தி முத்தமிட்டாள்.

"என்னங்க நா... ஒண்ணு சொன்னா கோபிக்க மாட்டீங்களே?"

"நீ எப்ப எது சொல்லி நான் கோபிச்சிருக்கேன்? சும்மா சொல்லும்மா!" கதிரேசன் குழைந்தார்.

"உங்களுக்கு நம்ம விஜயாவைத் தெரியுமில்ல?"

"ஆமா தெரியும். அதான் உன் பழைய நண்பி. அதுக்கென்ன இப்போ..."

"பாவங்க யாருமில்லாத அந்தப் பொண்ணு நல்லவ. ஆனா கால் கொஞ்சம் ஊனம். அவகாலைக் காட்டி யாருமே அவளக் கட்டிக்கல்ல. வயசும் வெசமாய் ஏறுது. அவ எனக்குக்கூடப்பிறந்த தங்கச்சி மாதிரி." ஜமுனா மெழுகாய் உருகினாள்.

"அதுக்கு நான் என்ன செய்யணும்?" கதிரேசன் குழந்தையைப் போல் கேட்டார்.

"நீங்க விஜயாவ ரெண்டாந்தாரமா கட்டிக்குங்க!"

"ஜமுனா!" வீடதிரக் கத்தினார் கதிரேசன். அவர் உடல் ஆடியது. "என்மீது உனக்கு உண்மையான பாசம் இருந்தா இப்படிச் சொல்லுவியா? என் உடலில் உணர்வுகளில் ஜமுனா, நதியாக ஓடி விளையாடுகிறாள். நான்மாட்டேன்." உறுதியாகச் சொல்லிய கதிரேசன் அவ்விடத்தை விட்டகன்றார்.

மாதங்கள் பல உருண்டன. ஜமுனாவின் மனநிலையில் எந்தமாறுதலுமில்லை. தன் கணவனுக்கு வாரிசு இல்லாமற்போவதை ஜமுனாவால் ஏற்க முடியவில்லை. சிலகாலமாக அவள் சிந்தித்து எடுத்த முடிவை அவளால் மாற்றவும் முடியவில்லை. கதிரேசன் ஜமுனாவின் விருப்பத்திற்கு இணங்கிப் போவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

தன்னிடமிருந்த பட்டையும் பொன்னையும் ஜமுனா விஜயாவுக்கு வாரி வழங்கினாள். அதிக ஆடம்பரமின்றிக் கலியாணத்தை நடத்தியும் வைத்தாள். "இப்படியும் ஒரு பெண்ணா?" என்று ஊரவர்கள் மூக்கின்மேல் விரலை வைத்தார்கள்.

கதிரேசன் கண்கலங்கிப் போனார். "என்னங்க சின்னக் குழந்தை மாதிரி நாவேறு அவவேறா? நாங்க ரெண்டு பேரும் ஒண்ணு தாங்க!"

"ஜமுனா இந்தக்கலியாணம் எல்லாம் உன்னாக்காகத்தான்" கதிரேசனின் குரல் நடுங்கியது.

"எனக்கது தெரியுங்க!" ஜமுனா 'இச்' என்று அவர் கன்னத்தில் இதழ் பதித்தாள்.

விஜயா பாசத்தை ஜமுனாமீது மழையாகப்பொழிந்தாள். காலங் கனிந்தபோது விஜயா தாய்மை அடைந்தாள். ஜமுனாவின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஒரு குழந்தை பிறக்குமுன் அவளே குழந்தையாக மாறிப் போனாள். தொட்டில் பொம்மை, விளையாட்டுச் சாமான்கள் என்று வீட்டை நிறைத்தாள்.

கதிரேசனின் மறு உருவமாக மகன் பிறந்தான். பத்தாண்டுகளுக்குப் பிறகு கேட்ட குவா குவா சத்தம் ஜமுனாவின் காதில் தேனாகப் பாய்ந்தது. அண்டை அயலுக்கெல்லாம் ஓடியோடிச் செய்தியை ஒலிபரப்பினாள். தொட்டிலிடு வைபவத்தை ஆடம்பரமாகச் செய்ய வேண்டுமென்று ஜமுனா விரும்பினாள். வீடு கலியாண வீடாக மாறியது. எல்லா வேலைகளையும் தன் தலையில் அள்ளிச் சுமந்தாள்.

பொழுது விடிந்தால் கொண்டாட்டம். தொட்டிலை அலங்கரிக்க மலர்களுடன் சென்ற ஜமுனாவின் செவியில் இடியாக விழுந்த உரையாடல் அவள் இதயம்வரை இறங்கியது.

"விஜயா, குழந்தையைத் தொட்டிலிட அந்நியர் வேண்டாம். உன் அக்கா ஜமுனாவே போதும்!"

"சீ அவ மலடி. ராசியில்லாதவ. நம்ம கொழந்தய அவ கையில குடுத்து எப்பிடிங்க போட வைக்கிறது?"

'தடால்' என்ற சத்தம் கதிரேசனை உலுக்கியது. அவர் வெளியே வந்து பார்த்த போது, ஜமுனா நிலத்தில் மல்லிகைச் சரமாய்ச் சுருண்டு கிடந்தாள்.

---

கலாசாலையில் மாணவ ஆசிரியராக பயிற்சி பெற்ற காலத்திலே ஒலிபர்- ரதி காதல் ஆரம்பமானது. அன்றில் இருந்து இணை பிரியாமல் சகல அமர்வுகளிலும் நேரம் தவறாமல் கலந்துகொண்டு வந்தனர். காதலர்களென்றால் இப்படித்தான் இருக்க வேண்டுமென மற்றவர்கள் கூறிக்கொள்ளுமளவுக்கு ஒழுக்கமுள்ள காதலர்களாக ஒலிபரும் ரதியும் நடந்து கொண்டனர். ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கற்கைநெறியை முடித்துவிட்டு ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக் கொண்ட மறுவாரமே பெரியோர் ஆசீர்வாதத்துடன் திருமணம் இனிதாக நடைபெற்றது.

கணக்கியல்துறையில் ஆர்வம் கொண்ட ஒலிபர் பட்டயக் கணக்காளர் பயிற்சிநெறியை வெளிவாரியாகக் கற்கத் தொடங்கினார். பயிற்சி முடிவில் வெளிக்கள செய்முறைகளுக்காக கொழும்புக்குச் சென்று பிரபல நிறுவனங்களில் பகுதிநேரமாக வேலை செய்து வந்தார். பட்டயக் கணக்காளரான ஒலிபரின் திறமையை அறிந்த பல நிறுவனங்கள் அவரது மூளைக்கு பணம் கொடுத்து வாங்க முற்பட்டன. சில நிறுவனங்களின் உரிமையாளர்கள் ஒலிபரை மருமகனாக எடுத்துக் கொண்டாலென்னவென சிந்திக்க முற்பட்டனர். இறுதியில் பல்லாயிரம் ரூபா சம்பளத்துக்காக தலைநகரில் உள்ள நிறுவனமொன்றில் பட்டயக் கணக்காளரானார் ஒலிபர்.

ஒலிபரின் கணக்கியல் திறமையை அறிந்துகொண்ட தனியார் கல்வி நிறுவனங்கள் பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்த அழைப்பு விடுத்தன. ஆசிரியராகப் பயிற்சி பெற்ற ஒலிபருக்கு பிரத்தியேக வகுப்புகள் நடாத்துவதென்பது கஷ்டமாகத் தெரியவில்லை. பல கல்வி நிறுவனங்களில் ஒப்பந்தங்களைச் செய்து பகுதிநேர அடிப்படையில் விரிவுரையாளரானார் ஒலிபர்.

சிவந்த மேனியும் திரண்ட உடல்வாகும் கொண்ட ஒலிபரின் தோற்றம் எந்தப் பெண்ணையும் திரும்பிப் பார்க்க வைக்கும்.

# இப்படியும் எத்தனையோ பேர்!



**வீரமுனை வானவர்கோன்**

பாடநெறி ஆரம்பமாவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னதாக ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிளில் விரிவுரை மண்டபத்துக்கு வரும் ஒலிபரின் எழிலைப் பருக பல இளம் உள்ளங்கள் காத்து நிற்கும் என்பது உண்மைதான். காதல் கடிதங்களை எழுதி புத்தக உறை இடுக்கில் மறைத்து வைத்திருந்த கன்னியர்களில் சிலரும் இருந்தனர். ஆனால் ஒலிபர் காதல் நோயில் விழுபவராகத் தெரியவில்லை. காரணம் அவர் ஏற்கனவே திருமணமானவராச்சே! இந்த விடயம் இளவட்டங்களுக்கு எங்கே புரியப்போகின்றது. மாதத்துக்கொரு தடவை ஊருக்குச் சென்று, அன்பு மனைவி ரதியுடன் களித்துவிட்டு கொழும்பு திரும்புவார் ஒலிபர். வீட்டுக்கு வந்து விடுமுறையை முடித்துவிட்டு திரும்பவும் வேலைக்குச் செல்வதென்பது நரகத்துக்குச் செல்வது போன்ற பிரமையாக இருக்கும். பிரிவென்பது எவ்வளவு கொடுமையானதென்று அப்போதுதான் தெரியும். சிலவேளை அழுது விடுவார் ஒலிபர்.

மாத இறுதி வாரத்தில் வீட்டுக்கு வரும் கணவனைக் காண வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாள் ரதி; வரவேயில்லை. வாரத்துக்கொரு தடவை வரும் கடிதத்தையும் காணவில்லை. தபாற்காரனிடம் கடிதம் வந்துள்ளதாவென பலமுறை கேட்டு ஏமாந்து விட்டாள் ரதி. போனவாரம் இப்பகுதி ரெலிகொம் கட்டடத்தில் குண்டு வெடித்ததால் வெளியிடங்களுக்கு தொடர்பு கொள்ள தொலைபேசி வசதிகளும் இல்லை. திக்குமுக்காடினாள் ரதி. கவலையும் பயமும் பற்றிக் கொண்டது. கொழும்பில் இருந்து தெரிந்தவர்கள் யாராவது வந்ததாக அறிந்தால் அவர்களிடம் சென்று 'ஒலிபரைக் கண்டீர்களா? ஏதும் சொன்னாரா?' எனக் கேட்பாள் ரதி ரீச்சர்.

ஒரு மாத காலமாக ஒலிபரின் தொடர்பு கிடைக்காததால் நாளை கொழும்புக்குச் சென்று அறிந்து வர ஆயத்தமானார் மாமா. "மாமா நானும் உங்களோட வருகிறேன!" என்றாள் ரதி. "வேணாம் புள்ள, நான் தனிய போயிற்று வாறன். றோட்டெல்லாம் ஆமிக்காரண்ட செக் பொயின்ட் இருக்கு. பொம்புளப் புள்ளைகளென்டா சந்தேகப்பட்டு புடிக்கிறானுகள். கொழும்பு கொம்பனித்தெருவில் நடந்த புதினம் தெரியும் தானே? அதுமட்டுமில்லாம இரவுல லொச்செல்லாம் ரவுண்டப் பண்ணிதட்டியெழுப்பி உடுத்த உடுப்போட வீடியோ எடுத்து ஆக்களையும் விசாரிக்க கொண்டு போறாங்க!" எனக் கூறவே, மனமின்றி, "சரி மாமா நீங்க போயிற்று வாங்க!" என்றாள்.

வாசலில் மணியோசையுடன் தபாற்காரன் நீட்டிய கடிதத்தை ஓடிச்சென்று வாங்கினாள் ரதி. மாமாவின் பெயருக்கு முகவரியிடப்பட்டிருந்தது. கடிதத்தைப் பிரித்துப் படிக்கும்போதே மாமாவின் கண்கள் அகல விரிந்தன, சந்தேகம் கொண்டவளாய் "என்ன மாமா?" என்றாள் ரதி. சென்ற மாதம் பஸ்ஸில வரும்போது வீதியோரத்து சோதனைச் சாவடியில் வைத்து ஒலிபரைச் சந்தேகமென இராணுவத்தினர் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். தேசிய அடையாள அட்டை, காரியாலய அட்டை, பொலிஸ் பதிவு போன்றவற்றைக் காட்டி நிரபராதியெனக் கூறியும் விசாரணைக்கென வைத்துள்ளனர். அதனை ரதியிடம் பக்குவமாக தெரிவிக்கும்படி ஒலிபர் எழுதியிருந்தார்.

ரதி சிலையானாள். கையில இருந்த கடிதம் காற்றில் பறந்தது. பிரமை பிடித்தவளாய் சகலரையும் வெறித்துப் பார்த்துவிட்டு வீட்டினுள் சென்று எதையோ எடுத்துக்கொண்டு பாண்டியனிடம் தீர்ப்புக்கோரிச் சென்ற கண்ணகியாய் வெளியேறினாள்.

அன்று சிலம்பு... இன்று...எதை எடுக்கப் போறாளோ?



படிப்பகம்

இன் பார்க்க
காதல் வரும்- ஆனால்
கண்ணுக்கு தெரியாமல்
காதல் வளரும்!

செந்தமிழின் சுவைபோல
காதல் இனிக்கும்!
செம்பூவின் மணம்போல
காதல் மணக்கும்!

பார்க்கின்ற இடமெல்லாம்
காதல் இருக்கும்!
பார்க்கின்ற பொருளெல்லாம்
காதல் மலர்த்தும்!

அசை போட்டு அசைபோட்டு
மனது சிலிர்க்க
கைவீசி கைவீசி
காதல் நடக்கும்!

தடைபோட்டு தடைபோட்டு
ஊரார் தடுக்க
கிளைவிட்டு கிளைவிட்டு
காதல் செழிக்கும்!

குறை சொல்லி குறை சொல்லி
ஊரும் எதிர்க்க,
வேர் விட்டு வேர்விட்டு
காதல் நிமிரும்!

காதலர் சந்திக்கும்போது
ஒரு யுகம்கூட
ஒரு நொடியாகிறது!

காதலர் சந்திக்காதிருக்கையில்
ஒரு நொடிகூட
ஒரு யுகமாகிவிடுகிறது!

முத்தம் இடும்போது
கிடைக்கும் இதம் பெரிதா?
இட்ட முத்தத்தை நினைக்கையில்
கிடைக்கும் இதம் பெரிதா?
பட்டி மன்றமே நடத்தலாம்.

பேசிக்கொண்டிருக்கையில்
பெறும் இன்பம் பெரிதா?
பேசியதை அசை போட்டு
பெறும் இன்பம் பெரிதா?
ஆராய்ச்சியே செய்யலாம்.

காத்திருப்பது சுகமா?
காக்க வைப்பது சுகமா?

தொடத் தொட சுகமா?
எப்போது தொடலாம்
என்ற தவிப்புடன்
தொடாதிருப்பது சுகமா?

அழகின் புதிர்களை
அறிவது சுகமா?

அறியும் தவிப்பில்
துடிப்பது சுகமா?

முடிவைத்த கனிகளை
சுவைப்பது சுகமா?



# நாணம் வேண்டும்

# இலக்கிய நயம்

நாளது வரும் வரை
பசியுடன் தவித்து
காத்திருப்பது சுகமா?

எதிர்பார்த்திருப்பதே
சுகம்!

காய்ந்தமாடு
கம்பில் விழுந்த கதையாக
காமம் தலைக்கேறி
அவசரமாய் ஆடிமுடிப்பது
அபசுரம்!

மோகம் முப்பதுநாள்
ஆசை அறுபதுநாள்
என்பாரும் அவர்களே!

முத்துக் குளிக்க தெரியாதவர்களுக்கு
மூச்சுத் திணறும்தான்!

பக்குவமாய் பாடம்
பயிலாதவனுக்கு
கலைகள் சலிக்கும்தான்!

ஒரே மூச்சில்
தேனை குடித்தால்
தேனும் திகட்டும்,
மலரும் வெறுக்கும்!

அறுசுவை விருந்தே
ஆனால் என்ன;
ஆற அமர உண்ணாவிட்டால்
அதன் சுவை விரயம்!

தண்ணீரில் கூட
சுவை இருக்கிறது!
பக்குவமாய் அருந்தினால்
நா அதை அறியும்!

வாழ்க்கை என்ற
கோப்பையில்
காதல் அமுதம்!

முடியில்
நரை விழுந்தால்கூட
அந்தக் கோப்பையில்
நுரை ததும்ப வேண்டும்!

ஆயுள் உள்ளவரை
அமுதம்
தீராது இருக்கவேண்டும்!

ஒரே மூச்சில்
குடித்து முடித்து விட்டால்,
சுவையும் இருக்காது,
நுரையும் ததும்பாது!

மருந்தாகவும், விருந்தாகவும்
இரு தொழில் புரிவது
காதல் மட்டுமே!

மருந்தும், விருந்தும்
அளவோடு இருந்தால்தான்
நோயும் தீரும்!
நலமும் சேரும்!

கண்டதும் காதல்
தொட்டதும் காமம்
என்று அலைந்தால்
இரண்டுக்கும் ஆயுள்
சொற்பம் மட்டுமே!

கூடி வாழ முன்னரே
கூடி முடித்துவிட்டால்,
எதிர்பார்ப்பு என்று
எதுவும் இருக்காது!

பள்ளியறைக்கு செல்லாமல்
பாடம் முடித்துவிட்டால்,
பள்ளியறை எதற்கு?
பாடம்தான் எதற்கு?

காதலும்-காமமும்
ஊடலும்-கூடலும்
தக்க செயல் எனினும்
பக்குவம் இல்லையெனில்
தகாத செயல் ஆகும்!

முறையோடு காதலித்து
முறையோடு காமமுற்று
நிறைவோடு அனுபவித்தால்
மெச்சத்தக்க செயல்
என்றாகிவிடும்!

உள்ளத்தில் தொடங்கி
உடலில் பரவி
உள்ளத்தில் வளரட்டும்
உண்மைக் காதல்!

உடலில் தொடங்கி
உள்ளத்தால் நழுவி
கள்ளத்தில் முடிவது
காதலல்ல!

தகாத செயல்
செய்யாதிருக்க வேண்டுமானால்
இருபாலாருக்கும்
தேவை நாணம்!

வேண்டாத செயல்களுக்கு
வெட்கித்தால்
வேண்டாத விபரீதத்தால்
மனம் துக்கிக்காது!

"கருமத்தால் நாணுதல் நாணுத்
–திருநுதல்
நல்லவர் நாணுப் பிற"

அதிகாரம்: 102, குறள்: 1011.

தருவது
ரசிகன்

★ போலிச் சாமியார்களை ஒழிக்கவே முடியாதா?

ஆ. தர்ஷிகா, யாழ்ப்பாணம்.

சாமியாரிடம் அவரது சீடர் ஒருவர் வந்து: "சாமி! யாரோ ஒருத்தன் கடவுள் மாதிரி வேஷம் போட்டுவந்து குழப்பம் பண்ணுகிறான்!" என்றார்.

சாமியார் கோபமாக வெளியே வந்தார். "ஏன் இப்படி கலாட்டா பண்ணுகிறாய்? போயிடு!" என்றார்.

ஆனால் கடவுள் போகவில்லை. வேறு வழியில்லாமல் ஒரு அறையிலே தள்ளிப் பூட்டினார்கள்.

கடவுளுக்கு தர்மசங்கடமாகப் போய் விட்டது. கண்ணை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தார்.

நடு இரவில் சாமியார் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார். கடவுளின் காலில் விழுந்தார்.

"கடவுளே! என்னை மன்னித்துக்கொள்! அப்போதே உங்களை யார் என்று அடையாளம் கண்டுகொண்டேன். நீங்கள்தான் உண்மையான கடவுள் என்று நான் சொல்லியிருந்தால் என் பிழைப்புக் கெட்டுப் போயிருக்கும்!" என்றார்.

கடவுள் அப்படியே சிலையாக நின்று விட்டார்.

★ மீனா, நக்மா இருவரில் நடிப்பில் முதலிடம் வகிப்பவர் யார்?

எஸ். ஜெயச்சந்திரா, ஹட்டன்.

நக்மாவை எங்கே நடிக்கவிட்டார்கள்? ஆகவே நடிப்பில் மீனா, துடிப்பில் நக்மா.

★ கௌதமி மீண்டும் கமலுடன் ஜோடி சேருவாரா?

எம்.என். அரபாத், கல்முனை.

ஜூன் ஏழாம் திகதி தனது காதலருடன் ஜோடி சேருகிறார். அதாங்க-கல்யாணமாம் கல்யாணம்!

★ யாழ் மேயர் கொலை பெண்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாமே? கொழும்பில் மகளிர் அமைப்புக்கள் கூறியுள்ளனவே?

எஸ். கே. கொழும்பு-05.

தற்போது யாழ்ப்பாணத்தில் படையினரைக் கேட்டால், பெண்கள்தான் தமக்கு அச்சுறுத்தல் என்கிறார்கள்! அதெல்லாம் இருக்க, யாழ் நகரில் படையினரால் அடித்தே கொல்லப்பட்ட பெண்ணுக்காக மேற்படி அரசசார்பு 'பெண்கள்' குரல் கொடுக்கிறார்களா பாருங்கள்?

★ ஐஸ்வர்யா ராய் 50 கிலோ தாஜ்மஹால் என்று கூறியுள்ளார் வைரமுத்து. கையில் தூக்கியா பார்த்திருப்பார்?

என்.வசுமதி, கொழும்பு-09.

'ஜீன்ஸ்' பாடல் கசட் வெளியீட்டு விழாவில் வைரமுத்துவிடம் ஐஸ்வர்யா ராய் கேட்டாராம்: "என்ன 50 கிலோ என்று எழுதிவிட்டீர்களே? என் எடை 53 கிலோ அல்லவோ?"

அதற்கு வைரமுத்து சொன்னாராம்:

"அப்படியானால் உடனே மூன்று கிலோ குறையுங்கள்; கவிஞன் வாக்கு பொய்யாகக் கூடாது!"

இதன்மூலம் அறியப்படும் உண்மை என்னவென்றால், ஐஸ்வர்யா 53கிலோ. அதுதான் தூக்கி விளையாடி இருக்கிறார் பாடல் காட்சிகளில் பிரசாந்த்.




## சிந்தியா பதில்கள்

★ சிந்தியா! ப்ரீதா விஜயகுமாருக்கு எத்தனை வயது?

செல்வி பத்மா தங்கராசா, மட்டக்களப்பு.

அவர் சொல்வது பதினைந்து!

★ சிந்தியா! அணுக்குண்டு தயாரிக்க ஆகும் செலவு அதிகமோ?

பி. நிவாஸ், திருமலை.

ஒரு குண்டுக்கு மட்டும் கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபா செலவாகும்! பரவாயில்லையா?!

★ வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு ஐ.தே.கட்சி கோரியுள்ளதே?

கி. ரவிச்சந்திரன், திருமலை.

தங்கள் ஆட்சிக்கால சாதனையின் தொடர்ச்சி என்றும் கூறிக்கொள்ளலாம்; மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்படாமல் இழுத்தடிக்கலாம் என்பது பச்சைக் கட்சியின் இச்சை! நீலக் கட்சிக்கும்-இழுத்தடிப்பு என்றால் கரும்புதான். ஆனால் பச்சைக் கட்சிக்குப் பெயர் கிடைத்து விடுமே என்றுதான் தயக்கம்!

★ கிரிக்கெட் உலகக் கிண்ணம்போல, உதைபந்தாட்ட உலகக் கிண்ணப்போட்டிகள் பரபரப்பாகப் பேசப்படவில்லையே?

சோ. தயானந்தன், சிலாபம்.

என்று யார் சொன்னது? ஒரு இலட்சத்து பத்தாயிரம் அனுமதிச் சீட்டுக்கள் விற்றுத் தீர்ந்துவிட்டன. இரண்டு கோடிப் பேர் அனுமதிச் சீட்டுக் கிடைக்காமல் ஏமாந்து போயினர். உலகெங்கும் இருந்து அனுமதிச் சீட்டு பதிவுக்காக ஃபிரான்ஸுக்கு ஃபோன் மேல் ஃபோன். தொலைபேசி இலாகா திணறி விட்டதாம்!

★ கடவுள் காப்பாற்றுவார் என்றால் மருத்துவர் எதற்கு?

சி. லலிதா, மட்டக்களப்பு.

பணம் வாங்குவதற்கு!

★ சிந்தியா! சங்கிலியன்படை உரிமை கோரி விட்டு மறுத்தது பற்றி என்ன நினைக்கிறீர்?

கா. பசுபதி, கொழும்பு-06.

யானைக்கும் அடி சறுக்கும்!

★ காதலுக்கு மரியாதை. காமத்திற்கு மரியாதை- என்ன வித்தியாசம்?

ஆர். முரளிதரன், பண்டாரவளை.

முன்னது நெஞ்சத்தில், பின்னது மஞ்சத்தில்!

★ கொறிப்பதற்கு ஒரு ஜோக் சொல்லுங்கள்?

எம். பஷீர், கல்முனை.

மன்னிக்கவும் கடிப்பதற்குத்தான் தர முடியும்:

"எலிக்கு ஏன் வால் இருக்கிறது?"

"தெரியவில்லை!"

"செத்தபின்னர் தூக்கிப்போடுவதற்கு!"

★ பிரிகேடியர் விஜயரத்னா மறைவின் பின்னர் வடமராட்சியில் தேடுதல்கள் தீவிரமாகியுள்ளதே?

கே. எட்வேர்ட், யாழ்ப்பாணம்.

அவர் தூண்டில் போட்டு மீன் பிடிக்க நினைத்தார். இப்போதுள்ள பொறுப்பதிகாரி டைனமைட் வைத்து மீன்பிடிக்க நினைக்கிறார். அணுகுமுறை வித்தியாசம். நோக்கம் ஒன்றுதான்!

★ முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் ஒன்றாகக் கலந்து கொண்டது பற்றி?

எஸ். கபூர், கொழும்பு-10.

முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் பச்சையும், நீலமும் கலந்துகொள்வது இதுதான் முதல் முறையுமல்ல; புதுமையுமல்ல! வளமான வாக்கு வங்கி இருப்பதால் இருதரப்பும் சென்று அமர்ந்திருக்கின்றன! மக்களின் வளமான எதிர்காலத்திற்காக மட்டும் ஒன்றுபடமாட்டார்கள்.

★ டெண்டுல்கர், சயீட் அன்வர் இருவரில் ஒருநாள் போட்டியில் உலக சாதனையான 17 சதத்தை முறியடிக்கப்போவது யார்?

ஆர். முனாஸ், புத்தளம்.

அநேகமாக டெண்டுல்கர்!

★ ஒருநாள் போட்டிகளில் இந்திய கிரிக்கெட் அணியின் விளாசல் எப்படி?

ஏ. ரவிசங்கர், கந்தப்பளை.

'வன் டே' போட்டிகள், 'வன் மேன்' போட்டிகளாகவே தெரிகின்றன. அந்த வன்மேன் டெண்டுல்கர். அணி முழுவதும் உற்சாகமாக ஆடுவது அரிதாகவே உள்ளது.



'தர்மா' படத்தில் விஜயகாந்த்—ப்ரீதா விஜயகுமார்

## ஸ்போர்ட்ஸ்

# வேகப்பந்து வீச்சாளர் காயம்



அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் கிளென் மெக்கிராத் காயம் காரணமாக கிரிக்கெட் போட்டிகளில் விளையாடாமல் இருந்தார். 2 மாதங்களுக்கு முன்பு அவருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப் பட்டது.

இதன்பின் குணமடைந்து வந்த அவருக்கு, வயிற்றில் ஏற்பட்ட காயமும் சரியாகி விட்டது. கடந்த ஒரு மாதகாலமாக மெக்கிராத் தீவிர உடற்பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். "இன்னும் சில வாரங்களில் மீண்டும் பந்து வீச வந்துவிடுவேன்" என்று மெக்கிராத் தெரிவித்துள்ளார்.

காயம் காரணமாக இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்த அவுஸ்திரேலிய அணியில் மெக்கிராத் இடம் பெறவில்லை. அத்துடன் ஷார்ஜாவில் நடந்த ஒருநாள் போட்டிகளிலும் இவரால் பங்குகொள்ள முடியவில்லை.

# இங்கிலாந்து பயணம்

இலங்கையுடன் டெஸ்ட்போட்டிகளில் நியூஸிலாந்து அணி விளையாடி வருகிறது. இது முடிவடைந்ததும் இலங்கை, இந்தியா, நியூஸிலாந்து அணிகள் பங்குகொள்ளும் இலங்கையின் சுதந்திர பொன்விழா கிண்ணப் போட்டிகள் ஜூன் முதல் ஜூலை வரை நடைபெறும்.

இதை முடித்துக் கொண்டு ஓகஸ்ட் மாதம் இலங்கை அணி இங்கிலாந்திற்குச் செல்லவுள்ளது. இங்கிலாந்தில் தற்போது தென்னாபிரிக்கா அணி இங்கிலாந்து அணியுடன் டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது.

இங்கிலாந்து தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான போட்டிகள் ஓகஸ்ட் மாதம் முடிவடைய, இலங்கை அணி இங்கிலாந்து செல்கிறது. அங்கு இலங்கை, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் பங்குபற்றும் முத்தரப்பு போட்டிகள் நடைபெறவுள்ளன.

# லாராவுக்கு அபராதம்

மேற்கிந்தியத்தீவு அணியின் காப்டன் பிரைன் லாராவுக்கு 2000 டவுண் (ஏறக்குறைய 2 இலட்சத்து 8 ஆயிரம் ரூபா) அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று இலண்டனிலுள்ள டவுண்டன் மைதானத்தில் வார்விக்ஷயர் லீக் போட்டியில் மேற்கிந்திய அணி சோமர்செட் அணியை எதிர்த்து ஆட வேண்டியிருந்தது.



கரிபியன் பிரதேசத்துக்கு லாரா தனது சொந்த அலுவல்களுக்காகச் சென்றவர் மிகவும் தாமதமாகவே மைதானத்துக்கு வந்து சேர்ந்தமையினால் தனது அணிக்குத் தலைமை ஏற்க முடியாமற் போய்விட்டது.

அபராதம் விதித்துள்ள ஒழுங்கு முறைச் சபையினர், லாரா தாமதமாக வந்தமைக்கான சூழ்நிலை பற்றிக் கருத்தில் கொள்ளவிருப்பதாகவும் தெரிகிறது.

# இந்திய அணி ஆர்வம்

7வது உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டி அடுத்த வருடம் மே மாதம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான சிறந்த அணியை உருவாக்கும் முயற்சியில் இந்திய அணி இறங்கியுள்ளது.



இதன் முதற் கட்டமாக அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் கேப்டன் பொப் சிம்ஸனை இந்திய அணியின் பயிற்சியாளராக ஒப்பந்தம் செய்துள்ளது.

"கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பே இதற்கான ஒப்பந்தத்தில் பொப் சிம்ஸ்சன் கையெழுத்திட்டார். வருகின்ற ஓகஸ்ட் மாதம் 20ம் திகதி முதல் இவர் இந்திய கிரிக்கெட் அணிக்கு பயிற்சியாளராகப் பொறுப்பேற்கிறார்!" என்று இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் வை.என் லீலே தெரிவித்துள்ளார்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 12

மிதியான் நாட்டின் எல்லையில் மோசே சந்தித்த ஏழு பெண்களில் மூத்தவள் மோசேயிடம் நெருங்கி வந்தாள். முரட்டு இடையர்களின் அடாவடித்தனத்திலிருந்து தங்களைக் காப்பாற்றியமைக்காக மீண்டும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள். தாங்கள் ஏழுபேரும் மிதியான் நாட்டு அர்ச்சகரான இரகுவேல் என்பவருடைய புதல்விகள் என்றாள். தனது பெயர் சிப்போரா என்று கூறியதுடன் தனது சகோதரிகளையும் அறிமுகப்படுத்திய பின் மந்தைகளை மேய்த்துக்கொண்டு தங்களுடைய கூடாரங்களுக்குத் திரும்பினர்.

வழமைக்கு மாறாகத் தமது புதல்விகள் அன்று விரைவாகத் திரும்பி வந்துவிட்டதைக் கண்ட இரகுவேல், அதற்கான காரணத்தை வினவினார், நடந்த சம்பவத்தை சகோதரிகள் தந்தையாரிடம் விவரித்தனர். இடையர்கள் அடிக்கடி கிணற்றடிக்கு வந்து தொந்தரவு கொடுப்பதனாலேயே தங்களுக்கு வேளைக்கு இருப்பிடம் வந்து சேரமுடியாதிருப்பதையும் கூறினர். எகிப்து நாட்டைச் சேர்ந்த ஒரு வழிப்போக்கர் இன்று செய்த உதவியையும் அவருடைய தாக்குதலுக்கு முரட்டு இடையர்கள் பயந்து பின்வாங்கியதைக் கூறியதும், இரகுவேல், அத்தகைய மனிதரை ஏன் அழைத்து வந்து உணவு கொடுத்து உபசரிக்கவில்லை என்று மக்களைக் கடிந்து கொண்டார். உடனே போய் அவரை அழைத்து வருமாறு பணித்தார்.

மோசேயை இரகுவேல் அன்போடு வரவேற்று உணவளித்து உபசரித்தார். மோசே தனது வரலாற்றை எடுத்துரைத்தார். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்ட இரகுவேல் மோசேயை தங்களுடனேயே தங்கிவிடுமாறு கேட்டுக்கொண்டார்.

இத்தகையதோரிடம்- அப்போதிருந்த தன் நிலைக்குத் தங்குவதற்கு ஏற்றதே என்றுணர்ந்த மோசேயும் ஒப்புக்கொண்டார். தனது மூத்த மகளான சிப்போராவை மோசேக்கு மணம் முடித்துக் கொடுத்தார்.

மோசேக்கும் சிப்போராவுக்கும் பிறந்த மகனுக்கு கேர்சோம் என்று பெயரிட்டனர். மோசே சில வருடங்கள் மிதியான் நாட்டில் மந்தைகளை மேய்த்து வந்தார். அப்பிரதேசம் பெரும்பாலும் பாலை நிலமாகும். பசும்புல் பூண்டுகள் போதுமான அளவு இல்லாமையினால் மந்தைகளுக்கான உணவு தேடி வெகு தூரம்வரை செல்லவேண்டியிருந்தது.

### ஒளியும் ஒலியும்

அப்பாலைநிலத்தின் மேற்குப் புறமாக மோசே தனது மந்தைகளை மேய்த்துக் கொண்டு சென்றார். அப்பகுதியில் மோசே பிரவேசித்ததும் அவருக்கு விவரிக்க முடியாத ஓர் உணர்வு ஏற்பட்டது. அவரெதிரே சற்றுத் தொலைவில் ஒரு புதர் சோதிப்பிளம்பாகக் காட்சி தந்தது. மோசே அப்பேரொளியை ஊடுருவிப் பார்த்தார். கண்கள் கூசின. ஆனால் வெப்பம் தென்படவில்லை. பதிலாக சுகானந்தமயமான காற்று அவரை வருடியது போன்ற உணர்வினைப் பெற்றார். அந்த ஒளி உமிழ்ந்த புதரை நெருங்கிச் சென்றார். அப்போது "மோசே...! மோசே...!" என இரு தடவைகள் அவரை யாரோ அழைப்பதை உணர்ந்தார்.

"ஆமாம்... மோசேதான் இங்கு நிற்கிறேன்!" என்றார். அவர் என்றும் கேட்டிராத-வர்ணிக்க முடியாத ஆனந்தக் களிப்பூட்டும் அக்குரல் மீண்டும் ஒலித்தது.

"மோசே! நீ நிற்கும் இடம் புனித பூமி. பாதணிகளுடன் இங்கு முன்னேறி வராதே...! அவற்றைக் கழற்றிவிட்டு வா!"

"தாங்கள் யார் என்று தெரிந்து கொள்ள முடியவில்லையே!"

"மோசே! நான் உனது மூதாதையர்களான ஆபிரகாம், ஈசாக் மற்றும் யாக்கோபு ஆகியோருக்கு வழிகாட்டிய கடவுள்! இஸ்ரயேலரையும் அவருடைய வழி மரபினரையும் எகிப்துக்கு அனுப்பி வைத்த ஆண்டவர் யானே! இன்று அந்நாட்டில் என் மக்கள் படும் துன்பங்கள் அனைத்தையும் யான் நன்கு அறிவேன். என் மக்களை- அவர்கள் படும் துன்பங்களிலிருந்து மீட்டு, அவர்களுடைய வருங்காலம் செழிக்கவும் அவர்களுடைய சந்ததியினர் பல்கிப்பெருகவும் வழிகாட்டியாக வேண்டிய காலம் வந்துவிட்டது. அதனால்தான் உம்மை இங்கு அழைத்திருக்கிறேன்! நீரே அவர்களை வழிநடத்தவேண்டும்!"

"ஆண்டவரே! நானா..? நான் ஒரு அபாக்கியவான்; எகிப்து மக்களால் துன்புறுத்தப்படும் இலட்சக்கணக்கான இஸ்ரயேல் மக்களை என்னால் எவ்வாறு வழி நடத்த முடியும்?"

"மோசே! எனது மக்கள் படும் துன்ப துயரங்களை நீக்கி அவர்களை அடிமைத் தளையிலிருந்து மீட்பதற்காகவே உன்னைத் தேர்ந்தெடுத்துள்ளேன். எகிப்துக்குப்போய் பார்வோனிடம் இஸ்ரயேலர்களின் அடிமைத் தளையினை அகற்றிவிட்டு அவர்களை அனுப்பிவைக்குமாறுகேள்!"

இத்தகைய பணிப்பினை ஆண்டவர் தனக்கு விதித்தமையினால் மோசே பெரும் வியப்படைந்தார். இத்தகையதொரு மாபெரும் பணியினை மேற்கொள்ள தனக்கு அருகதை இருக்கிறதா, என்ற ஐயம் அவரை ஆட்கொண்டது. ஆண்டவரிடம் மோசே,

"எல்லாம் வல்ல இறைவா! எமது மக்களான இஸ்ரயேலர்கள் என்னை அவர்களது வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்களே! தங்களுடைய கட்டளைப்படிதான் அவர்களை வழிநடத்தப் போகிறேன் என்று அவர்களை எவ்வாறு நம்ப வைப்பேன்?" என்று கேட்டார்.

ஆண்டவரிடமிருந்து இவ்வாறு பதில் வந்தது:

### புதரில் தோன்றிய பேரொளி



ஆண்டவரை வணங்கினார். ஆண்டவர் மோசே வைத்திருந்த நீளமான தடியை மாபெரும் சக்தி வாய்ந்த கருவியாக ஆக்கினார். அந்தக் கோலினை, இலட்சக்கணக்கான இஸ்ரயேலர்களை மோசேயின் கட்டளைகளுக்குப் பணிந்து நடக்கும் தன்மை உடையதாக்கினார்.

"மோசே! உன்னுடைய கையிலிருப்பது- அது வெறும் கோலல்ல; இதனுடைய சக்தியை நீயே பரிசோதித்துப்பார்! அக் கோலினை நிலத்தில்போடு!" என்றார் ஆண்டவர். தரையில் விழுந்த அந்தக் கோலானது ஒரு பெரிய பாம்பாக மாறியதைக் கண்ட மோசே உண்மையில் பயந்து போனார்.

ஆண்டவர் மீண்டும், "பயப்படாதே மோசே! அந்தப்பாம்பின் வாலில் பிடித்துத் தூக்கிப்பார்!" என்றார். முதலில் தயங்கிய மோசே, ஆண்டவரே தன் அருகிலிருந்து ஆணையிடும்போது, தனக்கேன் அச்சம் வரவேண்டும், என்று துணிவு பெற்றார். தன் வலது கையினால் பாம்பின் வாலைத் தொட்டுத் தூக்கினார். அவருடைய கை பட்டதுமே பாம்பு முன்போல் கோலாக மாறியது.

இதேபோன்று ஆண்டவர் பல அற்புதங்களை மோசேக்குக் காட்டி அருளினார்.

"மோசே! முதலில் எகிப்து சென்று அந்நாட்டினரின் கொடுமைகளுக்குள் சிக்கித் தவிக்கும் என் மக்களை ஒன்று சேரும். அவர்களில் பிரதானமானவர்களிடம், எபிரேயரின் ஆண்டவராகிய என்னைப் பார்த்ததாகச் சொல்லி, அவர்கள் மூலம் ஏனைய மக்களிடம் உண்மைகளை விளக்கச் செய்யும். கானானியர், இத்தியர், எமோரியர், பெரிசியர் இவ்வியர் மற்றும் எபூசியர் ஆகியோர்- எல்லா வளங்களுடனும் சிறப்பாக வாழும் கானான் நாட்டுக்கு, அவர்களை அழைத்துச் செல்லுமாறு அவர்களுடைய ஆண்டவரே ஆணையிட்டுள்ளதாகச் சொல்ல வேண்டும். இப்பணியில் உனக்கு உறுதுணையாக இருப்பதற்கு உனது சகோதரன் ஆரோன் உன்னைத் தேடிவரச் செய்கிறேன். முதலில் எபிரேயரை இணங்கவைத்துவிட்டு எகிப்தின் பார்வோனிடம் செல்லுங்கள். இஸ்ரயேலரை விடுதலை செய்ய அவன் இலகுவில் இணங்க மாட்டான். உங்கள் இருவர் மூலமும் நான் செய்யும் என்னுடைய அருஞ் செயல்களினால் இறுதியில் பார்வோன் எபிரேயரை விடுவிப்பான். உடனே புறப்பட்டு எகிப்து செல்வீர்களாக!" இவ்வாறு ஆண்டவர் கூறி மோசேயை அனுப்பி வைத்தார்.

இதற்கிடையில் மோசேயின் சகோதரனான ஆரோனிடம் ஆண்டவர் அசரீரியாக, "ஆரோன்! உனது சகோதரனான மோசே, மிதியான் நாட்டிலிருந்து எகிப்துக்கு வந்து கொண்டிருக்கிறார். உடனே புறப்பட்டுச் சென்று அவரைக் காண்பாயாக. பார்வோனிடம் போய் எனது மக்களான இஸ்ரயேலரை அடிமைத் தளையிலிருந்து மீட்கும் பொறுப்பினை மோசேயிடம் ஒப்படைத்திருக்கிறேன். அவருடன் நீயும் இணைந்து இந்த அரும் பணியினைச் செய்வீர்கள்!" என்றருளினார்.

ஆண்டவரின் அசரீரியைக் கேட்ட ஆரோன் அதிர்ச்சியும் மகிழ்ச்சியுமடைந்தார். தனது உடன் பிறப்பைக் காண்பதற்கு ஆண்டவர் அருளியதை எண்ணி மகிழ்ந்தார். தாமதியாமல் தனது பயணத்தைத் தொடங்கினார். ஆண்டவரால் குறிப்பிட்ட மலையில் சகோதரர்கள் இருவரும் சந்தித்தனர். அளவிலா ஆனந்தமடைந்தனர்; ஆரத்தழுவிக் கொண்டனர்.

### இராஜகுமாரன்



### ஆண்டவரின் ஆணை

"மோசே! ஆண்டவராகிய யான் என்றும் உன்னுடனேயே இருப்பேன். உன்னுடைய வார்த்தைகளிலும் நடவடிக்கைகளிலும் யான் உறைந்து நின்று வழிகாட்டுவேன். அச்சம் எதுவுமின்றி உடனடியாக எகிப்தில் பார்வோனிடம் செல்வாயாக!"

இவ்வாறு ஆண்டவர் கூறியதும் மேசேயிடமிருந்த ஐயப்பாடுகள் நீங்கின. அவர் ஒரு புதிய பிறவி எடுத்தவரைப்போலானார். புதிய உத்வேகத்துடன் தரையில் விழுந்து

(தொடர்ந்து வரும்)

**திருமறை 10 விடை: இஸ்ரயேலர், எபிரேயர்.**

**பரிசு பெறுவோர்:**

1. செல்வி. பா. பவதாரணி, இல. 45எஃப், தினச்சந்தை,நுவரெலியா.
2. செல்வி ஸூஃபயா ஹஸன், 184, பிரதான வீதி, மாத்தறை.
3. செல்வி சுப்பையா கவிதா சுமுதினி, சென் மார்கிறட், உடப்புஸ்ஸல்லாவ.
4. வாழையூர் எம்.ஏ.எம். அலிஹான், சலாமியா வீதி, வாழைச்சேனை.
5. ஆ.புஸ்பநாதன், 19/14, புவிலிங்கம் இடம்,மருதானை வீதி,பொரளை,கொழும்பு-08.

**திருமறை 12 வினா:- மோசேயின் சகோதரன் பெயர் என்ன?**

ஜூன 13க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 12—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## பதவியும் பாதுகாப்பும்



'என் உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு' என்று கூறுவதன் அர்த்தம் போராளிகளுக்கு சவால்விடுவதல்ல என்பதை தெரிவித்துக்கொண்டு, பூரண இராணுவப் பாதுகாப்பை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். நான் முட்டாளாக இருக்கத் தயாரில்லை என்பதற்காக, எனக்கு முன்னால் இருந்தவர் முட்டாள் என்று நான் கூறுவதாக நினைக்கக்கூடாது.

புதிதாக பதவி ஏற்பது போராளிக்கு எதிராக அல்ல. அவர்களது கையில் ஆயுதம் உள்ளவரை பகிரங்கமாக எதிராகச் செயற்படுமளவுக்கு ஞானம் இல்லாதவர்களல்ல நாங்கள் என்பதை போராளிகள் நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

மீண்டும் கூறுகிறேன, இராணுவப் பாதுகாப்பு நான் பெறுவது,'இனி என்ன பண்ண முடியும் உங்களால்?' என்று போராளிகளுக்கு சவால் விடுவதற்கல்ல, ஒரு பாதுகாப்புக்காக மட்டுமே!

## யாராக இருந்தாலும்



சுட்டது யாராக இருந்தாலும், இவர் செத்தது உண்மை. சுட்டவர்கள் யார் என்று எமக்குத் தெரியாது. இவர் செத்தது உண்மை என்று- தெரியும். எனவே சாவு எந்த வடிவத்தில் வந்தாலும் அதனை நாம் கண்டிப்பதோடு, போராளிகளோடு பேச்சு நடத்தி தீர்வு காணுமாறும் அரசை கோருகிறோம்.

ஏன் சுட்டார்கள் என்று தெரியவில்லை, துப்பாக்கி இருந்ததால் சுட்டார்களா? அல்லது ரவைகள் இருந்ததால் சுட்டார்களா? யாரையும் குற்றம் சொல்ல நாம் விரும்பவில்லை.

தேர்தல் நடத்தப்படாவிட்டால் நாங்கள் போட்டியிட மாட்டோம், தேர்தல் நடந்தால் மட்டுமே போட்டியிடுவோம் என்று நாம் தேர்தலுக்கு கடும் பெரும் கொடும் எதிர்ப்பு தெரிவித்தும்கூட தேர்தலை நடத்தியதால் நாங்கள் போட்டியிட்டோம், எனவே அரசு தேர்தலை நடத்தியிருக்காவிட்டால் நாங்கள் போட்டியிட நேர்ந்திருக்காது, எனவே அரசுதான் எல்லாவற்றுக்கும் காரணம்

## பிரார்த்தனை

ஊரும், நம் இனமும்
மொழியும், உணர்வுமிவை
எக்கேடு கெட்டாலும்
எந்நாளும்
எப்பாடு பட்டேனும்
சப்போட்டு நாம் தருவோம்
கோல்ஞ் செய்
நாட்டையாளும் மாதாவே
நீ எமக்கும்
மாகாணசபைத் தேர்தல்
ஒன்று தா!

-நல் அருளை நாடும் தமிழ்க் கட்சிகள்

## பயோடேட்டா 1



| | |
|---|---|
| பெயர் | : ஜயசிக்குறுய். |
| தொழில் | : சண்டை பிடிப்பது. |
| உபதொழில் | : காலவரையறை விதிப்பது |
| சாதனை | : ஒரு வருடத்தை கடந்தும் நீடிப்பது. |
| சோதனை | : அடிக்கடி நடக்கும் ஊடறுப்பு. |
| வேதனை | : இழந்தவை அனைத்தும். |
| நண்பர்கள் | : படைகள். |
| எதிரிகள் | : புலிகள். |
| விரும்புவது | : அரச தொடர்பு சாதனச் செய்திகளை. |
| விரும்பாத்து | : சுதந்திர ஊடகங்களை. |
| நம்புவது | : விமானங்கள், டாங்கிகள், ஆட்டிலெறிகள். |
| நம்பாதது | : காடுகளை. |
| இலட்சியம் | : தாண்டி முடிப்பது. |
| சமீபத்திய எரிச்சல் | : பிறந்தநாள் கொண்டாட யாரும் முன்வராதது. |

## பயோடேட்டா 2

| | |
|---|---|
| பெயர் | : வடக்கு-கிழக்கு மாகாணசபை. |
| பெற்றோர் | : ராஜீவ் காந்தி, ஜே. ஆர். ஜெயவர்த்தனே. |
| தொழில் | : அரைகுறை அதிகார பரிபாலனம். |
| சாதனை | : ஈழப்பிரகடனம். |
| வேதனை | : ஆளும் கட்சி ஓட்டம் பிடித்தது! |
| நண்பர்கள் | : தேர்தல் கோரும் தமிழ்க் கட்சிகள். |
| எதிரிகள் | : குறைப்பட்ச தீர்வை விரும்பாத அனைவரும். |
| சமீபத்திய சாதனை | : அதிகாரிகளின் சம்பாத்தியம். |

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230


3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


# சிறப்பு

↘ இஸ்லாமியர்கள் ஒவ்வொரு நாளும் ஐந்து வேளைகள் தொழ வேண்டும். இத்தொழுகைக்கான அழைப்புகள் மசூதிகளிலிருந்து விடுக்கப்படும். இப்போதெல்லாம் ஒலிபரப்பிகள் மூலம் தொழுகைக்கான அழைப்பு விடுக்கப்படுகிறது. ஆனால் மிகப் பழங்காலத்திலிருந்து பள்ளிவாசல்கள்- மசூதிகளிலிருக்கும் மிக உயரமான தூபிகளிலிருந்தே மிகப் பலமான ஒலியெழுப்பி அழைப்புக்கள் விடுக்கப்படும்.

அழைப்பு விடுக்க வசதியாக இஸ்லாமிக் கட்டடக் கலையின் சிறப்புகளுடன் அமைந்த இந்த ஸ்தூபிகளின் உட்புறத்தில் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருக்கும். மேல்புறத்தில் அழைப்புக்குரல் கொடுப்பவர் நின்ற வண்ணம் குரல் கொடுப்பார்.

மத்திய கிழக்கு நாடுகள், இந்தியா, வட ஆபிரிக்க நாடுகள் ஆகிய இடங்களில் இத்தகைய தூபிகளைப் பெரும்பாலும் காணலாம். டமஸ்கஸ், சிரியா ஆகிய நாடுகளில் கிறிஸ்துவுக்குப் பின் 707ம் ஆண்டளவில் இத்தகைய தூபிகள் எழுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது.






ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


↓ நிலத்தில் மட்டுமல்ல, நீரிலும் நடக்கலாம். இதோ நடக்கிறார் பாருங்கள்.

பனி படர்ந்த மலைச் சரிவுகளில் சறுக்கி விளையாடப் பயன்படுத்தப்படும் பாதக் கட்டைகளைப் பயன்படுத்தி அத்லாந்திக் பெருங்கடலில் 5 ஆயிரத்தி 636 கிலோ மீட்டர்வரை நடந்து உலக சாதனை புரிந்திருக்கிறார். ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் பெயர்: ரெமி பிரிக்கா என்பவர். 1988ம் ஆண்டில் இச்சாதனையைப் புரிந்தார்.

# நீரில் நடக்கலாம்



# சுவடி

↘ பனை ஓலைகளில் எழுதிவைக்கும் பழக்கம் மிகப் புராதன காலத்திலிருந்து இந்தியாவிலும் இலங்கையிலும் ஏனைய சில நாடுகளிலும் பரவியிருந்தது. பண்டைய இந்து வேதங்கள் ஓலைகளில்தான் எழுதப்பட்டன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளானாலும் இவை அழிந்து போவதில்லை.

பலநூற்றாண்டுகளுக்கு முன்னர் பௌத்த தர்மம் பற்றி சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட ஓலையின் வடிவமே படத்தில் காணப்படுவது. அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட வர்ணங்களும் மங்கிப்போகாமல் காட்சி தருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

தமிழ் நாட்டில் பண்டைய ஏட்டுச் சுவடிகள் தஞ்சாவூரில் உள்ள சரஸ்வதி மகாலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

தஞ்சை மாநிலத்தை ஆண்ட சரபோஜி மன்னனால் சரஸ்வதி மகால் உருவாக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் எரிக்கப்பட்ட பொது நூலகத்தின் ஒரு பிரிவில் ஆயிரக்கணக்கான ஏட்டுச் சுவடிகள் பத்திரமாகச் சேகரிக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. அவை தீக்கிரையாக்கப்பட்டுவிட்டன.

இவற்றுக்குப் பொறுப்பாக ஒரு கத்தோலிக்கக் குருவான எம்.எஸ். டேவிட் அடிகளார் பணிபுரிந்தார். சுவடிகள் எரிந்துப் போன துயரம் தாங்காமல் ஏக்கத்திலேயே இறந்து போனார்.



# மரவாசம்



↑ விசித்திரமானதாக தோன்றும் இப்பிராணி கஸ்கஸ் என்று அழைக்கப்படுகிறது. இதுவும் கங்காருவைப் போல் தனது குட்டிகளை வைத்துக் காப்பாற்றுவதற்கு வயிற்றில் ஒரு பையைக் கொண்டது. அவுஸ்திரேலியா, நியூகினி மற்றும் அயலிலுள்ள சொலமன் தீவுகளில் இவை காணப்படுகின்றன.

ஏறத்தாழ 60 சென்டிமீட்டர் நீளம் வரை வளரும். இதே அளவிலான வாலையும் கொண்டிருக்கும். வாலின் உடம்போடு ஒட்டிய பகுதி ரோமம் கொண்டதாக இருந்தபோதிலும் நுனியில் செல்கள் காணப்படும்.

குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் கஸ்கஸ் பெரும்பாலும் மரங்களில்தான் சீவிக்கும். இவை பழங்களையும் தளிர் இலைகளையுமே உண்ணும். சுத்த சைவம்.

இவற்றின் நடமாட்டம் பகலில் வேகம் குறைந்து காணப்பட்டாலும் இரவு நேரங்களில் மிகச் சுறுசுறுப்பாக இயங்கும். கண்கள் மிகப் பெரியவை. ஆனால் காதுகள் மிகச் சிறியவையாக இருக்கும். □

# பயணங்கள் முடிவதில்லை



↑ பென்ஸ்காரில் செல்வதுதான் தற்காலத்தில் ஒரு பவிசு. அக்காலத்தில் கார்களே கிடையாது. குதிரை வண்டிகள்தான் போக்குவரத்து சாதனம்.

கார்கள்போல குதிரை வண்டிகளிலும் பல திணுசுகள். பணபலம், அதிகாரபலம் என்பவற்றுக்கு தோதான ஆடம்பரமான குதிரை வண்டிகளும் இருந்தன.

4 முதல் 12 குதிரைகள் இழுத்துச் செல்லும். 12 குதிரைகள் இழுத்துச் சென்றால் நிச்சயம் அதில் செல்பவர் ஒரு வி.ஐ.பிதான். 1853ல் அவுஸ்திரேலியாவில் காணப்பட்ட குதிரை வண்டிதான் இது. தற்கால பஸ்சேவை மாதிரி குதிரை வண்டிச் சேவையை நடத்த தனியான நிறுவனங்களும் அக்காலத்தில் இருந்தன.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து



அர்கவின்
28.03.1998

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த அருந்தவச் செல்வன் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த சுகுணா தம்பதியினரின் செல்வப் புதல்வன் *அர்கவின்* தனது முதலாவது பிறந்த தினத்தை 28.03.1998 அன்று SWITZERLAND LUZERN நகரில் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாக கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா இலங்கையிலிருக்கும் அம்மம்மா, அப்பப்பா, தாத்தா, அப்பம்மா, சித்திமார், சுபர்ணா, சுகர்ணா, குமரன் சித்தப்பா, திவ்யா அக்கா, நிவேதனண்ணா, தங்கச்சி நித்தியா, கிருத்திகா சித்தி, மாயா மாமா, சுவிஸில் இருக்கும் பாபு சித்தப்பா, ஸ்ரீதரன் சித்தப்பா, சுமனா சித்தி, அரிச்சந்திரன் சித்தப்பா, ஸ்ரீமாவதி சித்தி, அபிலா அக்கா, யோகராஜா மாமா, செல்வராஜா மாமா, நாதன் மாமா, விஜய்மாமா, சாந்தி அத்தை, விஷாந் அத்தான், சுகன் அண்ணா. ஜேர்மனியில் இருக்கும் தாத்தா, குணதாஷ் மாமா, லலிதா அத்தை, செந்தூரி மச்சாள், வாணி அத்தை, மகிந்தன் மாமா, சுரேஷ் மாமா. இலண்டனில் உள்ள மோகன் சித்தப்பா, பெல்ஜியத்தில் உள்ள சுதா மாமா, சுவிடனில் இருக்கும் செல்வன் சித்தப்பா, மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் ஐங்கரன் அருளால் சீரும் சிறப்புடனும் நீடூழி வாழ்க வாழ்க என செல்வன் அர்கவினை வாழ்த்துகின்றார்கள்

தகவல்:- அருண்,-சுவிற்ஸர்லாந்து





# நாலு கிண்ணம்

↑ எதிர்வரும் ஜூன் மாதம் 10ம் திகதி உலகக் கிண்ண உதைபந்து திருவிழா கோலாகலமாக ஆரம்பமாகிறது. ஃபிரான்ஸ் நாட்டின் முக்கிய நகரங்களில் பல்லாயிரம் இரசிகர்கள் முன்பாக போட்டிகள் நடக்கவுள்ளன. அனுமதிச் சீட்டுக்கள் எப்போதோ விற்றுத்தீர்ந்துவிட்டன.

நான்கு வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டிகளில் நான்கு தடவை வென்று சாதனை படைத்த அணி பிரேஸில் நாட்டு அணி. 1958,1962,1970,1994 ஆகிய ஆண்டுகளில் பிரேஸில் வென்றது.

பிரேஸில் நாட்டின் தேசிய விளையாட்டே உதைபந்துதான். இம்முறை கூட பிரேஸில் அணிக்கே கிண்ணத்தை கொய்யும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

உலகில் அதிக பார்வையாளர்கள் கண்டுகளித்த உதைபந்தாட்ட போட்டி 1950ல் உலக கிண்ணத்துக்காக பிரேஸில் அணியும், உருகுவே அணியும் மோதிய போட்டியாகும். பிரேஸிலின் முன்னாள் தலைநகரான ரியோ டி ஜெனிரோவில் உள்ள மரக்கானா முனிசிப்பல் அரங்கில் நடந்தது. அன்று குழுமியிருந்த இரசிகர்களின் எண்ணிக்கை: 1 இலட்சத்து 99 ஆயிரத்தி 854பேர்.

1994ல் வெற்றிக் கிண்ணத்தை முத்தமிடும் பிரேஸில் வீரரைப் பார்த்தீர்களா? இம்முறையும் முத்தமிட அணி தயாராகிவிட்டது.



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை ... இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெள்ளவத்தை, தாமரையில் உள்ள சமவள அச்சகத்தில் ஜூன் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்